உதயன்
விலை ரூபா 15.00
www.uthayan.com
சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 06 ஞாயிற்றுக்கிழமை (20.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 206

20 JUN 2010

# மனித உரிமை மீறல், போர்க்குற்றம்; அரசின் நல்லிணக்கக் குழு விசாரிக்காது!

## அதற்கான அதிகாரம் வழங்கப்படவில்லை என்கிறார் அல்ஸ்டன்



நியூயோர்க்,ஜூன் 20

இலங்கை ஜனாதிபதி நியமித்துள்ள நல்லிணக்க ஆணைக்குழு, நாட்டில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் குறித்தோ, போர்க்குற்றங்கள் குறித்தோ விசாரணை நடத்தமாட்டாது. அதற்கான உத்தரவோ, அதிகாரமோ அந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவில்லை.

இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் சட்டவிரோதப் படுகொலைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி பிலிப் அல்ஸ்டன்

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அல்ஸ்டன் இதனைக் கூறியுள்ளார்.

கேள்வி: இலங்கையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஜனாதிபதி விசாரணைக்குழு குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்: முதலில் கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் குறித்த விசாரணைக் குழு, போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்படவில்லை. அதற்கான அதிகாரம் அதற்கு வழங்கப்படவில்லை.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் விளக்கத்தின் பிரகாரம் பயங்கரவாதப் பிரச்சினைக்கான மூலகாரணத்தைக் கண்டறிவதே மேற்படி ஆணைக்குழுவின் பிரதான பணியாக இருக்கும்.

''மனித உரிமைகள்'', ''மனிதாபிமானச் சட்டம்'', ''மீறல்கள்'', ''போர்க்குற்றங்கள்'' என்ற பதங்களோ அவற்றுக்கு நிகரான

(28ஆம் பக்கம் பார்க்க)

## அகாஷி - மஹிந்த நேற்றுச் சந்திப்பு

கொழும்பு,ஜூன்20

இலங்கை வந்துள்ள ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்று முற்பகல் பேச்சு நடத்தினார்.

மீள்குடியமர்ந்த மக்களின் பிரச்சினை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு போன்ற விடயங்கள் தொடர்பாக பேச்சில் ஆராயப்

(28ஆம் பக்கம் பார்க்க)

## பால்மா விலைகள் கிடுகிடு உயர்வு!

கொழும்பு,ஜூன்20

நேற்று நள்ளிரவு முதல் பால்மாவின் விலை அதிகரிக்கவுள்ளதென நுகர்வோர் அதிகார சபை தெரிவித்தது.

அதன் பிரகாரம் 400 கிலோ கிராம் பால்மா பைக்கெட் 19 ரூபாவினாலும், ஒரு கிலோகிராம் பால்மா பைக்கெட் 48 ரூபாவினாலும் அதிகரிக்கவுள்ளது.

# வடக்கு மாவட்டங்களின் உத்தியோகபூர்வ வைபவங்களுக்கு அரச நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தவறாது அழைக்கவும்

## அரச அதிபர்கள் ஐவருக்கு கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் நடைபெறும் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான, அதிகாரபூர்வமான வைபவங்களுக்கு அரசாங்கத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வடமாகாண ஆளுநரையும் வடக்கின் பாதுகாப்புப் படைத் தளபதியையும் அந்தந்த மாவட்ட ஜனாதிபதி செயலணிக் குழுவின் முக்கியஸ்தர்களையும் தவறாது அழைக்கவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி செயலணிக் குழுவின் செயலாளர் எஸ்.பி.திவரட்ண ஐந்து மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களையும் பணித்துள்ளார்.

மேற்சொன்ன பணிப்புரையை பிரதேச செயலர்களுக்குத் தெரியப்படுத்தி அந்தந்த பிரதேசங்களில் இயங்கும் ஐ.நா. முகவர் நிறுவனங்கள்,

(28ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் உலக உணவுத் திட்ட அலுவலகம் மீண்டும் கிளிநொச்சியில் திறக்கப்பட்டது

### பல அமைப்புகள் அங்கிருந்து செயலாற்றும்

கொழும்பு,ஜூன்20

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு திட்ட அலுவலகம் மீண்டும் கிளிநொச்சியில் திறக்கப்பட்டுள்ளது.

இந்த அலுவலகத்தின் ஊடாக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்திதிட்டம், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மற்றும் மனிதாபிமான அலுவல்கள் இணைப்பு நிலையம், ஐ.நா.

(28ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டி நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பம்

### 40போட்டிகள் நடந்தேறின; இன்றும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்20

அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டிகளின் தேசிய மட்டப்போட்டிகள் நேற்று சிறப்பாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின.

வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு போட்டிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

(28ஆம் பக்கம் பார்க்க)



நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் அடகுச்சேவை
- 365 நாள் வங்கிச் சேவை
- நீடித்த வங்கி நேரங்கள்
- அதிகபட்ச பாதுகாப்பும் நம்பகத்தன்மையும்
- முன்னறிவித்தல் இன்றி மீட்கலாம்
- பகுதி பகுதியான மீட்பு வசதி

யாழ்ப்பாணக் கிளை: 35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 4 920 283 - 5
அடகுச்சேவை வவுனியா மற்றும் மட்டக்களப்பிலும் பெற்றுக்கொள்ளலாம்
Nations Trust Bank
Nations Gold Advances

HAYLEYS
ஹேலீஸ் உரம்
புதிய எதிர்பார்ப்பு
ஹேலீஸ் அக்ரோ காட்சியறை
74, பலாலி வீதி,
கோண்டாவில். தொ.பே: 0777284330

விவசாயப் பெருமக்களே...!
உலகத்தரம் வாய்ந்த ஹேலீஸ் உரத்தினைப் பாவித்துப் பயன்பெறுங்கள்.
அனைத்து விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
அமோக விளைச்சலுக்கு நிகரான பெறுமதிமிக்க எதிர்பார்ப்பு வேறெதுவுமில்லை.


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்










தேசிய மட்டத் தமிழ்மொழித்தினப் போட்டிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பேச்சுப் போட்டியில் கலந்துகொண்ட மாணவிகளையும் எழுத்துப்போட்டியில் பங்குபற்றிய மாணவிகளையும் தனி நடனம் போட்டியில் பங்குபற்றிய நீர்கொழும்பு விஜயரத்தினம் ம.வி. மாணவியையும் மேல் வரிசைப் படங்களில் காணலாம்.

நடனப் போட்டியில் பங்குகொண்ட நீர்கொழும்பு விஜயரத்தினம் ம.வி. மாணவிகளையும் வெற்றிபெற்றோருக்கு கல்வி அமைச்சின் மொழி மற்றும் மானிடவியல் பிரிவு அதிகாரி தயாபண்டார, ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் பி.நாகரத்தினம் ஆகியோர் பரிசில்களை வழங்குவதையும் கீழ் வரிசைப் படங்களிலும் காணலாம். *(படங்கள்:ரட்ணம்)*

### அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தான் தீர்வு என்றால்

# தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து குறைந்த பட்ச கோரிக்கையில் இருந்து முன்னேறலாம்

## தியாகிகள் தின நிகழ்வில் வரதர்



யாழ்ப்பாணம்,ஜூன்20

தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் அரசியல் தீர்வுக்காக வெவ்வேறு கோணத்தில் - வித்தியாசமான கொள்கைகளை முன்னெடுத்து வருகின்றன. எனினும் அரசியல் அமைப் பின் 13ஆவது திருத்தச் சட்டம் என்பது குறைந்தபட்ச அடிப்படைக் கோரிக்கையாக இருக்கிறது. எனவே அந்தக் குறைந்தபட்ச எல்லைக் கோட்டில் ஒன்றிணைந்து ஐக்கியத்தை ஏற்படுத்த தமிழ் அரசியல் கட்சிகள் முன்வர வேண்டும். பின்னர் உயர்ந்த பட்சக் கோரிக்கை குறித்து யோசிக்கலாம் - முன்னெடுக்கலாம்.

பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். முக்கியஸ்தரும் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சருமான வரதராஜப்பெருமாள் இவ்வாறு குறிப்பிட்டார்.

பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் ஏற்பாட்டில் 20ஆவது தியாகிகள் தினம் நேற்றுச் சனிக்கிழமை யாழ். ப.நோ.கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் வரதராஜப்பெருமாள் மேலும் உரையாற்றும் போது கூறியவை வருமாறு:-

பத்மநாபாவின் நினைவு தினம் என்பது தமிழர்களுடைய அரசியல் இயக்கங்களில் தியாகிகளின் தினமாகும். அத்தளவிற்கு பல்வேறு கட்சிகளுக்கூடாக வந்தவர் அவர். குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக் கட்சிகளுடன் நெருங்கி உறவுகொண்டு செயற்பட்டவர். தமிழரசுக் கட்சியின் உறுபினராகவும் கூட அவர் இருந்துள்ளார். அவரது 20ஆவது நினைவு தினம் நேற்று மிகச்சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. மண்டபம் கொள்ளாத அளவுக்கு இங்கே மக்கள் கூடியிருக்கின்றனர். கடந்த 18ஆவது நினைவு தினங்களை தலைமறைவாக ஒரு சிறிய அறையில் ஒருசிலருடன் மட்டும் அனுஷ்டிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருந்தது. 19ஆம் ஆண்டு நினைவு தினம் எமது அலுவலகத்தில் பெற்றோருடன் அனுஷ்டிக்க முடிந்தது. 20ஆவது ஆண்டு நிறைவு முன்னேற்றகரமான சூழலில் வெளிப்பாட்டை உணர்த்தி நிற்கிறது. பெற்றோர்கள், பொதுமக்கள், ஏனைய கட்சிப் பிரதிநிதிகள் என இங்கே கூடியிருக்கிறோம்.

**எளிமையாக வாழ்ந்தவர்**

புலிகள் இயக்கத்துக்கும் ஏனைய கட்சிகளுக்கும் ஆரம்பத்தில் உதவிகள் பல புரிந்து அவர்களைப் பாதுகாத்தவர் தோழர் பத்மநாபா. ஒற்றுமையின் சின்னமாகச் செயற்பட்டவர். மிக எளிமையாக வாழ்ந்தவர். பணம் என்பது இயக்கத்தின் தொடக்கத்துக்கு அவசியம் எனக் கருதாத மனிதர் அவர். ஏனையோருக்கு உதாரண புருஷராக வாழ்ந்தவர்.

வவுனியாவிலும் இன்று (நேற்று) தோழர் பத்மநாபாவின் நினைவு தினத்தைக் கொண்டாடுகின்றனர். தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா அதற்காக அங்கு சென்றுள்ளார். 1972களில் மாவையும் தோழர் பத்மநாபாவும் இணைந்து செயற்பட்டதை இலகுவில் மறந்துவிட முடியாது.

குறிப்பிட்ட ஒரு கட்சியைத் தவிர ஏனைய தமிழ்க்கட்சிகளைச் சேர்ந்த அனைவரும் ஓர் அணியில் திரண்டு பேசு வோம் என சம்பந்தன் ஐயா சொல்கிறார். இதனை நாம் ஏற்கவில்லை. யாரையும் ஒதுக்க வேண்டாம் என்பதே எமது நிலைப்பாடாகும். தமிழ்க்கட்சிகளில் இருந்து பலர் தியாகங்கள் செய்துள்ளனர். நாம் விமர்சனங்களுக்கு அப்பால் இனிமேல் நல்லனவற்றைத் தேடுவோம்.

**தியாகங்கள் வீணாகிவிடக்கூடாது**

50,60 வருடங்களாக எமது சமூகம் பல தியாகங்களைச் செய்துள்ளது. அவை வீணாகிப் போய்விடக் கூடாது. சுமார் 10 ஆயிரம் பேர் துரோகிகளாகக் கொல்லப்பட்டுள்ளனர். 30 ஆயிரம் பேர் தியாகிகளாகக் கொல்லப்பட்டுள்ளனர். ஆக 40 ஆயிரம் பேர் தியாகம் செய்துள்ளனர். ஒன்றரை லட்சம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 20 ஆயிரம் சிங்கள மக்களும் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களது மரணங்களும் தியாகங்களாகும். அநியாகமாக பிழையான வழி நடத்தலில் பலர் கொல்லப்பட்டும் தியாகங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர் தேர்தல்காலத்தில் மட்டும் போட்டிபோட்டுக்கொண்டு திட்டித்தீர்த்துக் கொள்ளட்டும். விமர்சனங்கள் செய்யட்டும். ஆனால் பின்னர் சமூக பொறுப்புமிக்கத் தலைவர்களாகச் செயற்படவேண்டும்.

**8 லட்சம் மக்களுக்குப் புனர்வாழ்வு தேவை**

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது அகதிகளாக்கப்பட்டவர்கள் வட பகுதியில் அகதிகளாக்கப்பட்டவர்கள், முஸ்லிம் மக்களில் அகதிகளாக்கப்பட்டவர்கள், இந்தியாவில் உள்ள எமது மக்கள் என அனைத்து மக்களுக்கும் உதவுவதற்கான தேவை உள்ளது. இவ்வாறாக சுமார் 8 லட்சம் மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டியுள்ளது. இதற்கு அரசியல் தலைவர்களிடையே மட்டுமன்றி சமூகத் தலைவர்களுக்கிடையேயும் ஒற்றுமை தேவை.

அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் என்பது குறிப்பிட்ட தமிழ் அரசியல் கட்சிகளின் குறைந்த பட்ச கோரிக்கையாகத் தற்போது இருக்கிறது. எனவே அந்தக் குறைந்த பட்ச எல்லைக் கோடான 13 ஆவது திருத்தச் சட்டத்துடன் ஒன்றிணைந்து பின்னர் மேலதிக உயர்ந்த பட்சக்கோரிக்கையை முன்வைக்க முன்வரவேண்டும்.

குறைந்த பட்சக் கோரிக்கைக்காக நாம் ஒன்றுபட்டு ஐக்கியத்தை ஏற்படுத்தவேண்டும். ஆயுத போராட்டத்தை நம்புபவர்கள், நம்பாதவர்கள் என்ற பிளவு வேண்டாம்.

இலங்கையில் காந்திய வழியில் அகிம்சைப் போராட்டம் தொடர்ச்சியாகப் பல முறை இடம்பெற்றிருந்தால் எமக்குத் தீர்வு கிடைத்திருக்கும். தமிழ்மக்களது நியாயமான கோரிக்கைக்காக இந்திய மக்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் அணி திரண்டிருப்பார்கள். அத்தகைய போராட்டம் கண்களையும் திறந்திருக்கும்.

ஐக்கியம், ஆயுதமில்லாத மக்கள் இயக்க நியாயமான கோரிக்கை - இவைகளை முன்நிறுத்தி தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவே ண்டிது காலத்தின் கட்டாயமாகும் - என்றார்.

இந்த நிகழ்வில் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின் பொதுச் செயலாளர் சிறிதரன், ஈ.பி.டி.பி.யின் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், இலங்கை சமசமாஜக் கட்சியின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் தமிழழகன் உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர். (ஓ-14)


**கணனித் தட்டெழுத்தாளர்கள் தேவை**

*தமிழிலும் ஆங்கிலத்திலும் நன்கு தட்டெழுத்துச் செய்யக்கூடிய கணனித் தட்டெழுத்தாளர்கள் உடன் தேவைப்படுகின்றனர். அத்துடன் ஈமெயில் செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.*

*கீழுள்ள முகவரிக்கு 24.06.2010 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.*

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

முகாமையாளர்,
உதயன் பத்திரிகை நிறுவனம்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



**வீடு வாடகைக்கு**

பலாலி வீதி, திருநெல்வேலி இலங்கை வங்கிக்கு அருகில் 5 அறைகள்,வாகனத் தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. அரசார்பற்ற நிறுவனங்களுக்கும் அரச அலுவலக அதிகாரிகள் தங்குவதற்கும் உகந்தது.
உடன்தொடர்புகொள்ளவும் 0776672034



DHL WORLDWIDE EXPRESS
யாழ் குடாநாட்டிலிருந்து உலக நாடுகளுக்கு DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள!
உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
விரைவு • பாதுகாப்பு • நம்பகத்தன்மை
குறிப்பிட்ட சில நாட்களுக்கு விசேட விலைக்கழிவு
உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)
லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்.வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)
... வீதி, ... வங்கிக்கு அருகாமையில்)
குடாநாட்டில் முகவர்கள் தேவை
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுகடந்த பின் அணைகட்டி என்ன பயன்?

# வருமுன் காக்கும் செயற்பாடுகளே அவசியம்

'கஜினி' என்றொரு படம் சில வருடங்களுக்கு முன்னர் வெளியாகியிருந்தது. அந்தப் படத்தில் வருகின்ற நாயகன் எந்தவொரு விடயமும் உடனேயே மறந்துபோய் விடக்கூடிய 'குறுகியகால ஞாபகசக்தி' என்னும் வியாதியால்படுகின்ற அவஸ்தைகள் சொல்லப்பட்டிருந்தன. இந்த ஞாபக மறதி வியாதி எம்மவர்கள் பலருக்கும் இருக்கின்றதுபோலவே படுகின்றது. அதனால்தான் ஒவ்வொரு விடயத்துக்கும் அரக்கப் பரக்க சில வேலைகளைச் செய்துவிட்டு அந்தக்காரியம் முடிந்ததும் அதனை மறந்துவிடுகின்றோம். பின்னர் மீளவும் இன்னொரு தடவை அதே போன்றதொரு தேவை எழும்போதுதான் பழையபடி அந்தரப்பட்டு அலைகின்றோம். இத்தகைய ஆறுபெருகிய பின் அணைகட்டுகின்ற போக்கு செம்மனச்செல்வியின் கதை தொடக்கம் இன்றளவும் நீள்கின்றது. அந்தப் போக்கின் இன்னொரு வெளிப்பாட்டாலேயே எங்கோ ஓர் மூலையில் சில மாதங்களாக பதுங்கிக் கிடந்த 'டெங்கு' மீண்டும் பூதாகரமான முறையில் புறப்பட்டிருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்னர் குடாநாட்டை டெங்கு நோய் மிகத் தீவிரமாகப் பற்றிப் பிடித்து ஓர் உலுப்பு உலுப்பியிருந்தது. 20இற்கும் மேற்பட்டோர் டெங்கு நோய் காரணமாக உயிர்விட நேர்ந்தது. இன்னும் ஏராளமானோர் அதன் பாதிப்பால் வைத்தியசாலைகளி லும் வீடுகளிலும் வாரக்கணக்கில் சிகிச்சை எடுத்துக் கொண்ட பின்னரே தமது முன்னைய நிலையை அடைய முடிந்தது. அவ்வாறு குடாநாடு முழுவதையும் தன் இஷ்டப்படி ஆட்டுவித்துக்கொண்டிருந்த டெங்கை, பொதுமக்களும் சுகாதாரப்பகுதியினரும், பொது அமைப்புக்களும் ஒன்றிணைந்து மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக் கைகளே அந்த நோயின் பரம்பல் வீரியம் செயலிழந்துபோக காரணமானது. டெங்குவால் பலியானோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் ஊரெங்கும் சிரம தானங்களும், குப்பை கூளங்களை அகற்றி அப்புறப்படுத்தலும் முழுவீச்சோடு முன்னெடுக்கப் பட்டன. குடாநாடு முழுவதும் இதன் காரணமாக

**இளஞ்யன்**

குப்பை கூளங்களற்ற நகரமாக மாறியது. ஒரு மணப்பெண் போல பளிச் சென்றிருந்தன கிராமத்து வீதிகள். பற்றைக் காடுகளை கண்களால் காண்பதே அரிதான விடயமாக மாறியது. சிறியதொரு புல்பூண்டின் அரும்பு தென்பட்டால் கூட ஆத்துப்பதைத்துக்கொண்டு அதைப் பிடுங்கி எறிந்த பின்னே ஓய்ந்தார்கள் யாழ்ப் பாணத்தவர்கள். அந்தளவுக்கு டெங்குவை ஒழிப்பதில் அதீத விழிப்புணர்வை குடாநாட்டு மக்கள் காட்டியிருந்தனர். டெங்கு ஒழிப்புத் தொடர்பான பிரசார நடவடிக்கைகளும், விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் தெருவுக்குத் தெரு நடந்தேறின. இதன் காரணமாக



எவ்வளவு சடுதியாக டெங்குவின் தாக்கம் அதிகரித்ததோ அதே வேகத்தில் அது கட்டுப்படுத்தப் படவும் செய்தது. நாளடைவில் டெங்குவின் தாக்கம் இல்லாமலே போனது.

இங்கே தான் எங்களது மறதிப்புத்தி தன்னுடைய வேலையைக் காட்டத் தொடங்கியது. டெங்குவின் தாக்கம் இல்லாது போனதும் நாங்களும் அதை மெல்ல மெல்ல மறந்துவிட்டோம். டெங்குவை மறந்தால் பரவாயில்லை. ஆனால் டெங்கு நுளம்புகளைக் கட்டுப் படுத்தும் நடவடிக்கைகளையும் அப்படியே கை விட்டு விட்டோம். டெங்கு இருந்த காலத்தில் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தரம் வீட்டுச் சுற்றாடலில் உள்ள புற்களையும் பற்றைகளையும் கழிவுப் பொருள்களையும் தேடித் தேடி அழித்த அதே மக்கள் பின்னர் - டெங்குவின் வீரியம் குறைந்ததும் - வீட்டுக்கு முன்னால் ஆளளவு உயரத்துக்கு பற்றைகள் வளர்ந்த போதும் அதைக் கண்டு கொள்ளவே யில்லை. இனி மேல் டெங்கு குடாநாட்டை எட்டியும் பார்க்காது என்ற அசட்டுத்துணிச்சலும் இதற்கொரு காரணமாக இருக்கலாம். ஆனால் நாங்கள் நினைத்ததுக்கு எதிர்மாறான பதிலையே டெங்கு மீண் டும் ஒருமுறை தந்திருக்கிறது.




டெங்கு நோய் ஒழிப்பதில் யாழ். மக்களுக்கு இருந்த விழிப்புணர்வு மெல்ல மெல்ல மழுங்கும் வரைக்கும் - ஓடு மீன் ஓடி உறு மீன் வரும் அளவுக்கும் வாடியிருந்த கொக்கு போல - கண்ணுக்குத் தெரியாமல் காத்திருந்த டெங்கு வழமை போலவே எம்மவர்கள் அதனை மறந்து போனதும் தன்னுடைய கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிட்டது. இப்போது யாழ். போதனா வைத்தியசாலை மீளவும் டெங்கு நோயாளர்களால் நிரம்பத் தொடங்கிவிட்டது. ஆறு பெருகிய பின் அணைகட்டுகின்ற அதே பழையகதை மீளவும் தூசு தட்டப்பட்டதைப் போல டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள், விழிப்புணர்வுப் பிரசாரங்கள், புகையூட்டல்கள், மருந்து விசிறுதல் என்பன போன்ற டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் இறக்கை கட்டிய வேகத்தில் நிகழ்கின்றன.

டெங்கு நுளம்புகள் தங்கியிருப்பதற்கும் அவை உற்பத்தியாவதற்குரிய தன்மைகள் யாவுமே குவியலாய்க் கிடக்கும் கழிவுப் பொருள்கள், வெற்றுப் போத்தல்கள், இளநீர்க் கோம்பைகள், அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள், பழுதடைந்து ஒதுக்கிவிடப்பட்ட ரயர்கள், போன்றவற்றில் நிறைந்து கிடக்கின்றன. இது நுளம்புகளுக்கு வசதியாகப் போய்விட்டது. அவை தம் பாட்டில் பல்கிப்பெருகி டெங்கு நோயை கண்ணும் கருத்துமாக பரப்பத் தொடங்கிவிட்டன. அண்மைக் காலமாக குடாநாட்டுக்குள் அதிகளவில் வரத் தொடங்கியுள்ள சுற்றுலாப் பயணிகளால் அதிகளவு கழிவுப் பொருள்கள் குடாநாட்டின் வீதிகள் எங்கும் நிறையத் தொடங்கியுள்ளன. இப்போது கோடைகாலம் என்பதால் வெயிலின் கொடுமையில் இருந்து தப்பிக்க பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள், வீதிகளில் வைத்து விற்பனை செய்யப்படும் இளநீரை குலை குலையாக வாங்கி அருந்திவிட்டு, கோம்பைகளை அருகிலேயே போட்டுவிட்டுச் சென்று விடுகின்றார்கள். அதுபோலவே தண்ணீர்ப் போத்தல்கள், சோடாப்போத்தல்கள் என்பவற்றையும் வகைதொகையின்றி வீதி வழியே எறிவதையே இத்தகைய பயணிகள் வாடிக் கையாகக் கொண்டிருக்கிறார்கள். டெங்குவின் பயம் நீங்கியிருந்த காரணத்தால் இவ்வாறு வீதியெங்கும் வாரி இறைக்கப்பட்டிருந்த இளநீர்க் கோம்பைகளையும், வெற்றுப் போத்தல்களையும், ஏனைய குப்பை கூளங்களையும் எவருமே பெரிதாகக் கணக்கெடுக்கவில்லை. இந்த அலட்சியமே இப்போது விஸ்வரூபம் எடுத்திருக்கும் டெங்குவாக மாறியிருக்கிறது. இந்த நிலையில் யாழ். வைத்தியசாலை வட்டாரத்தில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய ஏது நிலைகள் நிறைந்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து அது தொடர்பான இறுக்கமான நடைமுறைகளை அமுல்படுத்த வைத்தியசாலை நிர்வாகம் முடிவெடுத்திருக்கிறது. வைத்தியசாலையில் நிரம்பி [illegible] இளநீர்க் கோம்பைகள், வெற்றுப் போத்தல்கள் என்பவற்றை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடை முறைகள் விரைவில் செயற்பாட்டு வடிவம் பெறவுள் ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்திருக்கிறார். இதன் மூலம் இனி வரும் காலங்களில் நோயாளிகளுக்கு இளநீர், கொதித்தாறிய நீர், என்பவற்றை கொள்கலன்களில் கொண்டு சென்று பருகக் கொடுத்துவிட்டு மீளவும் அக்கொள் கலன்களை வெளியே எடுத்துச் சென்று விட வேண்டும். இதன் மூலம் தேவையற்ற வகையில் குப்பைத் தொட்டியாக மாறியுள்ள வைத்தியசாலைச் சூழலை சுத்தமான முறையில் தொடர்ந்து பேண முடியும். சூழலின் நிலையை உணர்ந்து சரியான தருணத்தில் பொருத்தமான முடிவை எடுத்திருக்கும் வைத்தியசாலை நிர்வாகத்தை பாராட்டியேயாக வேண்டும். ஆனாலும் இந்த நடைமுறைகள் கொஞ்ச நாளைக்கு மட்டுமல்லாது தொடர்ச்சியாகப் பேணப்படுவதன் மூலமே வருங் காலங்களிலும் வைத்தியசாலையை இதே போன்று தூய நிலையில் வைத்திருக்க முடியும். இல்லாவிட்டால் குளிக்கப்போன இடத்தில் சேறு பூசிய கதையாக, நோயைக் குணப்படுத்துவதற்காக வைத்தியசாலைக்கு வருபவர்கள் டெங்கு முதலான கொடிய நோய்களை வலிய வாங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையே தொடரும்.

இதே போல ஏனைய நிறுவகங்களும் எக்காலத்திலும் தொடர்ச்சியாகப் பேணப்படக்கூடிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை செயல் வடிவத்துக்கு கொண்டுவர கவனம் எடுக்கவேண்டும். குறிப்பாக சுகாதாரப் பகுதியினர் டெங்கு நோய் பரவும் காலத்தில்தான் விழித்தெழுந்து சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தல் விடுவதும், டெங்கு நோயைப் பரப்பக் கூடிய வகையில் உள்ள காணிகள், வீடுகள் என்பவற்றுக்கு சிவப்பு வர்ண 'ஸ்ரிக்கரை' ஒட்டுவதும் நடந்து வருகின்றது. இது நல்ல விஷயம்தான். ஆனால் வெறுமனே 'ஸ்ரிக்கர்' ஒட்டுவதோடு நமது பணி முடிந்து விட்டதாகவே பெரும்பாலான சுகாதார உத்தியோகத்தர்கள் எண்ணிக் கொண்டு இருந்து விடுகிறார்கள். குறித்த 'ஸ்ரிக்கர்' ஒட்டப்பட்ட காணிகள் அல்லது வீடுகள் என்பன குறித்த காலப்பகுதிக்குள் சுத்திகரிக்கப் பட்டு விட்டனவா? என்பதைக் கண்காணிக்க அவர்கள் மறந்துவிடுகிறார்கள். பாவம்! அவர்களுக்கும் 'கஜினி' நோய் போலும். ஆனாலும் ஒரு சில சுகாதாரப் பரிசோதகர்கள் சமூக நோக்கோடு 'ஸ்ரிக்கர்' ஒட்டிய பின்னும் தமது சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்காத சிலர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் செய்திருக்கிறார்கள். அவர்களைப் போல ஏனைய சுகாதார உத்தியோகத்தர்களும் தமது சமூகப் பொறுப்பை உணர்ந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். டெங்கு அபாயம் நீங்கிவிட்டது என்பதற்காக வாளாவிருக்கக் கூடாது. இதற்கு பொது மக்களும் தாமாகவே முன் வந்து ஒத்துழைக்க வேண்டும். டெங்கை ஒழிப்பது தனியே சுகாதாரப் பகுதியினரின் வேலைதான் என்று அலட்சியம் காட்டக்கூடாது. ஏனெனில் டெங்குவால் பாதிப்புறுவது பொது மக்கள் தான்.

எனவே இனிமேலும் அவசரச் சமையல் செய்வது போல அந்தந்த நேரத்துக்கு மட்டுமே காரியமாற்றிப் பழகாமல் டெங்கு போன்ற கொடிய நோய்களை ஒழிக்கும் செயற்றிட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து மக்களை காப்பாற்ற அனைவரும் ஒன்றித்துழைக்க முன் வருவோம்.

படங்கள்: நந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அதிக எண்ணிக்கையான புதிய பஸ்கள்

## விரைவில் வழங்கப்படும் என்கிறார் யாழ்.வந்துள்ள பிரதி அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 20

புதிதாக கொள்வனவு செய்யப்படவுள்ள ஆயிரம் பஸ்களில் அதிகமான பஸ்கள் வடபிராந்திய போக்குவரத்துச்சபை டிப்போக்களுக்கு வழங்கப்படுமென போக்குவரத்துத்துறை பிரதி அமைச்சர் எஸ்.திஸநாயக்க உறுதியளித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போக்குவரத்துத்துறை பிரதி அமைச்சர் கோண்டாவில் போக்கு வரத்துச் சபை தலைமைக் காரியாலத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்:-

நான் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினேன். 'எப்படி உங்களுக்கு பஸ் சேவைகள் எல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்றதா' என்று அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் பஸ் சேவைகள் ஒழுங்காக நடைபெறுகின்றன. எனினும் சேவையில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கை தான் மிகக் குறைவு என்றனர்.

எனவே இந்த மக்களின் வேண்டுகோளுக்கிணங்க வட பகுதியில் சேவையில் ஈடுபடக் கூடிய பஸ்களை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

அத்துடன் இங்கு சாரதிப் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் முன்னாள் புலி உறுப்பினர்களான நூறு புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர்களுக்கு புதிதாக அமைக்கப்படவுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட டிப்போக்களில் அவர்களின் கல்வித் தரத்துக்கு ஏற்ப உரிய வேலைகள் பெற்றுக்கொடுக்கப்படும் என்று உறுதியளிக்கின்றேன் - என்றார்.

வட பகுதிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதி அமைச்சர் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள டிப்போக்களை நேற்றுப் பார்வையிட்டார். இன்று காரைநகர், பருத்தித்துறை டிப் போக்களுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். (ஒ-16)

## திறந்த பல்கலையில் விசேட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன்20

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் 3 ஆவது ஆண்டு நிறைவில் திறந்த பல்கலைக்கழகத்தின் விசேட நிகழ்வுகளாக சட்டத்துறைசார் நிகழ்வுகளை எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் யாழ்.பிராந்திய நிலையம் நடத்தவுள்ளது.

இதில் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணிவரை சட்டத்துறை சார்ந்த விசேட கருத்தரங்கும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இலவச சட்ட ஆலோசனை முகாமும் யாழ்.பிரதான வீதியிலுள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளன. (ஒ-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் (B.M.I.C.H) இன்று (20.06.2010) நடைபெறும் பட்டமளிப்பு விழாவில்

**M.A (Public Administration)**

பட்டத்தினைப் பெறும் நிந்தவூர் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்

**திரு.N.T.தவராஜா** அவர்கள்

மென்மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று வாழ்வில் உயர வாழ்த்துகின்றோம்.

K.V.இராசதுரை குடும்பம்,
தர்மசீலன் குடும்பம்,
ஹரிகரன் குடும்பம்,
பேரா மக்கள்: த.ஷபரீசன், ஹ.விபுதன்.

இல.283, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.


## விளையாட்டு விழா

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினரதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினரதும் ஆதரவில் இயங்கும் 'குட்டி சுட்டி' சிறுவர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் இராம கிருஷ்ணா மகாவித்தியாலத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலய அதிபர் எஸ்.வாமதேவன் கலந்து கொள்வார். (ஒ-10)


## வேலைவாய்ப்பு

நீங்கள் 20 - 30 வயதுக்குட்பட்ட துடிப்பான இளைஞர்களா...?
நல்லதொரு வேதனத்தில் வேலைவாய்ப்பை தேடிக்கொண்டு இருக்கின்றீர்களா...?
உங்களிடம் மோட்டார் சைக்கிளிற்கான சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கின்றதா...?

கவலையை விடுங்கள்! நாங்கள் உங்களுக்கான வேலை வாய்ப்பை வழங்குகின்றோம். உறுதிப்படுத்தப்பட்ட கல்விச்சான்றிதழ்கள் மற்றும் ஏனைய சான்றிதழ்களுடன் நேர்முகத் தேர்வுக்காக தங்களை நாம் அழைக்கின்றோம். [விற்பனைப் பிரதிநிதி வேலை செய்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்]

இடம்: The Phone Zone (Pvt) Ltd (Mobitel நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட யாழ்.மாவட்ட விற்பனை முகவர்) No.220, Kasthuriyar Road, Jaffna.

திகதி: 22.06.2010, நேரம்: மு.ப. 10 மணி

தொடர்புகளுக்கு 0714750448 (99714)

## முதலாம் ஆண்டு நினைவு நாள் அழைப்பு

திருமதி தயாநிதி நடேஸ்வரராஜன்



மலர்வு 16.03.1953

உதிர்வு 30.06.2009

நெஞ்சைவிட்டகலாத என் இதயத்தில் மலர்ந்திருக்கும் என் அன்பு மனைவியின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (20.06.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புள்ளம் கொண்ட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

41/6, இலந்தைக்குளம் வீதி,
மாம்பழச்சந்தி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

கு.நடேஸ்வரராஜன் (கணவன்).

(99711)

## பாலஸ்தான அறிவித்தல்

கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய பாலஸ்தாபனம் நாளை (21.06.2010) திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பழைய உபயகாரர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- பரிபாலனசபை.

## அறைகள் வாடகைக்கு

வெள்ளவத்தை, புகையிரத நிலையத்திற்கு அண்மையில் சகல வசதிகளும் அமையப் பெற்ற இடத்திலுள்ள லொட்ஜில் பல தரங்களிலான அறைகள் நாளாந்த மற்றும் மாதாந்த வாடகைக்கு விடப்படும். குறைந்த வாடகையில் நிறைந்த பயனை அடைய நாடுங்கள்.

இல. 8 புகையிரத வீதி, வெள்ளவத்தை
011 2504281

## வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் ஐந்து சந்திக்கு அண்மையில் 507, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள நான்கு அறைகளைக்கொண்ட வசதியான வீடு வாடகைக்குண்டு. வாகனத் தரிப்பிட வசதி உண்டு.

தொ.பே.: 0719134767

## வீடு வாடகைக்குண்டு

186, கஸ்தூரியார் வீதியில் மேல்மாடி வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0776156051

## மயிலிட்டி கண்ணகை அம்மன், முருகன் ஆலயங்களுக்கு வழிபடச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது

மேற்படி இரு ஆலயங்களுக்கும் எதிர்வரும் 25.06.2010 வெள்ளிக்கிழமை அன்று காலை 6 மணிக்கு தெல்லிப்பழை ஊடாகவும், தொண்டைமானாறு ஊடாகவும் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. துவிச்சக்கர வண்டி தவிர்ந்த ஏனைய வாகனங்கள் அனைத்திலும் செல்லலாம். அதை தவிர்ந்த பிரத்தியேக வாகன வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பாள், முருகன் ஆலயத்தினர்.

தொடர்பு: 0772241786, 021 222 2347 (99720)

## வீடு தேவை

மருதனார்மடம் சந்திக்கும், உடுவில் ஆலடிக்குமிடையில் பிரதான வீதியோரமாக, டாக்டர் குடும்பத்திற்கு வீடொன்று வாடகைக்கு அல்லது விலைக்குத் தேவை.

தொ.பே.: 0773715670, 021 321 3068

## வேலையாள் தேவை

யாழ்.நகரில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள பிரபல நிறுவனம் ஒன்றின் மோட்டார், ஓட்டோ வாகனங்களின் உதிரிப்பாகங்களுக்கான வியாபார நிலையம் ஒன்றில் கடமையாற்றுவதற்கு வாகன உதிரிப்பாகங்கள் தொடர்பான அனுபவமுள்ளவர்கள் தேவை. (இரு பாலரும்)

தொடர்பு: 0773715844

## வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அண்மையாக கண்டி வீதியில் மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், காரியாலயங்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு: 0777 200839, 021 320 9271

## திருமண சேவை

துரிதமான-சுலபமான வாழ்க்கைத் துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவுமுறைபற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள்,புதன்,வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு நண்பகலிலோ மூத்த-புகழ்பூத்த- சுயதெரிவுமுறை முன்னோடி- தனி மனித நிறுவுநர்-சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனுடன் தொடர்புகொள்ளுக!

தொலைபேசி: 2360488, 2360694, 4873929

## வேலை ஆள்கள் தேவை

ஆங்கில அறிவுடன் கணக்கு வேலை தெரிந்த (பெண் பிள்ளைகள்),சேவிஸ் வேலை மெக்கானிக் வேலை தெரிந்தவர்கள், பயிலுநர்கள் (ஆண்கள்) தேவை.

தொடர்பு: சந்நிதி முருகன் வேக்சொப் & சேவிஸ்
இல.241, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.: [illegible]

## வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோயில் மகோற்சவத்தை முன்னிட்டு வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிப் பரிசளிப்பு விழா இன்று (20.06.2010) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் மேற்படி கோயில் மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வலி.கிழக்கு அருள்நெறி மன்றம்,
கோப்பாய்.

(ச-56528)

## மரண அறிவித்தல்கள்

### சபாரத்தினதேசிகர் இராஜேந்திரதேசிகர்

(தம்பசிட்டி, பண்டாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்)



பண்டாரி அம்மன் கோயிலடி, தம்பசிட்டியைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினதேசிகர் இராசேந்திர தேசிகர் 19.06.2010 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சபாரத்தினதேசிகர் - அமரர் இராஜேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் கஜேந்தினியின் (வதனா) அன்புக் கணவரும் பாஸ்கரசர்மாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப.4 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டாரி அம்மன் கோயிலடி,
தம்பசிட்டி.
0212263944, 0777111859

தகவல்:
சபாரத்தின தேசிகர்
(தம்பசிட்டி, பண்டாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்).

### கந்தசாமி கேதீஸ்வரன்



கதிர்காம கோயிலடி, வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரான கந்தசாமி கேதீஸ்வரன் நேற்று (19.06.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தசாமி (முன்னாள் குடியேற்ற அதிகாரி) - காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வனும், மு.கம்பர் - பராசக்தி (கச்சாய்) தம்பதிகளின் அன்பு மருமகனும், கலைமதியின் அன்புக் கணவரும், கோஷிகாவின் பாசமிகு தந்தையும், Dr.கமலா ஜெகூ (யாழ்.போதனா வைத்தியசாலை), தவரூபன் (மலேஷியா), கலைஜோதி, ஞானரூபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2010) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வதிரி, கரவெட்டி. (99721)


தகவல்:
க.கந்தசாமி (தந்தை).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்று தீரும் வன்னி மக்களின் இந்த அவலம் நிறைந்த வாழ்வு?

நாலு திசைகளிலும் நாலு தடிகளை நட்டு நடுவில் ஒரு உயரத் தடியை ஊன்றி அதற்கு மேல் ஒரு பிளாஸ்ரிக் தரப்பாள். இந்த நிழலில் அவர்களின் அன்றாட வாழ்வு இப்போது கழிகின்றது. அந்தச் சிறிய கூடாரத்துக்கு கீழ் ஒன்று அல்லது இரண்டு குடும்பங்கள்



குடியிருக்கின்றன. இவற்றைப் பார்க்கும் போது தூர இடங்களுக்கு சுற்றுலா செல்வோர் தம்முடன் எடுத்துச் செல்லும் சிறிய தடிகளையும் கூரை விரிப்புக்களையும் பயன்படுத்தி கூடாரமடித்து பொழுதைக் கழிப்பது போன்ற ஒரு எண்ணமே மனதில் வந்துபோகின்றது. கொட்டும் மழை, கொழுத்தும் வெயில், கும்மிருட்டு என எல்லாக் காலநிலையிலும் இந்தக் கூடாரங்கள் தான் அவர்களுக்குத் தஞ்சம். அந்தக் கூடாரங்களுக்கு அருகில் மேலும் நான்கு சிறிய தடிகள் நடப்பட்டு பழைய உடுப்புகள், பனையோலைகள் என்பவற்றால் மறைப்புச் செய்யப்பட்ட மற்றொரு இடம். அது தான் அவர்களின் மலசலகூடம். கூடாரத்தின் கீழ் வெறும் மணல். அதன் மேல்தான் அவர்கள் படுத்துறங்குகிறார்கள். இவ்வாறு நாடோடிகளைப் போல அவர்களின் வாழ்வு நகர்ந்து கொண்டிருக்கிறது.

## மலை போலத் தேவைகள் கிடைப்பதோ கடுகளவுதான்

நாம் மேலே கூறியவை ஒரு திரைப்படத்தின் கதையல்ல. அவை எம் கண்முன்னே நிஜமாக நிகழ்ந்து கொண்டிருப்பவை. இந்த மக்கள் வேறு யாருமல்லர். அவர்கள் வன்னியில் தமது சொந்த இடங்களில் வாழ்வை மீள ஆரம்பித்திருக்கும் எமது உடன்பிறப்புக்கள் - உறவுகள். அன்றாடம் அவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள், துயரங்கள் சொல்லி மாளாதவை.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் அடைக்கப்பட்டிருந்த இவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறுவதற்குத் திறந்து விடப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டு ஐந்து, ஆறு மாதங்கள் நிறைவடைந்துள்ளன. ஆயினும் அந்த மக்களின் வாழ்வில் எந்தவித முன்னேற்றமும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

நலன்புரி நிலையங்களில் எவ்வாறு வாழ்ந்தார்களோ அதே போன்றே சொந்த இடங்களிலும் அவர்களின் வாழ்வு கழிகின்றது. வசதியான பெரிய வீடுகளில் அனைத்து வசதிகளுடனும் செல்வச் செழிப்புடன் சிறப்புற வாழ்ந்தவர்கள் இந்த வன்னி மக்கள். விவசாயம் அவர்களின் பிரதான பொருளாதாரம். வயல் நிலங்கள் அவர்களது பிரதான சொத்துக்கள். கால் நடைகள், வாகனங்கள் என அவர்களின் சொத்துமதிப்பு பல லட்சங்களுக்கு அப்பாற்பட்டவை. இன்று இவை எதுவுமே அவர்களிடம் இல்லை. எல்லாமே அழிக்கப்பட்டு விட்டன. நட்டாற்றில் விடப்பட்ட ஏதிலிகளாக இப்போது அவர்கள் இருக்கின்றார்கள். குடியிருந்த வீடுகள் அடியோடு அழிக்கப்பட்டும், கூரைகள் சிதைக்கப்பட்டும் கற்குவியல்களாக நிலத்தில் கிடக்கின்றன. இப்படியான நிலையில்தான் அவர்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டிருக் கிறார்கள்.

எந்தவிதமான அடிப்படை - அத்தியாவசிய தேவைகள் எதுவும் நிறைவு செய்யப்படாமல் சிறைக் கைதிகளைப்போல அவர்கள் குடியமர்த்தப் பட்டிருக்கிறார்கள். குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை கொடுப்பதுபோல அவர்களுக்கு இந்த வாழ்வு கொடுக்கப் பட்டிருக்கிறது. இடிந்து சிதைந்த வீடுகள் புனரமைக்கப்படவில்லை. கூடாரங்கள் மட்டும் கொடுக்கப்பட்டு அவற்றில் குடியிருக்க அவர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு இந்த வன்னி மக்களின் அவலங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இழந்துபோன அவர்களின் பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் படுகின்றது என ஆராய்ந்தால் எதுவுமே இல்லை. என்ற பதிலே கிடைகின்றது. மக்களை மீளக் குடியமர்த்திவிட்டோம் என்பதை மட்டும் சர்வதேசத்திற்கு காட்டுவதற்காக இலங்கை அரசு மேற்கொண்ட அவசர நடவடிக்கைதான் இந்த மீள் குடியமர்த்தல். சொந்த மண்ணில் மீண்டும் வந்துவிட்டோம் என்ற மனத்திருப்தி அவர்களுக்கு இருந்தாலும், எந்த வசதியுமில்லாமல் என்ன செய்யப்போகின்றோம் என்ற இனம் புரியாத ஏக்கமும் அவர்கள் மனதில் குடிகொண்டிருக்கிறது.

மறுபுறத்தில் வன்னியில் அனைத்து வசதிகளும் உள்ளன என்பதை வெளியுலகுக்குத் தெரியப்படுத்துவதற்காக இப்போது அங்கு வங்கிக் கிளைகள் அமளியாகத் திறக்கப் படுகின்றன. அதை நாம் வரவேற்கிறோம். மக்களின் அன்றாட வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட இவை அவசியமானவைதான். அத்துடன் அங்கு அரச திணைக்களங்களும் சேவைகளை ஆரம்பிக்கின்றன. அரச திணைக்களங்களுக்கான கட்டடங்களை அமைக்கும் பணிகளும் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன. மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு திருப்தியான சேவைகளை வழங்குவதற்கு இவையும் தேவையானவையே. ஆயினும் மிகமிக அவசியமாகத் தேவைப்படுபவற்றை விட்டுவிட்டு அடுத்தபடியாக உள்ளவற்றை நிறை[illegible] பயன் என்ன? நாம் எதைக் குறிப்பிட விரும்புகிறோம் என்பதை நேரடியாகவே சுட்டிக்காட்டி விடுகின்றோம். மிகமிக அவசியம் எனக் குறிப்பட்டது வன்னி யுத்தின் போது அழிக்கப்பட்ட இந்த மக்களின் சொந்த வீடுகளையும் பொருளாதார கட்டுமானத்தையும் தான்.

பாதுகாப்பற்ற உறைவிடத்துக்குள் அவர்கள் தமது வாழ்க்கையை நகர்த்துவதால் பல்வேறு நெருக்கடிகளையும் அச்ச உணர்வுகளையும் எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது. அண்மையில் விசுவமடு ரெட்பானா கிராமத்தில் இரண்டு இளம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவமும் இவற்றின் காரணமாகவே நிகழ்ந்திருப்பதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் மக்களின் இயல்பு வாழ்வை மேலும் குழப்படையச் செய்யுமே தவிர அவர்களின் சுதந்திரமான - நிம்மதியான வாழ்வுக்கு வழி வகுக்காது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் வன்னியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் அவலங்களை கண்டறிந்திருந்தார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள். அவர்கள் சென்ற இடம் எல்லாம் மக்களால் பல கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. அந்தக் கோரிக்கைகளில் அனைத்து மக்களும் கூட்டாக முன் வைத்தது அழிந்து போன எமது வீடுகளை திருப்பிக் கட்டித் தாருங்கள் என்பதுதான். அதற்காக அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுங்கள் என மீளக் குடியமர்ந்த மக்கள் கண்ணீர் மல்கியவாறு பணிவான வேண்டுகோளை முன்வைத்திருந்தனர். நிம்மதியாக எமது வாழ்வை நகர்த்த முக்கிய தேவை எமது வீடுகள் தான் என அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். இந்த மக்களின் பணிவான வேண்டுகோளை ஏற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் குழு தனது விஜயம் தொடர்பாக நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில் வன்னி மக்களின் அழிந்து போன வீடுகளை அரசாங்கமே அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையே பிரதான இடத்தை வகித்தது. ஆயினும் அதற்குப் பதிலளித்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் சகோதரருமான பசில் ராஜபக்ஷ, வன்னியில் யுத்தால் அழிக்கப்பட்ட வீடுகளை அவர்கள்தான் அமைக்க வேண்டும். அத்தனை வீடுகளையும் நிர்மாணிக்க அரசிடம் நிதியில்லை. ஒரு வீட்டை நிர்மாணிக்க 3 லட்சத்து 25ஆயிரம் ரூபா தேவை. வன்னியில் 1லட்சத்து 60 ஆயிரம் வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அந்தளவு நிதியை அரசால் வழங்க முடியாது. வன்னி மக்கள் உழைப்பாளிகள். தமது உழைப்பின் மூலம் அவர்கள் வீடுகளை நிர்மாணிக்கக் கூடியதாக இருக்கும் என்று கூறிக் கைவிரித்தார். அவரின் இந்தக் கூற்றினால் ஏங்கிப் போய் இருக்கிறார்கள் மீளக்குடியமர்ந்த வன்னி மக்கள்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று வன்னி மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்குகிறது இந்த அரசு.

கடந்த 16ஆம் திகதி வன்னிக்கு விஜயம் செய்த ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்குள்ள மக்களின் நிலை பற்றி கவலை வெளியிட்டிருந்தார்கள். இதுபற்றிக் கூறிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க, [illegible]ந்தோருக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என அரசாங்கம் கூறுவது அப்பட்டமான பொய். அவர்கள் அவல வாழ்வு வாழும்போது அரசு யுத்த வெற்றிக் கொண்டாட்டங் களை நடத்துவது அவர்களை மேலும் காயப் படுத்துவதாகும் - வேதனைப்படுத்துவதாகும் என்று குறிப்பிட்டிருந்தார்.

அது உண்மை தான். வன்னி மக்கள் ஒரு சிறிய கூடாரத்துக்குள் கண்ணீரும் கம்பலையுமாக தமது வாழ்க்கையைக் கழித்துக்கொண்டிருக்கும் வேளையில் அவர்களுக்கு எந்தவிதமான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்காமல் அவர்கள் பட்ட வேதனைகளை பொருட்படுத்தாமல் படையினரின் தியாகங்களே முதன்மையானவை எனக் கூறி அரசு யுத்தவெற்றியில் திளைத்திருப்பது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

யுத்தத்தின் வெற்றிக் களிப்பில் இருந்து இலங்கை அரசு இன்னமும் விடுபடவில்லை. யுத்தம் முடிவுற்று ஓராண்டு கடந்த நிலையில் பெரும் எடுப்பில் நேற்று முன்தினம் கொழும்பு காலி முகத்திடலில் மிகப் பிரமாண்டமான யுத்த வெற்றிவிழாவை அரசு நடத்திமுடித்திருக்கிறது. படைப் பரிவாரங்கள், அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள் புடைசூழ அவர்களின் இராஜமரியாதையை ஏற்றுக்கொண்டிருக்கிறார் ஜனாதிபதி மகிந்தராஜ பக்ஷ. அந்த வெற்றி விழாவில் அவர் ஆற்றிய உரை வன்னி மக்களின் அவல வாழ்க்கைக்கு இப்போதைக்கு விடிவில்லை என்ற சந்தேகத்தை கிளப்பியிருக்கிறது. அவர் தனது உரையில் குறிப்பிட்டது இதுதான். ''வெளிநாடுகளில் இருந்து செயற்படுபவர்கள் பயங்கரவாதத்தைத் தூண்டி வடக்கு கிழக்கு மக்களை மீண்டும் முகாம்களுக்குள் முடக்குவதற்கே முயற்சிக்கின்றனர்'' என்று கூறியிருந்தார் ஜனாதிபதி. அவரின் இந்தக் கூற்று தொடர்ந்தும் தமிழ் மக்கள் முகாம்களுக்குள் முடக்கப்படப் போகிறார் கள் என்பதையே பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியிருக்கிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஜனாதிபதியின் இந்த உரை வன்னியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் மனங்களிலும் விரக்தியை ஏற்படுத்தியிருக்கிறது. தமது வாழ்க்கை தொடர்ந்தும் இவ்வாறுதான் நகரப்போகிறதோ என்ற கேள்வியும் அவர்கள் மனங்களில் எழுந்திருக்கிறது. பனையால் விழுந்தவனை மாடு ஏறிமிதித்தது போன்ற நிலை தான் இப்போது அந்த மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

எனவே வன்னி மக்களின் மனங்களை வெல்ல - அவர்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்ற அரசு செய்ய வேண்டியவை நிறையவே உள்ளன. அதற்கு முதற்படியாக அவர்கள் இழந்த இல்லிடங்களை மீள அமைத்துக் கொடுப் பதே இலங்கை அரசு அவர்களுக்குச் செய்யும் பெரிய புண்ணியமாகும். அவ்வாறு செய்தால் அந்த மக்களின் வாழ்க்கை ஒரு உறுதியான நிலையை அடைவ துடன் அவர்கள் மீண் டும் பழைய நிலைக் குத் திரும்புவதற்கான ஒரு சிறந்த - பலமான அத்திபாரமாக அமையும் என்ப தில் எள்ளள வேனும் சந்தேகமில்லை. இலங்கை அரசு அதனைச் செய்யுமா? நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கிறார் கள் அந்த வன்னி மக்கள்.

இன்று உலக அகதிகள் தினம் நினைவு கூறப்படும் நிலையில் அகதிகள் ஆக்கப் பட்டு அதனால் அல்லல்களையும், சொல் லெணாத் துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவிக்க நேர்ந்தி ருக்கும் எமது உடன் பிறப்புக்களது வாழ்க்கையில் நிம்மதியும் மகிச்சியும் கிட்டுவது எப்போது? ***************

அதிரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்களை உணருங்கள் "ஜெய்குருதேவ்" அன்பில் மலருங்கள்



## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் வாழும் கலைப் பயிற்சி

THE ART OF LIVING

உலகில் 182 நாடுகளுக்கு மேல் வெற்றிகரமாக பயிற்றப்படும் வாழும் கலைப்பயிற்சி மீண்டும் நமது இடத்தில் ஆரம்பமாகிறது.

* சுதர்சனக்கிரியா, மூச்சுப்பயிற்சி, தியானம், எளிய யோகா ஆகியவை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சி
* ஞாபகசக்தி அதிகரிக்க
* நிகழ்காலத்தில் வாழ
* மனதை ஒரு நிலைப்படுத்த
* வேலைகளில் முழுக்கவனம் செலுத்த
* ஆஸ்மா, இரத்தக்கொதிப்பு, நீரிழிவு நோய்களில் இருந்து விடுபட

இதில் கலந்து கொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறிமுக உரை

இடம் :- கம்பன் கோட்டம் நல்லூர்
காலம் :- 21.06.2010 (திங்கட்கிழமை)
நேரம் :- மாலை 5.00 மணிக்கு

பயிற்சி நாள்கள்
22.06.2010 (செவ்வாய்க் கிழமை) முதல் 27.06.2010 (ஞாயிற்றுக்கிழமை) வரை

மேலதிக விவரங்களுக்கு: வாழும்கலை அற நிறுவனம்
T.P : 077 0474757, 077 7740593


# மரண அறிவித்தல்

## திருமதி பறுவதம் மயில்வாகனம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பறுவதம் மயில்வாகனம் 17.06.2010 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - சின்னப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரியும் சண்முகம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பிரபல கட்டட ஒப்பந்தக்காரர் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசையாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஒன்றுவிட்ட சகோதரியும் காலஞ்சென்ற செல்வராணி (வில்வம்), மணிவாசகம் மற்றும் கலைமணி (கனடா), சண்முகநாதன் (நாதன் - கனடா), ஆனந்தி (கனடா), குகானந்தன் (சந்திரன் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற தர்மராஜா மற்றும் தங்கேஸ்வரி, ஜெயாநிதி (கனடா), காலஞ்சென்ற இந்திரா (கனடா) மற்றும் தேவகுமாரன் (கனடா), தயாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் சகிலா, சகிகரன் (கனடா), நகுலேஸ்வரன் (கனடா), சுரேஸ்கரன், றமிலா (கொழும்பு), றமேஸ்கரன், றெஜிலா, பபித்தா (கொழும்பு), நாவேந்தன் (டோகா), நளாயினி, துர்க்காதீபனா, துஸ்யந்தி (கனடா), நிமலன் (கனடா), சுமலதன் (கனடா), டார்வின் (கனடா), ஜேசன் (கனடா), கஜேன் (கனடா), விதுசன் (கனடா), அஸ்வினி (கனடா), தர்சிகா (பிரான்ஸ்), நரேஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் சத்தியா (கனடா), உதயமாலா, கோமளஜோதி, பிரதீபன் (கொழும்பு), சிவகுமார் (கொழும்பு), றிச்சாட்றீகன், பற்றீக் (கனடா), மயூரி (கனடா), ஜெயந்தினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கஜன், சாருகா (கனடா), சாருஜன் (கனடா), தனுஸ்கரன், வர்ணிகா, பிரசின்னா (கொழும்பு), பிரசாயினி (கொழும்பு), ஸ்ரீகவிநிதி, மகாஜனன், ஐங்கணன், பிரசன்னா, அஸ்வின், டிலுக்சி, வேணுஜா, ஜெனிபர் (கனடா), ஜெறோன் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடா, மொன்றியல் நகரில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*36, கனகரத்தினம் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
குடும்பத்தினர்.

(இ/568275)


# German, Swiss மொழி வகுப்புகள்

தமிழ்மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன. (Germany யிலிருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது)
தொடர்புகளுக்கு:- 10,Palaly Road, Jaffna.
T.P: 0771604823

# பசு விற்பனைக்கு உண்டு

9 மாதம் நிரம்பிய ஜேசி இனப் பசுமாடு விற்பனைக்கு உண்டு.
தொலைபேசி இலக்கம்: *077 4592913*
*383, நாவலர் வீதி, நல்லூர்.*

# மணமகள் தேவை

யாழ்.இந்து 25.08.1979 பிறந்த, உயரம் 5' 11'' அத்த நட்சத்திரம் பாவம் 10 செவ்வாய் குற்றமற்ற Computer Engineer (கடமை சிங்கப்பூர் மணமகனுக்கு) Dentel Doctor, Engineer, Charted Accountant, Management மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: *077 3355489*

# தேவை

முகாமைத்துவ பயிற்றுவிப்பாளர்கள் கணக்கியல்/ மனித வளங்கள்/ தகவல் தொழில்நுட்ப அறிவு/ நிர்வாகம், இளநிலை பட்டதாரி ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக மற்றும் கம்பியூட்டர் அறிவு மற்றும் நல்ல சோதித்தறியும் திறமைகளோடு விண்ணப்பிக்கவும். தங்குமிட வசதி உண்டு.
யுனிடெக் பிளேஸ்மென்ட்ஸ், 545, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10,
இ-மெயில் penpal@eureka.lk, Fax : 011 2448211

# வீடு விற்பனைக்கு

யாழ்.மானிப்பாய் வீதியில் கூழாவடிக்கும் புற்கைதின்னி பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் 2 பரப்பில் சகல வசதிகளுடன் Terasor பதித்த வீடு விற்பனைக்குண்டு.
*யாழ்.தொடர்பு : 071 8175807*
*கொழும்பு தொடர்பு: 071 8569962*

# வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம், ஐந்து சந்திக்கு அண்மையில் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாலு அறைகளைக் கொண்ட இரண்டு ஹோல்களைக் கொண்ட வசதியான வீடு வாடகைக்குண்டு. வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு.
தொடர்பு: *077 5127811, 071 9134767*

# தவறிவிட்டது

நேற்று (19.06.2010) காலை யாழ்ப்பாணத்திற்கு வரும் வழியில் வேலைக்கான யூனிபோம் சேட் (நீலம்), டயறி, றேடியோ, சறம் என்பன கைப் பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். தொடர்பு: வீ.தங்கவேலு சிவகுருவீதி, ஏழாலை. தொ.பே.: 077 6120594

# வீடு விற்பனைக்கு

யாழ்.அத்தியடி ஸ்ரான்லி வீதியில் உத்தேசமாக 3½ பரப்புக் காணியும் சுற்று மதிலுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. அண்மையில் திருத்தியமைக்கப்பட்டது.
*தொடர்பு:*
*077 3212227*

# விற்பனைக்கு


தகரக் கடைக் கொட்டில் மற்றும் தள பாடங்களும் விற்பனைக் குண்டு.
தொடர்பு:
*077 3212227*

# வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில், Power House வீதி /Clock Tower வீதி சந்தியிலுள்ள 1½ பரப்பு வெற்றுக் காணியில் வங்கிகள்/ வியாபார ஸ்தலங்களுக்கு ஏற்ற முறையில் கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:
**2590462**
**077 3212845**

BRITISH COUNCIL



## Have you ever thought about training to become an English teacher?

**This summer the British Council is running a four-week intensive CELTA course at its Teaching Centre in Colombo.**

**What is the CELTA?**
The Certificate in Teaching English to Speakers of Other Languages (CELTA) is an internationally recognised EFL qualification. Whether you have trained to teach another subject or have never taught before, the CELTA course will help you to develop the skills you need to teach English as a foreign language.

**What is the course like?**
The course lasts four weeks (Monday-Friday) and includes input in the form of "hands on" workshops, regular teaching practice with detailed feedback, formally assessed assignments and observation of experienced British Council teachers.

The course fee is Rs. 288,750 and we are offering a number of discounted places to potential teachers in the Jaffna area.

**What are the course dates?**
2 August to 27 August 2010
Application deadline 24 June 2010


**How do I apply?**
For an application form and more details e-mail thushara.gamage@britishcouncil.org or download the forms from the BC website http://www.britishcouncil.org/srilankalearning-celta-courses.htm or come to the British Council Teaching Centre, 49 Alfred House Gardens, Colombo.

**www.britishcouncil.org/srilanka**

# ACCA to your future in Finance Accounting

இலங்கை உட்பட 150 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட நிதி, கணக்கியல், முகாமைத்துவம் சார் கற்கைநெறி.

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 20,23,25,26,27.06.2010




மேலதிக விவரங்களுடன் தொடர்புகட்கு:

## Jaffna Technical Institute

Department of Business Studies
இல.46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
e-mail:jtiedu@gmail.com, T.P : 0215670345

ACCA

புதிய மாணவர்களுக்குரிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

# நாட்டிய மயில் 2010



"நாட்டிய மயில்" 2010றக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பதாரிகளுக்கான தகுதிகள்:

- வயது - 20 தொடக்கம் 25 வரை
- விடயம் - பதவர்ணம் தமிழில் அமைதல் வேண்டும்.
- நேரம் - 20 நிமிடங்கள் மட்டும்
- நடனதாரிகள் பக்கவாத்தியம் அல்லது ஒலிநாடாவை உபயோகிக் கலாம்

முக்கிய குறிப்பு :
விண்ணப்பதாரிகள் தங்களுடைய
- மாவட்டம்
- ஆசிரியர் பெயர்,
- நடனத்துறையில் தகைமைகள் ஆகியன குறிப்பிடப்பட வேண்டும்.

இது ஒரு போட்டி நிகழ்ச்சி ஆகையால் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் கட்டாயமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நடன ஆசிரியர்களால் மாணவர்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பதாரிகளிடம் எந்தவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டா

விண்ணப்ப முடிவுத்திகதி - 15.07.2010

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய இடங்கள்:

இல: 07, குளுதாகொட வீதி,
கல்கிசை.
தொலைபேசி இல: 0113 088961
தொலைநகல்: 0112 722125

இல: 29, பழம் றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 2227542


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்குப் பின்னரான அரசியல் சூழ்நிலையில் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளும் சவால்களும்

**போருக்குப் பின்னரான அரசியல் சூழ்நிலையில் நாடு எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்றின்போது பேராதனைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சுமணசிறி லியனகே முன்வைத்த கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.**

இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளை 2009 மே மாதம் நடுப்பகுதியில் தீர்க்கமான வகையில் தோற்கடித்துள்ளனர். இந் நிகழ்வானது உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்ப்பற்ற அமைப்புக்கள் உட்பட முரண்பாட்டுத் தீர்வு தொடர்பான வல்லுனர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. மேற்கத்தைய நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படுவதை தாமதப்படுத்தும் நோக்கில் மனிதாபிமானப் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொண்டாலும், இலங்கை அரசாங்கத்தின் இராணுவ வெற்றிகளை நோக்கிய பயணத்தைத் தடுத்து நிறுத்த அவைகளால் இயலாமல் போய் விட்டது.

இராணுவ வெற்றி என்பது பாரிய அழிவுகளைக் கொண்டது. அந்த வகையில் அரசின் இராணுவ வெற்றியானது சுமார் 25,000 உயிர்களை அழித்தொழித்துள்ளது. 4 ஆம் கட்ட ஈழ யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட 2009 மே மாதம் நடுப்பகுதி வரையிலான கால கட்டத்தில் சுமார் 6000 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இயல்பாக இத்தகைய நவீன யுத்த நடைமுறைகளில் (3 ஆவது வகையான யுத்தங்கள்) ஆயுதம் ஏந்திப் போராடுபவர்களிலும் பார்க்க அதி கூடுதலாக சாதாரண மக்கள் கொல்லப்படுவது வழமையான ஒன்றாகும். இந்த எண்ணிக்கைகள் 4ஆம் கட்ட ஈழ யுத்தத்தின் நேரடி விளைவான அழிவுகளை எடுத்துக் காட்டுகின்றன.

ஆயுத முரண்பாடுகள் பல வழிகளில் முடிவு பெறுகின்றன. இலங்கையின் போரில் போரிடும் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் காரணமாக பல தடவைகள் தற்காலிகப் போர் நிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த அரசாங்கங்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ சக்தியை பலவீனப்படுத்துவதன் மூலம் அவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவருவதற்கான அழுத்தங்களை ஏற்படுத்தும் நோக்கில் யுத்தத்தைப் பயன்படுத்தின. முன்னைய அரசாங் கங்களுக்கும் தற்போதைய அரசாங்கத் திற்கும் இடையில் காணப்படும் வேறு பாடுகள் என்னவென்றால், இன்றைய அரசு விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்துவதை விட முழுமையாக தோற்கடிப்பதிலேயே கவனம் செலுத்தியதோடு அந்த உபாயத்தை சாதகமாக நிறைவேற்றியுமுள்ளது.

தற்போதைய நிலைமையை எப்படி நிர்ணயம் செய்து விவரிப்பது? நான் அதை யுத்தத்திற்கு பிந்திய முரண்பாடுள்ள நிலைமை என்று அழைக்கின்றேன். யுத்தம் நிச்சயமாக முடிவுக்கு வந்துள்ளது என நம்ப முடியும். தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைத்துவம் கொன்றொழிக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் அணிதிரள்வதற்கோ அல்லது புதியதொரு ஆயுதக்குழு உருவாகுவதற்கோ ஏதுவான சாத்தியக் கூறுகள் உடனடியாக ஏற்படப் போவதில்லை. எனவே தற்போதைய நிலைமையானது யுத்தத்திற்குப் பிந்திய காலம் என்பதில் (Post War) சந்தேகமில்லை. இந்நிலைமையானது தேசிய முரண்பாடு முடிவுற்றது எனப் பொருள்படுமா? இல்லை என்பது தான் எனது விடை.

முரண்பாட்டிற்குட்பட்டுள்ள பிரச்சினைகள் திருப்திகரமான வகையில் தீர்மானிக்கப்படவில்லையெனில், ஆயுதக் குழுக்கள் மீண்டும் தோன்றுவதற்கும், ஆயுத முரண்பாடுகள் மீண்டும் ஏற்படுவதற்கான அபாயங்கள் நிலவுகின்றன. யுத்தம் முடிவுற்றாலும் அதற்கேதுவாக அமைந்த அரசியல் முரண்பாடுகளும் தொடர்கின்றதோடு எதிர்காலத்தில் முரண்பாடு வலுப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

போருக்குப் பிந்திய முரண்பாட்டு நிலைமை பற்றிய தொடர்புகள், அடிப்படையில் மூன்று வகையினதாகும். இவற்றை உடனடியாக (180 நாள்களுக்கு மேற்படாத) குறுகிய கால (6 மாதத் திற்கும் 12 மாதத்திற்கும் இடைப் பட்டது) மற்றும் இடைக்கால (6 மாதத் திற்கும் 18 மாதத்திற்கும் இடைப்பட்ட) என மூன்று வகைப்படுத்தலாம்.

### உடனடிப் பொறுப்புக்கள்

யுத்தத்திற்குப் பிந்திய நிலைமையின் உடனடிப் பொறுப்பாக, புலம்பெயர்ந்தவர்கள் தங்கியிருக்கும் முகாம்களில் போதிய உணவு, குடியிருப்பு வசதிகள், உடை, மருத்துவ வசதிகள், பாடசாலை செல்லும் வயதுடைய சிறுவர்களுக்கு கல்வி கற்கும் வாய்ப்பு போன்றவற்றை வழங்குவதன் மூலம் இம்முகாம்களை சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தராதரத்திற்கு அமைய பராமரித்தல் வேண்டும். பாதுகாப்பு விடயங்களில் அரசாங்கம் வழமையாகக் கவலை கொள்வதால் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களை இணங்கண்டு முகாம்களில் வேறுபடுத்தும் நடைமுறை தேவையானதாக அமையலாம். எவ்வாறெனினும் இந்த நடைமுறைகள் காலத்தை நீடிக்காமல் கூடிய விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். புலம்பெயர்ந்தவர்கள் தங்கியிருக்கும் முகாம்களில் நிலவும் சுகாதார, குடிதண்ணீர், மலசலகூட வசதிகள் திருப்திகரமானதாக இல்லாதிருக்கும் நிலைமை மிகவும் முக்கியத்துவம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

புலம் பெயர்ந்தவர்கள் தங்கியிருக்கும் முகாம்களில் காணப்படும் மரபு ரீதியான முகாமைத்துவ நடைமுறைகள் மூலம் நிவாரணம் வழங்கும் நடைமுறையானது புலம் பெயர்ந்தவர்கள் மத்தியில் வெளியில் தங்கியிருக்கும் - மற்றவர்களில் தங்கியிருக்கும் மனநிலையை உருவாக்குகின்றது. எனவே புலம் பெயர்ந்தவர்களை முடிந்தளவு வலுப்படுத்தவதன் மூலம் இவர்கள் மற்றவர்களில் தங்கியிருக்கும் மனநிலையை இல்லாமற் செய்வது மிகவும் முக்கியமானதாகும். இதற்கு புலம்பெயர்ந்தவர்களைக் கொண்ட அமைப்புக்களை (முகாம் நல விருத்திக் குழு) ஏற்படுத்தி அவர்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான பொறுப்புக்களை அவர்களே நடைமுறைப்படுத்துவதன் மூலம் வெளிப்புற அமைப்புக்களின் அளவுக்கதிகமான ஈடுபாடுகளினால் ஏற்படுத்தப்படும் இந்தத் தங்கியிருக்கும் மன நிலையை படிப்படியாகக் குறைக்க முடியும். இந்த முகாம் சேம நலக் குழுவானது முகாம்களின் தேவைகள் தொடர்பாக முன்னுரிமையின் அடிப்படையில் தீர்மானித்துச் செயற்படுவதன் மூலம் அவர்களின் பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக் கொள்ளும் பொறுப்பை அவர்களே ஏற்று செயற்பட முடியும். உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் நிவாரணப் பொருள்களையும் சேவைகளையும் வழங்கும்போது அவை தொடர்பாகத் தீர்மானித்து செயற்படும் பொறுப்பு புலம்பெயர்ந்தவர்களுடையதாக அமைதல் வேண்டும்.

சில முகாம்கள் முகாமைப்படுத்த முடியாதளவிற்கு விசாலமானதாக (Manik Farm) அமைக்கப்பட்டுள்ளன. எனவே முகாமைப்படுத்தக் கூடிய அலகுகளாகப் பிரித்து முகாமைப்படுத்துவது பற்றி அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

### மீள் குடியேற்றமும் புனர்வாழ்வுப் பொறுப்புகளும்

புலம்பெயர்ந்தவர்கள் தாங்கள் குடியிருந்த இருப்பிடங்களுக்கு திரும்பிச் செல்லும் பூரண உரிமை உடையவராவர். எனவே அவர்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கும் காலம் குறைக்கப்படுதல் வேண்டும். பல கிராமங்களில் நிலக் கண்ணிவெடிகளின் அபாயம் நிலவுவதால் அக்கிராமங்களில் நிலக் கண்ணி வெடிகள் அகற்றும் பணிக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். நிலக் கண்ணிவெடிகள் அற்ற கிராமங்கள் இருப்பின் அவை இனங்காணப்பட்டு அக்கிராமங்களில் இருந்து புலம்பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். மீள் குடியேற்றம் தொடர்பாக கால வரையறையுடன் கூய வரைபடம் ஒன்றைத் தயார் செய்வது உதவியாக அமையும்.

யுத்தத்தின் விளைவாக புலம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த வீடுகள் சிதைவுற்றிருக்குமேயானால் அவர்களின் வீடுகளை மீண்டும் கட்டிக் கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். வீடுகளை மீள் நிர்மாணம் செய்யும் போது பாடசாலைகள், மருத்துவ கூடங்கள் போன்ற பொது சேவைகள் வழங்கும் கட்டடங்கள் மீண்டும் கட்டியெழுப்பும் போது வீடுகளின் உரிமையாளர்களினதும் பொது சேவைகளின் நுகர்வோர்களினதும் பங்கு பற்றுதலையும் கண்காணிப்பையும் இயன்றளவு உறுதி செய்தல் வேண்டும். மகிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புலம் பெயர்ந்தவர்கள் மீள்குடியேற்றப்படும் பொழுது அவர்களின் வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உதவியாக குடும்பத்திற்கு தலா இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும்.

மக்கள் மீள் குடியேற்றப்படும் நடைமுறைக்கு சமாந்தரமாக முறைமையான முறைசாரா அரசியல் கலாசார நிறுவகங்கள் கட்டியெழுப்பப்படுவதும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இவ்விடயம் தொடர்பாக உள்ளூராட்சி மன்றங்கள் மிக முக்கியமான நிறுவகமாகக் கணிக்கப்படல் வேண்டும். ஏனெனில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கிராம வாழ்க்கையைக் கட்டியெழுப்புவது தொடர்பான பல விடயங்களில் சட்ட ரீதியான அதிகாரங்கள் இருக்கின்றன. இதற்கு மேலதிகமாக கிராமிய மீள் இணக்கச் செயற்குழு (நீதித்துறை அமைச்சு), கலாசார மற்றும் விளையாட்டுக் கழகங்கள், நூலகங்கள் போன்றவை ஏற்படுத்தப்படுவது ஊக்குவிக்கப்படலாம்.

உள்ளூராட்சி மன்றங்கள் வலுப்படுத்தப்படுவது அடிமட்ட ஜனநாயக வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். சர்வதேச நிறுவனங்கள் தேசிய மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசாங்கம் ஆகியவற்றுக்கூடாக நிதி வழங்கும் வழமையான நிலைமைக்குப் பதிலாக கிராமிய மட்ட அபிவிருத்திகளுக்கு நிதி வழங்கும் பொழுது இந்த உள்ளூராட்சி மன்றங்கள் மூலமாக நிதி வழங்குதல் வேண்டும்.

கிடைக்கின்ற புள்ளி விவரங்களின்படி, இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட வடமாகாணத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் அதிகம் எனத் தெரிய வருகின்றது. வறுமை என்பது மக்களிடம் உடைமைகள் இல்லாது போதல் என்று கொள்ளப்படும். சந்தைகள் செயலிழக்கப்படும் பொழுதும்,பொதுச்சேவைகள் மட்டுப்படுத்தப்படும்பொழுதும் உடைமைகள் இல்லாது போகும் நிலை ஏற்படுகின்றது.எனவே மீள் குடியேற்ற காலகட்டத்தில் வறுமை தொடர்பான இந்தக் காரணிக்கு கூடிய முக்கியத்துவம் செலுத்தப்படல் வேண்டும்.

உடனடி மற்றும் இடைக்காலப் பொறுப்புக்கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட வேண்டிய மற்றொரு முக்கிய விடயம், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்திருந்த போராளிகளைப் புனர்வாழ்விற்கு உட்படுத்துவதாகும். அவர்கள் பெறுமதியுள்ள மற்றும் பயனுள்ள பிரஜைகளாக தங்களுடைய வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்ளத் தேவையான புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### உள்வாங்கப்பட்ட இலங்கையை கட்டியெழுப்புவதற்கான பொறுப்புகள்

காலணித்துவத்திற்குப் பிந்திய இலங்கையின் அரசு கட்டியெழுப்பப்பட்டு நிர்வகிக்கப்பட்ட தன்மையின் நேரடி விளைவுதான் இந்த ஆயுத முரண்பாடு. பல சட்ட மூலகங்களின் மூலமும், சர்வாதிகாரம் கொண்ட இரண்டு யாப்புகளின் மூலமும்,தமிழர்களினதும், ஏனைய தேசியங்களினதும் மற்றும் இனத்துவக் குழுமங்களினதும் பங்கேற்றல் மட்டுப்படுத்தப்பட்டன. இந்த ஓரங்கட்டல் மற்றும் பாகுபாடுகளின் விளைவாக சுதந்திரம் கிடைத்தது முதல் இந்த காலணித்துவத்திற்குப் பிந்திய இலங்கை அரசானது பல எதிர்ப்புக்களை எதிர்நோக்கி வந்துள்ளது. எனவே இந்த நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டு அதிகாரப் பகிர்வுக் கொள்கைகள் அடிப்படையாக அமையும் வகையில் இலங்கை அரச கட்டமைப்பை மறுசீரமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இராணுவ ரீதியான வெற்றியென்பது, தமிழர்கள் உள்வாங்கப்பட்ட இனமாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பலவீனப்படுத்தியுள்ளது எனக் கருதலாம். மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தனி நாட்டை இலக்காகக் கொண்டு நடத்திய போராட்டமானது, தமிழர்கள் புறந்தள்ளப்படுவதை விதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. (Formalization of exclusion) என்னுடைய அபிப்பிராயப்படி, தமிழர்கள் இலங்கையின் அரச கட்டுமானத்தை மீள் நிர்ணயம் செய்வதற்காக இறங்கியிருக்க வேண்டும். அரச யாப்பிற்கான 13 ஆவது திருத்தம் போதுமானதல்ல என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். இது பல குறைபாடுகளையும் முரண்பாடுகளையும் கொண்டதாக அமைந்துள்ளது. இத்திருத்தமானது, முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வும் இல்லை. இருப்பினும் மாகாண அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொண்ட பல விடயங்கள் தொடர்பாக வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை இந்தத் திருத்தச்சட்டம் வழங்குகின்றது. எனவே இதன் சட்ட ரீதியான தன்மை கேள்விக்குட்படுத்தக் கூடிய ஒன்றல்ல. எனவே வட மாகாணசபை அமைக்கப்படுவது இலங்கை அரசின் உள்வாங்கலையும் அதிகரிப்பதற்கு ஒரு நடைமுறையாகக் கருத முடியும்.



பேராசிரியர் சுமணசிறி லியனகே,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# IELTS இன்றி UK இல் உயர் கல்வி

VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் இலவசம்

O/L உடன் குறைந்த கட்டணத்தில்!

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk
(A Subsidiary of Flex Graphic)

FLEX Graphic



STUDY MBA IN THE UK
From Rs. 1.3 Milion

UNDERGRADUATE AND POSTGRADUATE COURSES
MBA,Bsc,BA,HND,PgADMS
Business Administration
Hospitality & Tourism Management
Finance & Accounting
Health & Social Care Management
Computing & IT Management

ADMISSION OPEN For August/October Intake 2010

SPOT INTERVIEWS & ADMISSIONS ON 24/06/2010 AT JAFFNA CITY HOTEL FROM 9am to 4pm

networth CONSULTANTS
No. 298, R.A.De Mel Mawatha, Colombo 03
Ph 011 2573393 M 077 2313955
E mail : colombo@networthedu.com

Please get your appointments now.
Call 0715 43 2000

EThames Graduate School
www.etgs.org.lk

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 04 07 1937

மறைவு 21 05 2010



திருமதி வைத்திலிங்கம் அன்னப்பிள்ளை

திதி:20.06.2010

பாச ஊற்றாய் பண்பின் உறைவிடமாய்
குடும்பக் குலவிளக்காய் அன்புக்கு இலக்கணமாய்
எமை ஆதரித்து அரவணைத்து வாழ
வழிகாட்டிய அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனை
வேண்டி நிற்கின்றோம்.

நி.முகவரி: புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.
த.முகவரி: இல.230, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

[99595]

என்றும் நினைவுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## நினைவலைகள்

2ஆம் ஆண்டு

மண்ணில் 29 03 1922

விண்ணில் 20 06 2008



யோன் ஞானமுத்து

21ஆம் ஆண்டு

மண்ணில் 17 06 1969

விண்ணில் 21 07 1989

ஞானமுத்து பிலிப்குமார்

"படைகளின் ஆண்டவரே உமது உறைவிடம்
எத்துணை இனிமையானது" (தி.பா.4:1)

இவர்களது ஆன்மாக்கள் விண்ணுலகில் என்றும்
இன்புற்றிருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சேச் லேன்,
மல்லாகம்.

[99589]

இவர்களது குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

நாவற்குழி A9 வீதியில் அருணா பேக்கரிக்கு அருகாமையில் 500 மீற்றர் தூரத்தில் அகலமான பாதையில் அமைந்துள்ள 3 பரப்புக் காணியும், முற்றுப் பெறாத வீடும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: சி. கந்தையா
நாமகள்லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

077 1751441
011 3150336

## வகுப்புக்கள்

* ஆண்டு 6முதல் O/L வரையான வகுப்புக்களுக்கு கணிதபாடம் வீடுவந்து கற்பித்துக் கொடுக்கப்படும்.
* வீட்டில் கணனி(Computer)வைத்திருப்பவர்களுக்கு வீடு வந்து கணனிக் கல்வி கற்பிக்கப்படும். Computer Basic, M.S.Office, Photoshop, Corel Draw

தொடர்பு - 0775511976

## விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணத்தில் Hotel/ Restaurant/ Cool Bar இற்குப் பாவிக்கக் கூடிய கதிரை, மேசைகள்(Damro Design),Freezer,Digital Scale மிகக் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம்.

தொடர்புக்கு -0771629806

## வீடு வாடகைக்குத் தேவை

ஆசிரியர் குடும்பம் ஒன்றிற்கு யாழ். நகர், திருநெல்வேலி, கச்சேரியடி, நல்லூர், நாச்சிமார் கோயிலடி பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு -0773664420

## THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களில் சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில மற்றும் இலக்கணம்.

By. ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி,
426[302] K.K.S.வீதி யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை

Tel - 0776751649
THE ROYAL IS THE BEST

## வீடு,காணி விற்பனைக்கு

பருத்தித்துறை அல்வாய் முத்து மாரியம்மன் ஆலயத்திற்கு அருகில் தெற்கு வீதியில் அமைந்துள்ள (4 அறை, 2 ஹோல், குசினி) சகல வசதிகளுடன் 2 பரப்பில் அமைந்துள்ள வீடும் சற்று அருகில் 100 பனைகளுடன் கூடிய 5½ பரப்புக்காணியும் Sri Lanka பள்ளிக்கூடத்திற்கு அருகில் 4 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:
011 2552487, 077 492771,
021 2263684

## புறொயிலர் விற்பனைக்கு

உடன் சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் கிலோ 480/=.

குமரன் பாம்,
229, பிறவுண் வீதி,(நரியன் குண்டுக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (புதன், சனி, ஞாயிறு மட்டும்).

## மணமகள் தேவை

1977ஆம் ஆண்டு பிறந்த றோ.க.மதத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தரான மணமகனுக்கு சிவந்த அழகிய மணமகள் எதிர்பார்க்கப்படுகிறது.
(சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது).
தொடர்பு: 0776341226

## அபாயகரமான நிலையில் கழிவுநீர் வடிகால்

யாழ்ப்பாணம்,ஜூன்20

யாழ்.குருநகர் அண்ணா சிலையடிப் பகுதியில் உள்ள கழிவுநீர் வடிகாலின் மேல்மூடி ஒன்று முற்றாக உடைந்து அபாயகரமான நிலையில் காணப்படுகின்றது.

இதனால் இப்பகுதியில் இரவுநேரங்களில் பயணிப்போர் பெரும் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் பலமுறை முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும் இரண்டு மாதங்களாக எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ-23)

## இன்றைய உதைபந்தாட்டப் போட்டிகள்

வலி.வடக்கு,ஜூன் 20

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி , யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய மைதானங்களில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும்போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* மன்னார் நானாட்டான் ம.வி எதிர் கிளிநொச்சி பூநகரிம.வி
* யாழ்ப்பாணம் மாதகல் சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை எதிர் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.
* மன்னார் புனித வளனார் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை எதிர் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடம்பெற்ற பாடசாலை.
* மன்னார் எழுந்தூர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை எதிர் வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயம்.
* முல்லைத்தீவு மாவட்டத்தில் 2ஆம் இடம்வென்ற பாடசாலை எதிர் கர வெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி.
* கிளிநொச்சி சிரவில் இந்து மகா வித்தியாலயம் எதிர் மானிப்பாய் மகளிர் கல்லூரி. (50-86)

## வெளிநாடு செல்ல வேண்டுமா?

வேலை,கல்வி அல்லது குடியேறல் விஸாக்கள்

AUSTRALIA, UK, NEW ZEALAND

Our Services
• Skilled Migration • Business Visas
• Student Visas • Visa Cancelations

Live Interviews with Australian Immigration Lawyers

Cyber Mega (Pvt) Ltd.
502-1/1 Galle Road, Colombo 6.

CALL 2507500
0777-812281

FLEX Graphic

## ALPHA INDUSTRES (PVT) LIMITED

Alpha

49/16, Iceland Buillding, Galle Road.
Colombo - 03, Srilanka.

இலங்கையின் முதற்தர தொழிற்சாலை

### வேலை வாய்ப்பு

" எங்கள் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு அபூர்வ சந்தர்ப்பம் "

கி.பி. 1963 தொடக்கம் பாதுகாப்பான இரும்பு பெட்டகம், அலுவலகத் தளபாடங்கள், மரத்தளபாடங்கள் உற்பத்தியில் முன்னிடத்தில் இருக்கும் எங்கள் ஸ்தாபனம் ISO 9001 - 2008 தர நிர்ணயத்தில் முதலிடம் வகிக்கிறது. எமது உற்பத்திகள் ஏற்றுமதித்தரத்தில் தயாரிக்கப்படுகிறது. அதற்காக எங்கள் தொழிற்சாலைக்கு ஆள்கள் தேவைப்படுகிறது.

01. கவர்ச்சிகரமான சம்பளம்
02. உற்பத்திக்கான போனஸ்
03. விடுமுறை நாள்களிலும் வேலை செய்யும் வசதி
04. மதியபோசன கொடுப்பனவு
05. ஊழியரின் பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்கள்
06. காலை உணவு
07. வைத்திய செலவு இலவசம்
08. அலுவலக ஆடைகள் இலவசம்
09. தங்குமிட வசதி இலவசம்
10. விளையாட்டுத்துறை வசதிகள்

உங்களுடைய முயற்சியை வளர்ப்பதற்கு பயிற்சி வழங்கப்படும். விளையாட்டு, நடனம், பாட்டு, நடிப்பு ஆகிய துறைசார்ந்த உதவிகள் வழங்கப்படும்.

நேர்முகப் பரீட்சை 22.06.2010 ஆம் திகதி 9 மணி முதல் 4 மணி வரை உங்கள் சுயவிவரத்துடன் நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:
Alpha Sales Outlet & Ware House
249,Navalar Road, Jaffna.
Tele.: 021 222 1533,
mob.: 0777866653.



## STUDY & WORK IN UK

SPOT ADMISSION

AUG. & SEPT. 2010 INTAKE

யாழ் மண்ணில் CBC

Walk in Interview....for banff and buchan college

UK Highly Trusted - "A - Rated" Government & Private Collegeகளில் உயர்கல்வியை தொடரும் சந்தர்ப்பம் உங்கள் காலடிக்கு கொண்டுவருகிறது Colombo Business College.

13 வருடங்களுக்கு மேல் தலைநகர் கொழும்பில் இயங்கி வரும் CBC முதன் முறையாக யாழ் மாணவர் நலன் கருதி அரச மற்றும் தனியார் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் College போன்றவற்றிற்கான மாணவர்களை சேர்ப்பதற்கான நேர்முக தெரிவினை நடாத்துகிறது.

Member of UCAS

FINANCIAL SPONSORSHIP

Minimum Qualification - G.C.E (O/L)
ஆகக்குறைந்த தகைமை - க.பொ.த (சா/த)

எதிர்பாராத புதிய அனுபவமும் அறிவாய்ப்பும் STUDY + WORK OFFER

200க்கும் அதிகமான பாடநெறிகள் உங்கள் விருப்பம்போல் பாடநெறிகளை தெரிவுசெய்யலாம். இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

யாழ்ப்பாணத்தில்.. Knowledge Universe, No: 75, Temple Road, Jaffna என்ற இடத்தில் இம்மாதம் 26. 27ம் திகதிகளில் August & Sept.'2010 Intakeக்குக்கான நேர்முகப்பரீட்சை இடம்பெறும்

நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்க விரும்புவோர் 0714938848 / 0714550055 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு SMS செய்து அல்லது Call செய்து உடன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

SAVE TIME ! & SAVE MONEY !

தலைநகரில்...

Approved By Foreign Colleges & Universities

PROFESSIONAL OVERSEAS EDUCATIONAL CONSULTANTS

## COLOMBO BUSINESS COLLEGE

379-1/5 (1st Floor) Galle Road, Wellawatte, Colombo-06
Tel: 0114-518580, 011-2362052 FAX:0114-519130
E-mail: colbuco@yahoo.co.in Web site: cbceducation.com
(Opposite to Delmon Hospital & Nations Trust Bank)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழை ஒரு செம்மொழி என்பது ஏன்? அதற்கான பின்னணிகளும் காரணங்களும்

**உலகத் தமிழ் செம்மொழி மாநாடு எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை தமிழ்நாடு - கோவையில் இடம்பெறவுள்ளது.**

தமிழ் ஒரு செம்மொழி என்பதை அறிஞர்கள் அறிந்திருந்தனர். பல பிறநாட்டு அறிஞர்களும் இதனை அறிந்திருந்தனர். எனினும் அரபிக், ஹீப்ரு போன்ற மொழிகள் செம்மொழிகள் என ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியபோது தமிழ் மொழியும் ஒரு செம்மொழி என ஐ.நா. சபையைக் கூறவைப்பதற்கு நமக்கு எவரும் இருக்கவில்லை. இந்தியாவிலேயே அதனைச் செயற்படுத்துதற்கு எவரும் முன்வரவில்லை. 1887இல் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் தமிழ் ஒரு செம்மொழி எனப் பிரகடனப் படுத்த முயற்சிகள் மேற்கொண்ட போதும் எதுவும் நடக்கவில்லை. ஒரு நூற்றாண்டுக்குப் பின்னரே இந்திய அரசு தமிழ் ஒரு செம்மொழி எனப் பிரகடனம் செய்தது. இந்நிலையில் செம்மொழி என்றால் என்ன என்பது பற்றிச் சாதாரண மக்களுக்குப் பெரிதும் விளக்கமில்லை. செம்மொழி மாநாட்டினூடாக இது பற்றிய விளக்கம் ஏற்பட வாய்ப்புண்டு.


மேலும், இச்செம்மொழி மாநாட்டிலே பல பிறநாட்டு அறிஞர்கள் பங்குபற்றவுள்ளனர். இவர்களுடைய துணையுடன் தமிழைச் செம்மொழியாக ஐ.நா. சபை பிரகடனஞ் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வாய்ப்புண்டு. தமிழியல் ஆய்வு இன்று நேற்றுத் தொடக்கம் நடப்பதொன்றன்று. அது பல நூற்றாண்டுகளாக நடைபெறுகிறது. அதனை முன்னெடுப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும்பொழுது புலமையாளர்கள் அவ்வாய்ப்பினைப் பயன்படுத்தவேண்டிய கடப்பாட்டிலிருக்கிறார்கள். அன்னப்பறவைபோல நல்லவற்றைப் பெற்று நம்முடைய மொழியாய்வுகளை முன்னெடுக்க வேண்டும். இந்நிலையில் செம்மொழி என்றால் என்ன என்பது பற்றிய ஒரு சிறு விளக்கத்தினை வாசகர்களுக்கு அளிக்க விரும்புகிறேன்.

இன்று உலகத்திலே பேசப்படுகின்ற பல்லாயிரக் கணக்கான மொழிகளுள் ஒரு சில மொழிகளே செம்மொழிகளெனக் கருதப்படுகின்றன. பண்டைக்காலந் தொடக்கம் நீண்ட காலப் பயன்பாடுடையதும், நீண்ட கால இலக்கியப் பாரம்பரியமுடையதும், வேறெந்த மொழியிலுமிருந்தும் கிளைத்தெழாததுமாகிய மொழியே செம்மொழி எனப்பட்டது. நீண்ட காலமாக கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், ஹீப்ரூ, அரபிக், சீனம், பாரசிகம் ஆகிய மொழிகளே செம்மொழிகளெனப் போற்றப்பட்டன. செம்மொழிகளெனக் கருதப்பட்டனவற்றில் காணப்படும் தகைமைகள் யாவும் தமிழ் மொழியிலும் காணப்படுகின்றன. எனினும் தமிழ் மொழி ஒரு செம்மொழி எனக் கருதப்பட்டுப் பறைசாற்றப்படவில்லை.

தமிழருடைய தொன்மை பற்றியும் தமிழருடைய பண்பாடு பற்றியும் பண்டைத்தமிழ் இலக்கியங்கள் பற்றியும் ப.ரி. சிறிநிவாச ஐயங்கார் (History of the Tamils), தி. கனகசுந்தரம்பிள்ளை (The Tamils Eighteen Hundred years Ago), M.S.பூரணலிங்கம்பிள்ளை (History of the Tamil Literature) போன்றவர்கள் ஆங்கில மொழியில் எழுதியும் உலகம் தமிழ் மொழியை ஒரு செம்மொழியென உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கவில்லை. சமஸ்கிருத மொழியின் ஒரு கிளை மொழியே தமிழ் என்னும் கருத்து வட இந்திய அறிஞர்களிடையே வேரூன்றியிருந்தது. இதனால் சமஸ்கிருத மொழியைச் செம்மொழியென உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொண்ட இந்திய அரசு, தமிழ் மொழியைச் செம்மொழியாக ஏற்றுக்கொள்ளவில்லை.

இரண்டாயிரமாம் ஆண்டிலிருந்து தமிழறிஞர்களும் தமிழ்நாடு அரசும் தமிழ் ஒரு செம்மொழியென உத்தியோக பூர்வமாக ஏற்று அறிவித்தல் செய்யவேண்டுமென இந்திய அரசுக்கு வேண்டுதல்கள் விடுத்தனர். அவற்றின் பலனாக 2004 ஆம் ஆண்டு இந்திய அரசு தமிழ் ஒரு செம்மொழி என ஆணை பிறப்பித்தது.

இந்த ஆணையினாலே பெறக்கூடிய பயன்கள் யாவை? உலகப் பல்கலைக் கழகங்களிலே தமிழ் மொழியை ஒரு செம்மொழியாகக் கற்பிக்கும் வாய்ப்பு ஏற்படலாம். தமிழ் மொழிக்கான தவிசுகள் (Chairs for Tamil) உலகப் பல்கலைக் கழகங்களிலும் இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் ஏற்படுத்தப்படலாம். இந்திய அரசு செம்மொழி வளர்ச்சிக்கென ஒவ்வோராண்டும் வழங்கும் ஐந்து கோடி ரூபா தமிழ் மொழிக்கும் வழங்கப் படுகின்றது. தமிழ்ச் செம்மொழி மையம் உருவாக்கப்பட்டுள்ளது. செம்மொழித் தமிழ் இலக்கியங்கள் பல பிற மொழிகளிலே பெயர்க்கப்படுகின்றன. அத்தகைய முயற்சிகளுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டின் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணா நிதியின் தலைமையில் செம்மொழித் தமிழ் வளர்ச்சியினை மேம்படுத்த ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் நிறுவப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் மிகச் சிறந்த கவிஞர்களும் அறிஞர்களும் இக்குழுக்களிலே உறுப்பினராயுள்ளனர்.



### பண்டைக்காலம் தொடக்கம் பயன்பாடுடையது

செம்மொழிகள் பலவற்றுக்குப் பண்டைய வரலாறு இருக்கின்றது. தமிழ் மொழியும் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே வழக்கிலிருந்தது மட்டுமன்றி இலக்கிய மொழியாகவும் இருந்துள்ளது. கி.மு. 2 ஆம் நூற்றாண்டுத் திருநாதர்குன்றத்துத் தமிழ்க் கல்வெட்டு இதற்கு ஒரு சான்றாக அமைகின்றது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் தோன்றியிருக்கக்கூடிய தொல்காப்பியம் தமிழ் எழுத்துக்கும் எழுத்தாலான இலக்கியத்துக்கும் இலக்கணம் கூறுகின்றது. தமிழ் எழுத்து மொழியாக அமைவதற்கு முன்னர் பல நூற்றாண்டுகளாகப் பேச்சு மொழியாகப் பயன்பட்டிருக்கும். இவ்வாறு பண்டைக்காலந் தொடக்கம் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்த தமிழ் மொழி இன்றும் பயன்பாட்டிலே உள்ளது. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முகங்கொடுக்கும் மொழியாகவும் அமைந்துவருகின்றது.

செம்மொழி எனக் கருதப்பட்ட மொழிகளுள் பண்டைக் கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் ஆகியவை வழக்கிறந்துவிட்டன. இவை சமயக்கிரியை மொழிகளாக தேவ பாஷைகளாக இருந்தபடியாலே இயல்புநிலை மக்களுடன் ஒட்டி உறவாட முடியாதனவாக வழக்கிறந்துபோய்விட்டன. இந்த வகையில் பண்டைக் காலந்தொடக்கம் வழக்கிறந்து போகாமல் இன்று வரைக்கும் நின்றுநிலவும் மொழியாகத் தமிழ்மொழி விளங்குகின்றது.

### மிகச்சிறந்த உலகுக்குரிய இலக்கியங்களைக் கொண்டது

கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், ஹீப்ரூ, அரபிக், சீனம் ஆகிய மொழிகள் உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களை எமக்குத் தந்துள்ளன. இந்த வகையில் தமிழ்மொழி உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களைத் தந்துள்ளதா? ஒரு நூலினுடைய சிறப்பு அதன் பயன்பாட்டினையொட்டி அமைந்துள்ளது. பண்டைய சமய மறை நூல்களாகிய பைபிளும் திருக்குரானும் உலகெலாமுள்ள கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களுடைய தேவைக்காகப் பல மொழிகளிலே பெயர்க்கப்பட்டன. சமயப் பயன்பாட்டுக்காக இவை பெருந்தொகையான மொழிகளிலே பெயர்க்கப்பட்டுள்ளன. செம்மொழி இலக்கியங்கள் பல பிற மொழிகளிலே பெயர்க்கப்பட்டன. அவற்றின் பயன்பாடு அம்மொழிகளைச் சார்ந்தவர்களுக்காக மட்டுமன்றி பிறமொழி பேசுபவர்களுக்கும் சென்றடைந்தது. தமிழ் மொழியிலும் திருவள்ளுவர் இயற்றித் தந்த திருக்குறளுக்கு இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. உலகத்திலே எங்கு வாழ்பவர்களுக்கும் எம்மொழி பேசுபவர்களுக்கும் பயன்படக்கூடியதாக திருக்குறள் நூல் இயற்றப்பட்டுள்ளது. அந்நூல் முதன்முதலாக ஆங்கில மொழிக்குப் பெயர்க்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த டாக்டர் ஜி.யு. போப் அவர்கள் திருக்குறளை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தார். பின்னர் பல ஐரோப்பிய மொழிகளிலும் இந்திய மொழிகள் பலவற்றிலும் தென்னாசிய, தென்கிழக்காசிய மொழிகள் சிலவற்றிலும் அது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வள்ளுவன்தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று மகாகவி பாரதி கூறியதை இவ்விடத்திலே நினைவுகொள்ளலாம்.

கம்பன் இயற்றிய இராமாயணமும் இளங்கோவினுடைய சிலப்பதிகாரமும் உலக காவியங்களில் தரமுடையனவாக அமைகின்றன. வால்மீகியினுடைய இராமாயணத்தை அடியொற்றிக் கம்பன் இக்காவியத்தைப் படைத்தபோதிலும் தமிழ் மொழியின் பொருள், செய்யுள் மரபுகளின் செழுமைகளை அதனூடாகப் புலப்படுத்துகிறான். அவனுடைய சொந்தக் கற்பனைத் திறன், காவியக் கட்டமைப்பு, பாத்திர வார்ப்பு ஆகியன அறிஞர்களால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் முழுமையான ஒரு தமிழ்க் காப்பியம். இதனுடைய பிற மொழிபெயர்ப்புகள் அதிகமாக இல்லை. இக்காவியத்தினை பிற மொழிகளிலே முறையாக மொழிபெயர்த்துக் கொடுத்தால் தமிழ் ஒரு செம்மொழி எனக் கூறுதற்கு மிகச் சிறந்த சான்றாக அமையும்.

செம்மொழித் தமிழ் இலக்கியம் இந்திய நாகரிகத்தின் ஒரு பகுதியினை நன்கு எடுத்துக்காட்டும் மூலமாக அமைகின்றது. இந்தியாவின் சிந்து கங்கை நதிப் பள்ளத்தாக்கில் ஒரு பகுதியில் வேத ஆரியர் இன்னொரு பக்கத்தில் திராவிட இந்துக்கள் வாழ்ந்தனர். இவர்களுடைய பண்பாட்டுக் கையளிப்புகள் இந்தியப் பண்பாட்டினையும் நாகரிகத்தினையும் உலகப் புகழ் பெற்றனவாக ஆக்கியுள்ளன. இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகச் சமஸ்கிருத மொழியும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாக தமிழ் மொழியும் அமைந்தன. இவ்விரு மொழிகளும் உலகத்துக்கு வியாசர், வால்மீகி, பாணினி, காளிதாசன், தண்டின், மாகன், சங்கப் புலவர்கள், திருவள்ளுவர், இளங்கோ, தொல்காப்பியர், கம்பன், சேக்கிழார் போன்ற புலவர்களைத் தந்துள்ளன. இவர்கள் யாவரும் இந்தியப் புலவர்களே. எனவே, தமிழை எவரும் அறியாமல் விட்டால் இந்தியப்பண்பாட்டின், நாகரிகத்தின் ஒரு பகுதியினை அறியாதவர்களாவர்.

### நீண்டகால இலக்கியப் பாரம்பரியமுடையது

தமிழ் மொழி கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரிருந்து இன்றுவரை இடையறாத இலக்கியப் பாரம்பரியமுடையதாக அமைகின்றது. இலக்கியச் செழுமையுடையனவாகவும், பண்டைத் தமிழருடைய சமூக, பண்பாட்டு, கலை விவரங்களை வெளிப்படுத்துவனவாகவும் அமையும் சங்க இலக்கியங்கள் தமிழ் மொழியில் தொன்மை வாய்ந்தவையாகும். வள்ளுவனையும் இளங்கோவையும் பெருந்தொகையான அறநீதி நூல்களையும் கொண்ட தமிழ் ''பக்தியின் மொழி தமிழ்'' என்று கூறக்கூடியதாக அமைந்தது. எலும்பினையே உருகவைக்கும் பாடல்கள் என்று சொல்லத்தக்க பக்திப் பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. டாக்டர் ஜி.யு. போப் திருவாசகப் பாடல்களை ஆங்கில மொழியிலே பெயர்த்துப் பிற மொழியாளர்களுக்கு அவற்றின் சிறப்புக்களை உணர்த்தினார். காவியங்கள், புராணங்கள், தனிப்பாடல்கள், சிற்றிலக்கியங்கள் என்று பல இலக்கியங்கள் தமிழ் மொழியிலே தோன்றின. நவீன காலத்துக்கேற்ப நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரையிலக்கியம், மறுமலர்ச்சியடைந்த கவிதை என்பன பெருவாரியாகத் தோன்றி வளர்ந்துகொண்டிருக்கின்றன.



பேராசிரியர் அ. சண்முகதாஸ்,
Ph.D. (Edinburgh)

தமிழ்ச் சமய இலக்கியத்தின் ஒரு தனித்தன்மை இங்கு குறிப்பிடப்பட வேண்டியது. எவ்வெச் சமயங்கள் தமிழ் மொழியுடன் தொடர்புற்றனவோ அவ்வச் சமயங்களுக்கெல்லாம் தமிழ் மொழியிலே காவியங்கள் இயற்றப்பட்டுள்ளன. சமணம், பௌத்தம், வைணவம், சைவம், இஸ்லாம், கிறிஸ்தவம், றோமன் கத்தோலிக்கம் என்பன தமிழ் மொழியுடன் தொடர்புற்ற சமயங்களாயின. இந்நிலையில், சமணசமய சீவகசிந்தாமணி, பௌத்தசமய மணிமேகலை, வைணவசமயக் கம்பராமாயணம், சைவசமய பெரியபுராணம், இஸ்லாம் சமய சீறாப்புராணம், கிறிஸ்தவசமய இரட்சணிய யாத்திரிகம், றோமன் கத்தோலிக்க சமய தேம்பாவணி காவியங்களைக் குறிப்படலாம்,

(24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்காய் படைக்கிறோம் நேசப்பூச்சரம்!

யாழ்ப்பாணத்தில்

# மக்கள்களரி நாடக விழா

செம்மணி வீதி, நல்லூர்

C.C.T.M பாடசாலை மைதானத்தில்

அமைக்கப்பட்டுள்ள மக்கள்களரி நகரும் நாடக அரங்கில்

**ஜூன் 21ஆம் திகதி முதல்**
**ஜூலை 02 ஆம் திகதி வரை தினமும்**

பாடசாலை மாணவர்களுக்காக மு.ப 9.00 மணிக்கு

ஏனையவர்களுக்கு பி.ப 6.00 மணிக்கு

**மக்கள்களரி நாடகக் குழு அரங்கேற்றும்**

விருதுகள் வென்ற பல்வேறு தமிழ் நாடகப்படைப்புகள்

**சரண்தாஸ்**

**செக்கு**

**மாயப்பட்டாடை மற்றும் எருக்கலம் பூ**

**திருடன் வந்தான் மற்றும் தேவலோகப்பயணம்**

**மிருச்சக்கட்டிகம்**

நெறியாள்கை - பராக்கிரம நிரியெல்ல

**அபிஞ்ஞான சகுந்தலம்**

நெறியாள்கை — நவதர்ஷினி கருணாகரன்

**தாள தாளம்**

ரவிபந்து வித்யாபதி மற்றும் கோபாலகிருஷ்ணன் சத்தியன்

வாக்கு — தெற்கு தாளவாத்திய சிம்பனி

யாழ்ப்பாண வித்துவான்களின் கலை நிகழ்வுகளும்

திருமறைக் கலா மன்றம் வழங்கும்

**அற்றைத் திங்கள்**

சுத்து உருவ நாடகம்

**தொடர்புகளுக்கு - 0726111145**



தலைநகரில் தலைசிறந்த ஸ்தாபனம்....

# குமரன் சில்க்ஸ்



ஆண்களுக்கான...
★ சேட்டிங்
★ சூட்டிங் ★ கோட்சூட்
★ குருத்தா ★ டெனிம்
★ ரி.சேட்ஸ்
★ சேட்வகைகள்



பெண்களுக்கான...
★ திருமண சாறிவகைகள்
★ சல்வார் வகைகள்
★ திருமணப் பட்டுச்சாறிகள், புடைவைகள்
★ சீக்குன்ஸ் சாறிவகைகள்
★ கொட்டன் சாறி வகைகள்
★ பிறின்ட் சாறிவகைகள்
★ சல்வார் வகைகள் ★ சோலி கிட்

சிறுவர்களுக்கான..
நவீன டிசைன்களில்
உடுபுடைவைகள்

இவை அனைத்தையும்
எண்ணம்போல்
தெரிவுசெய்து மகிழ்வுடன்
அள்ளிச்செல்ல

K.S

**குமரன் சில்க்ஸ்**

இல.291,
பிரதான வீதி,
கொழும்பு-11.

T.P:
0114717574
0112441701
Fax:
0112441702



# ஜோர்தான் ஆடைத்தொழிற்சாலையில்

## தமிழ் பெண்களுக்கு வேலைவாய்ப்பு

வயதெல்லை: 18 - 30
முன் அனுபவம் தேவையில்லை

தையற்கலையில் அரிய நுணுக்கங்களை அங்கேயே பழகி உழைக்கலாம்.

**ஜூகி மெஷின் ஒப்பரேட்டர் - 50 - US $ 150**
(1 US $ = RS. 115)

1. உணவு, தங்குமிடம், வைத்திய வசதி இலவசம்
2. போக்குவரத்து விமானப்பயணச்சீட்டு இலவசம்
3. 3 வருட சேவைக்காலம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பில் 15 வருடத்திற்கு மேல் அனுபவம் மிக்க ஒரியன்ட் லிங்க் தாபனத்தார் தமிழ் இளம் பெண்களுக்கு பெற்றுக் கொடுக்கும் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

FLEX Graphic

## Orient Link (Pvt) Ltd.

No : 24, Station Road,
Wellawatte, Colombo - 06.
Tel : 011 5669566

License No : 1176 App No: AL/1176Advt:/04/10





# STUDY IN INDIA

JAI INDIAN EDUCATION CONSULTANTS
For More Details: www.jieconline.com
(அரியசந்தர்ப்பம்)

**Available Courses:**

| Biology: | Maths: | Other Courses: |
|---|---|---|
| Medicine | Mechanical | B.SC Hotel & Catering Management |
| Dental | Civil | |
| Physiotherapy | E.C.E | |
| B.Pharma | E.E.E | |
| Biotechnology | C.S.E | |
| Bio Medical | I.T | Scholarships Available... |
| Bio Informatics | E&I | |
| B.Sc Nursing | | |

| Professional: | Commerce: | |
|---|---|---|
| MBA | B.COM | இப் பாடநெறிகள் அனைத்தும் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டவை |
| MCA | For Arts: | |
| M.PHARMA | LAW | |
| M.Tech | | |

Limited Seats Available...

Apply Before 10th of July....

FOR MORE DETAILS
J.I.E.C (Sri Lanka)
C-50, Old galaha Road
Peradeniya, Kandy
Phone: 0774138831
Mail: dharshan21@live.com

J.I.E.C


## சேவை

குறைந்த செலவில் குறுகிய காலத்தில் உயர்ந்த தரத்தில் நினைவு மலர் மற்றும் நினைவு மலர்களுக்கான படங்கள் அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

பிள்ளையார் அச்சகம்
நல்லூர். (சி/568104)

## காணி விற்பனைக்கு

யாழ்.ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 3216790

## கடை விற்பனைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் மணிக்கூட்டு வீதிக்கும் வேம்படிச் சந்திக்குமிடையில் உள்ள 20 அடி அகலமும் 80 அடிக்கு மேற்பட்ட நீளமுடைய கடை விற்பனைக்குண்டு.
(99585) தொடர்பு: 021 3216790

## பிக்கப் விற்பனைக்கு

தரமான நல்ல பாவனையிலுள்ள TATA பிக்கப் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 6441991
(96637)

## வாடகைக்கு

யாழ்ப்பாண நகரத்தில் 2500 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட ஒரு இருமாடிக் கட்டடம் வாடகைக்குண்டு.
(99570) தொடர்பு: 0777162428

## வீடும், காரும் விற்பனைக்குண்டு

மருத்துவ பீடத்துக்கும், கல்வாரி தேவாலயத்துக்கும் அருகில் உள்ள பிறவுண் வீதி, கொக்குவில் பகுதியில் 4 அறைகள், 2 மலசலகூடங்கள், கிணறு மற்றும் குழாய் நீர் வசதி கொண்ட 3 பரப்புக்காணியில் அமைந்த வீடும் (நிறுவனங்கள் மிகவும் விரும்பக்கூடியது), KE 70 Toyata Corrala 13 - மொடல் காரும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0773423886 (99630)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பிப்பிள்ளை அன்னம்மா (பூரணம்)



குப்பிளான், ஊரங்குனையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் மேற்கு, கொத்தியாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை அன்னம்மா 15.06.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் வசந்தா, காலஞ்சென்ற சற்குணநாதன் ரதி, ஜெகநாததாசன், லோகநாதன், நந்தினி (லண்டன்), சுகந்தி (லண்டன்), காலஞ்சென்றவர்களான சுகநாதன், அகிலநாதன் ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம். (99558)
தகவல்:
குடும்பத்தினர்.

## சோமசுந்தரம் விக்கினேஸ்வரன் (சத்திரச்சந்தி)

*(வேணி களஞ்சியம், K.K.S.வீதி, யாழ்ப்பாணம்)*

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் விக்கினேஸ்வரன் 18.06.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு சோமசுந்தரம் (வர்த்தகர், அல்தும் முல்ல) மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சகுந்தலாதேவியின் பாசமிகு கணவரும் சிவசங்கர், ஜெய்சங்கர், தர்சிகன் (யாழ்ற்ரன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமேஸ்வரன், சுந்தரேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும் உமாபதி, சாரதாதேவி, செல்வராஜா, தியாகராஜா, வள்ளி, சுந்தராம்பாள் (குஞ்சு) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (19.06.2010) சனிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவளம்,
காரைநகர். (99582)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு நகரம் இன்று............

# திரும்பும் இடமெல்லாம் உருக்குலைவும் சிதைவும் தான்!

படையெடுப்பும் அழிவும் வாழ்வும் என்று கடந்த பல வருடங்களாக யுத்தத்தில் சிக்கிய முல்லைத்தீவு நகரம் கடந்த சமாதான காலத்தில் உயிர்பெற்று மிளிர்ந்தது. மீண்டும் யுத்தத்தினால் திரும்பும் இடமெல்லாம் காயமும் உருக்குலைவும் சிதைவுமாக அழிவுகளின் மேடாக இருக்கிறது என்கிறார் கட்டுரையாளர். போர் நடந்த அந்த நகரத்தில் தங்கியிருந்த மக்கள் சந்திக்க நேர்ந்த அனுபவங்களையும் அவர்கள் காண நேர்ந்த காட்சிகளையும் கேட்டறிந்து வாசகர்களுக்குத் தொகுத்துத் தருகிறார் இங்கே.

உருக்குலைந்து போயிருந்த முல்லைத்தீவு நகரத்தில் சனங்கள் வெளியேறிச் சென்றிருந்த ஒரு வீட்டினுள் தான் இரவு தூங்கிவிட்டு எழுந்து அங்குள்ள தேனீர்க் கடையொன்றில் தேனீர் அருந்திக் கொண்டிருந்தேன். அந்த நகரத்தில் தற்பொழுது உள்ள பொது மக்களுக்காக நடத்தப்படும் ஒரே ஒரு தேநீர்க்கடை அது மட்டுமே. அந்தத் தேனீர்க்கடையை நடத்தும் அன்ரன் என்பவர் நான் அந்தக் கடைக்கு செல்லும் பொழுது ஒரு பாடலைப் பாடிக் கொண்டிருந்தார். முல்லைத்தீவில் இடம்பெயர்ந்த மக்களுக்காக மனிதாபிமான உதவிகளைச் செய்யும் பணியாளர் ஒருவர் அவரை அறிமுகம் செய்து வைத்தார். இரவானதும் அவர் பாடிக் கொண்டேயிருப்பார் என்றும் அப்பணியாளர் தெரிவித்தார்.

சிதைவடைந்த கட்டடங்களின் துகள்களும் மிகுதிச் சுவர்களும் கூரைகளும் அந்த நகரத்தின் பழமையை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது முல்லைத்தீவு நகரம் பொலிவிழந்து காணப்படுகிறது. நகரத்தில் இருந்த கட்டடங்கள் எல்லாமே சிதைவடைந்து போயிருக்கின்றன. திரும்பும் இடமெல்லாம் எல்லாமே காயமும் சிதைவும் உருக்குலைவும் என்று அழிந்த நகரமாக முல்லைத்தீவு காணப்படுகிறது. சுற்றி வரக் கடல்; அதற்கிடையில் நந்திக்கடல் என்று ஒரு கடல் நகரமாகவே முல்லைத் தீவு சிறந்து விளங்கியது. அரச அலுவலகங்கள் முதல் பாடசாலைகள் வரை பல கட்டடங்கள் அழிக்கப்பட்டு விட்டன. பொது மக்களின் வீடுகள் கடைகள் தொழில் நிறுவனங்கள் என்று எல்லாமே சிதைந்து போயிருக்கின்றன.

முல்லைத்தீவு நகரத்தை அண்டிய பகுதிகளிலும் வற்றாப்பளைபோன்ற சில இடங்களிலும் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அந்த மக்களில் பலர் மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் உதவிப் பொருள்கள் பெறுவதற்காக காத்துக் கொண்டிருந்தார்கள். நகரத்தில் குடியேறிய சிலர் சிதைவடைந்த கடைகளுக்குள் தற்காலிகமாகத் தங்கியிருந்தார்கள். சைக்கிள்களில் ஒரு சிலர் நகரத்தில் திரிவதையும் வேறு ஒரு சிலர் கால்நடையாக நடமாடிக் கொண்டிருப்பதையும் பார்க்க முடிகிறது. கால்நடையாகச் சென்று கொண்டிருந்த ஒருவர் சிதைவடைந்த வெளியைக் காட்டி என்னுடன் பேசத் தொடங்கினார்.



"இந்த இடத்தில் ஒரு பள்ளிக் கூடம் இருந்தது. இப்பொழுது அந்தப் பள்ளிக் கூடம் இருந்ததற்கான எந்த அடையாளங்களையும் காணவில்லை. சண்டை நடந்ததால் அப்படி அடியுடன் அழிந்து போய்விடாது. இது சண்டையின் பின்னர் அழிக்கப்பட்டிருக்கிறது. முன்பு இந்த நகரத்திற்கு வரும் பொழுதெல்லாம் இந்தப் பாடசாலையின் முன்பாக இருந்த சிறிய பூங்காவில் பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். அதன் எந்தத் தடயங்களையும் இப்போது காணவில்லை"

நான் முதலில் குறிப்பிட்ட தேனீர்,

கடையை நடத்தும் அன்ரன் என்பவர் கடற்தொழில் செய்து முன்னேறிக் கொண்டு வந்தவர். இப்பொழுது எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதி நிலையில் நிற்கிறார். தனக்கு மன ஆறுதலுக்காக இரவில் அவர் பாடல்களை பாடிக் கொண்டிருப்பதாக அங்குள்ள அலுவலகம் ஒன்றில் பணிபுரியும் அந்த மனிதாபிமானப் பணியாளர் குறிப்பிடுகிறார்.

"எனது அலுவலகத்தில் ஒரு தேனீரகம் இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு நாளும் நான் இந்தத் தேனீரகத்திற்கு வந்து போவேன். முக்கியமாக அன்ரன் ஐயாவின் கதைகளைக் கேட்கவும், அவரது பாடலைக் கேட்கவுமே. நான் மாலை நேரங்களில் வரும் பொழுது அவர் பாடிக்கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். இங்கு மீள்குடியேறி வரும் மக்களுக்கு இவர் ஒரு நம்பிக்கையான உதாரணமாக எனக்கு தெரிகிறது" எனவும் அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நகரத்தில் முதன் முதலில் குடியேற்றப்பட்டவர்களில் அன்ரன் என்ற இவரும் ஒருவர். இவரது தேனரகம் என்பது உடைந்து போயிருக்கும் ஒரு கடைதான். மேலே தரப்பாளால் மூடியிருக்கிறார். நகரத்தில் அங்கும் இங்குமாக எறிபட்டிருந்த மேசைத் துண்டுகளையும் கதிரைகளையும் பலகைத் துண்டுகளையும் பொறுக்கி வந்து அந்தக் கடையை அமைத்திருக்கிறார். கடையில் இரண்டு பைகளில் கோதுமை மா இருக்கின்றது. தேனீர் தயாரிப்பதற்கான கொஞ்ச வசதிகளுடன் பின்னால் ஒரு மேசை இருக்கிறது. காட்போட் பெட்டிகளில் சமையலுக்கு தேவையான சில பொருட்களை வைத்திருக்கிறார். கடகட வென... சத்தம் கேட்க தேனீரைத் தயாரித்தபடி

வாங்குவதற்குப் போனால் அவர்தான் கடையைப் பார்த்துக் கொள்ளுகிறார். அவர் அண்மையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளி. ஓமந்தையில் நடைபெற்ற சமர் ஒன்றில் ஒற்றைக் காலை இழந்திருக்கிறார். அவரது மனைவி பிள்ளைகள் யாழ்ப்பாணத் தில் உறவினர் ஒருவரது வீட்டில் தங்கியிருக்கிறார்கள்.

"எனது மனைவி சுனாமியில் இறந்து போய்விட்டாள். மகன் ஒருவன் கடந்த யுத்தத்தில் காணாமல் போயிருக்கிறான் அவனும் நானும் எத்தனையோ நாள்கள் பதுங்கு குழிக்குள் காலத்தைக் கடத்தியிருக்கிறோம். பின்னர் ஒருநாள் நான் அவனைப் பிரிய நேர்ந்தது. நான் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டேன். அவன் இரண்டு கால்களையும் இழந்தபடி பெரிய கஷ்டங்களை அனுபவித்திருக்கிறான். உழவு இயந்திரம் ஒன்றுக்கு கீழாக அவன் படுத்திருந்ததை யாரோ பார்த்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் யுத்தம் அதிகமாக மூண்ட பொழுது வேறு யாரோ தூக்கி வந்து பார ஊர்தி ஒன்றுக்குக் கீழே போட்டிருக்கிறார்கள். இறுதியில் அவன் என்ன ஆனான் என்று தெரியவில்லை" இப்படிக் கூறுகின்றார் அன்ரன்.



நகரத்தில் மீள்குடியேறிய ஒரு இளம் தாய் என்னிடம் குறிப்பிட்டார். அங்கு குடியேறியுள்ள வேறு சிலர் தங்களது சிதைந்த வீடுகளின் கற் துகள்களைக் காணியின் ஒரு பக்கமாக ஒதுக்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் நிறைய வீடுகள் ஆள்களில்லாமல் வெறுமையாகக் கிடந்தன. இடையிடையேதான் சிலர் குடியேறியிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் பொருள்களை விற்பனை செய்யும் கடை

ஒன்றும் அங்கு காணப்படுகிறது. கடைக்கு முன்பாக வரும் பேருந்துகளைப் பார்த்த படி சில சிறுவர்கள் நிற்கிறார்கள்.

"இன்று கொஞ்சம் ஆள்கள் அதிகமாகப் பேருந்தில் போகிறார்கள். அவர்கள் எல்லோருமே வற்றாப்பளை கோயிலிற்கு வந்தவர்கள். மற்றப்படி இரண்டு மூன்று பேரோ அல்லது நாலைந்து பேரோ தான் பேருந்துகளில் வருவார்கள்; போவார்கள்.

# உடைந்தும் இடிந்தும் போன தம் வீடுகளுக்குள்

# மீளக் குடியமர்ந்தோரின் அன்றாடப் பொழுது கழிகிறது

என்னைப் பார்த்துப் பேசுகிறார்.

"நிறைய உழைத்தேன். ஐந்து ரூபாய், நூற்றியம்பது ரூபாய் என்ற முதலீடுகளைக் கொண்டு நான் முன்னேறி வளர்ந்த எனது முயற்சிகள் உழைப்புகள் பல இருக்கின்றன. இப்பொழுது உழைக்க வேண்டும் என்றெல்லாம் இல்லை. இது எனது உறவினர் ஒருவரது கடை. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அவர்கள் இங்கு திரும்பி வரப்போவதில்லை என்று சொன்னார்கள். அவர்களுக்குச் சொல்லிவிட்டு இந்த உடைந்த கடையில் இந்த தேனீரகத்தைத் தொடங்கியிருக்கிறேன். இதை ஒரு வியாபாரமாக நான் கருதவில்லை. மலிவாக மரக்கறி போன்ற பொருள்களைக் கொண்டு வந்து விற்கிறேன். களைத்துப்போய இந்த நகரத்திற்கு வருபவர்களுககு தேனீரை, உணவைக் கொடுக்கிறேன்"

மேலும் இரண்டு மனிதாபிமான பணியாளர்கள் வந்து தேனீர அருந்திக் கொண்டிருந்தாகள். வயது முதிர்ந்த ஒரு மூதாட்டி வந்து தனக்கு மரக் கறிகள் தேவையாக உள்ளது என்று குறிப்பிட்ட பொழுது நாளை மரக்கறிகளை கொண்டு தருவதாகக் கூறுகிறார் அன்ரன்.

"நேற்றிரவும் இப்படித்தான் மிக நேரமாகிய பின்னர் 'யாரோ பசிக்கிறது; சாப்பாடு கிடைக்குமா?' என்று வந்தாகள் நான் வேலைகளை முடித்து விட்டு ஓய்வாயிருந்தேன். பினனா சாப்பாடு கேட்டவரை இருத்தி விட்டு இருந்த ரொட்டிகளைப் பிய்த்து கொத்துரொட்டி தயாரித்துக் கொடுத்தேன. இப்பொழுது மேலதிகமாக கோதுமை மாவை வாங்கி வைத்திருக்கிறேன். யாராவது தடீரென வந்தால் அவர்களுக்கு ரொட்டி போட்டாவது கொடுக்கலாம்"

அவருடன் துணைக்காக அவரது தமையன் ஒருவரது மகன் இருக்கிறார். அன்ரன் வெளியில் [illegible]

அன்ரன் பாடும் பாடலின் அர்த்தங்கள இப்படியான வலிகளை வெளிப்படுத்துவதாக இருப்பதாக அந்தப் பணியாளர் என்னிடம் குறிப்பிட்டார். அவரது பாடல்கள் மனதை நிலைகுலையச் செய்து விடுகின்றன என்றும தீராத துயரை அவரது குரல பிரதிபலிக்கிறது என்றும் அந்தப் பணியாளர் சொல்லுகிறார். ஆனால் அன்ரனது முகத்தில் ஒரு வலிமையையும் நம்பிக்கையும் வெளிப்படுவதைப் பார்த்தேன்.

"நான் உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் படித்தேன். பின்னர் வறுமை காரணமாகப் படிப்பை விட்டு கூலி வேலைகளுக்கு இறங்கி விட்டேன். எனது மகனை நான் விஞ்ஞானப் பிரிவில் படிக்க வைத்தேன். எனது கனவை அவன் நிறைவேற்றுவான் என்று நம்பியிருந்தேன். ஆனால் அவனோ ஒரு கனவாகக் கலைந்து போய் விட்டான். இப்பொழுது எனது கடைசி மகன் யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர் வீடு ஒன்றில் தற்காலிகமாகத் தங்கியிருந்து படிக்கிறான்" என்கிறார் அன்ரன்.

நகரத்தின் இன்னொரு பக்கமாக மக்கள் பலர் குடியேறியிருக்கிறார்கள். உடைந்த வீடுகளில் ஏதாவது ஒரு பக்கமாக தரப்பாளை இழுத்துக் கட்டிக் கொண்டுதான் அங்குள்ள பலர் இருக்கிறார்கள். அவர்களின் வீடுகள் பல சிதைவடைந்தும் முழுமையாக அழிந்தும் போயிருககிறன. கடற்கரையை அண்டிய இந்த இடங்களில் இருந்த வீடுகள் எல்லாமே சுனாமியில் அழிந்து பின்னர் தொண்டு நிறுவனங்களால் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளே இப்படி யுத்தத்தில் மீளவும் சிதைவடைந்து போயிருக்கின்றன.

"நான் கடந்த 16 ஆம் திகதிதான் இங்கு மீளக்குடியமர வந்தேன். எங்கள் வீடு சுனாமியில் அழிந்த பின்னர் இந்த இடத்தில் தொண்டு நிறுவனம் ஒன்று வீடு ஒன்றைக் கட்டித் தந்திருந்தது. அந்த வீட்டை அடியோடு காணவில்லை. அதனால் தரப்பாளால் தற்காலிமாக ஒரு கூடாரத்தை அமைத்திருக்கிறோம். கடற்கரை இது என்பதால் சிலவேளை வெம்மையாயிருக்கும்; சிலவேளை காற்றுப் பலமாக வீசும். அதனால் பாதுகாப்பான வீடு ஒன்று எங்களுக்குத் தேவைப்படுகிறது. எங்களுக்கு வீட்டுத் திட்டம் வரும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் எப்பொழுது வரும் என்று தெரியவில்லை" இப்படி [illegible]யில் முல்லைத்தீவு

**தீபச் செல்வன்**

இன்னும் பலர் இங்கு மீளத் திரும்பவில்லை. பலர் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். வேறு சிலர் இங்கு வரப்பிடிககாமல் வேறு இடங்களிலும் போய் தங்கியிருக்கிறார்கள். அந்தளவுக்கு யுதத அழிவு எங்களைப் பயமுறுத்துகிறது. எப்படியும் அவர்கள் எல்லோருமே திரும்பி வருவார்கள் என்று நம்புகின்றேன" என்கிறார் அன்ரன்.

முல்லைத்தீவு மக்கள் நிறைய உழைப்பவர்கள். முல்லைத்தீவுக் கடலை நம்பி அந்தப் பகுதியில் குடியேறியவர்கள். வரலாற்றின் முக்கியத்துவம் மிக்க பட்டினம் என்று குறிப்பிடும் முல்லைத்தீவைக் கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டில் சிறப்பான நகரமாக மாற்றப் பல்வேறு வேலைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட செயலகத் தில் வைத்து வயது முதிர்ந்த பெண்மணி ஒருவருடன் பேசினேன்.

"இந்த நகரம் பல வருடங்கள் பழமை மிக்கது. அதன் தொடர்ச்சியான போராட்ட வரலாற்றில் இயக்கம் இதனை முன்னேறறப் பல திட்டங்களை கொண்டு வந்தது. முன்பு மிகக் கலகலப்பாக இருக்கும். உழைக்கும் மக்களால் நிரம்பியிருக்கும். இராணுவம் பல வருடங்களாக இந்த நகரததைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருநதது. பிறகு இயக்கம் கடுமையாகப் போராடி மீட்ட பின்னர் மீளவும் செழுமையாக்கியது. முன்பு நடநத போர்களினதும் படையெடுப்புகளினதும் தடயங்கள், அழிவுகள் இருந்த பொழுதும் அதை மீறி வளர்ச்சிதான் தெரிந்தது. எப்படி இருந்த இந்த நகரத்தை நாங்கள் விட்டு ஓடிப் போனோம். திரும்பி வரும் பொழுது எங்கள் மனம் பொறுக்க முடியாத அளவுக்கு நகரம் சிதைக்கப்பட்டிருந்தது என்றார்" அந்தப் பெண்மணி. அங்கு நான் சந்தித்தவர்கள் எல்லோரையும் அழிவுதான் பயமுறுத்திக் கொண்டிருக் கிறது என்பதை உணர்கிறேன். கடற்றொழிலால் அவர்கள் கஷ்டப்பட்டு எழுப்பிய எல்லாமே அழிந்து போயிருக்கிறது. படகுகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. நிறையப் படகுகளை அவர்கள் இழந்து விட்டார்கள். இரவும் பகலுமாக உழைத்த அவர்களின் உழைப்பு கற்குவியலாகவும் சாம்பலாகவும் மண்மேடாகவும் ஆகி இருக்கின்றன.✱✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மருதடி வீதியில் (நல்லூர் செல்லும் வழியில்) 4 பரப் புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0774457460

## விற்பனைக்கு

பேக்கறிகளுக்குத் தேவையான 50 கிலோ மா குழைக்கக்கூடிய மிசின் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 021 7200440

# வாசித்து விட்டீர்களா! இருக்கிறம்

இலங்கையில் இருந்து வெளிவரும் ஜனரஞ்சக சஞ்சிகை




இந்த இதழில்

- மீள் குடியேற்றமும் மீளமுடியாத சுமைகளும் - நேரடி ரிப்போட்
- தமிழன் என்ன இளிச்சவாயனா? - பதிப்பகத்தார்
- காற்றாய் வருவேன் - மொழிவாணன் எழுதும் திகில் தொடர்
- அவருக்கு பாஸ் கிடைத்து விட்டது - செங்கை ஆழியானின் சிறுகதை

இன்னும் பல சுவையான அம்சங்களுடன் மாதமிருமுறை வெளிவருகிறது. இப்பொழுதே வாங்கிப் படியுங்கள்.

**இலவச இணைப்பு - தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்**

மேலதிக தகவல்களுக்கு
விநியோகப்பிரிவு : 011 - 2506272
irukiram@gmail.com

இருக்கிறம்
03, டொறிங்டன் அவனியூ,
கொழும்பு 7



## BE A PARTNER OF FRONTIER IN COMMUNITY FRIENDLY NATIONAL DEVELOPMENT

If you've got the heart for national service, we have a place for you we believe that there are people who want to participate activity in the process of National development. We believe that there are people who see the Sri Lanka's tomorrow, and dream of playing a role on it. Cargills(Ceylon) PLC is one of Sri Lanka's largest organizations who is having a diverse range of brands and employing over 6000 youth, Operating in 22 Districts and 9 Provinces in the country. It is our vision to create value and bring sustainable development to communities across Sri Lanka.

We are looking for energetic, committed and innovative young individuals who enjoy working in a challenging environment, to join us to achieve this vision.

### AGRI-BUSINESS DIVISION

**POSITION** Agriculture Officers (Northern & Eastern Provinces)

**QUALIFICATION & EXPERIENCE**

- Degree in Agriculture with two years experience in Agriculture extension /crop production. Or Diploma in agriculture with four year experience in Agriculture Extension / Crop production
- Posses valid license for riding Motor Bikes.
- Age between 22-30
- Proficiency in Tamil language is essential.

Please send in your resume with the position applied to ,marked on the top left conner of the envelop to reach us before 30th June 2010. You can also e-mail your application to *jobs@cargillsceylon.com*

*Human Resourec Manager*
*Cargills (Ceylon) PLC*
*No 40, York Street*
*Colombo 01.*

SINCE 1844

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 20

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற உள்ளது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் சி.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணிக்கு விவசாயக்குழுக் கூட்டமும் இடம்பெற உள்ளது.

( 50-201-250)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 20

சாவகச்சேரி நகர சபை சனசமூக நிலையங்களின்சமாசப்பொதுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபை எல்லைக்குட்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளுமாறு நகரசபை செயலாளர் செல்வி வீ.சிவக்கொழுந்து அறிவித்துள்ளார்.

(50-201-207)

## வசீகரத் தோற்றத்திற்கு! சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், நன்னாரிப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔஷதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் கருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் வீறலை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீர தோற்றத்தைத் தரும்.

சந்தனாலேப

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்

**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

(91/333203)




## முதுகலைமாணிப் பட்டம் பெறும் தம்பதிகளை வாழ்த்துகின்றோம்

ஸ்கந்தாவின் முன்னாள் அதிபரும், பலாலி ஆசிரிய கலாசாலை, யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் கல்லூரி ஆகியவற்றின் வருகை விரிவுரையாளருமான திரு.கந்தசாமி சிவாஜி அவர்களும் ஸ்கந்தாவின் முன்னாள் ஆங்கில ஆசிரியரும் யாழ்.பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளருமான திருமதி கருணாதேவி சிவாஜி ஆகிய இருவரும் இன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் English M.A. பட்டம் பெறுவது அறிந்து தம்பதிகளை உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
நன்றி மிக்க ஸ்கந்தாவின் மாணவர்கள்

(99565)



அனலைதீவு, நயினாகுளம்

**பூரணைதேவி புட்கலைதேவி சமேத அருள்மிகு ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் திருக்கோயில்**

புனராவர்த்தன பிரதிஷ்டா அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ

## மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

ஐயன் அடியார்களே...!

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் ஆனித் திங்கள் 9 ஆம் நாள் (23.06.2010) புதன்கிழமை ஹரிஹர புத்திர ஐயனாருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நிகழ திருவருள் கூடியுள்ளது. இப்பெருஞ்சாந்தி விழாவிலும் ஏனைய கிரியைகளிலும் ஆசாரசீலர்களாகக் கலந்து ஐயன் அருள்பெறுவோமாக!

கிரியா கால நிகழ்வுகள்

ஆனிமாதம் 2 ஆம் நாள் (16.06.2010) புதன்கிழமை காலை 5 மணி 5நிமிடத்தில் பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகின.

ஆனிமாதம் 8 ஆம் நாள் (22.06.2010) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 5மணிவரை தைலாப்பியங்கம் (பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல்)

ஆனிமாதம் 9 நாள் (23.06.2010) புதன்கிழமை காலை 6 மணி 24 நிமிடம் தொடக்கம் 07 மணி 10 நிமிடம் வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேக பெருவிழா நடைபெறும்.

23.06.2010 ஆம் திகதி அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

*சாமியே சரணம் ஐயப்பா!*

ஆலய பரிபாலன சபையினர்
ஐயனார் ஆலயம், அனலைதீவு.

(99564)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## World University Service of Canada

Tel : +94 (0) 242 223 222
eMail : vavuniya@wusc.lk

உலக கனேடியப் பல்கலைக்கழக சேவை நிறுவனம் (WUSC) அதன் பங்காளர் நிறுவனங்களினூடாக நடாத்தவிருக்கும் தொழிற்பயிற்சி நெறிகளுக்கான போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்.

பயிற்சி நடாத்தவிருக்கும் இடங்கள்:

| முல்லைத்தீவு மாவட்டம் | |
|---|---|
| பயிற்சி நெறி | பிரதேச செயலாளர் பிரிவு |
| மின்னிணைப்பு | மாந்தை கிழக்கு |
| அலுமினியம் பொருத்துதல் | மாந்தை கிழக்கு |
| மேசன் பயிற்சி | துணுக்காய் |
| தச்சுத் தொழில் | ஒட்டுசுட்டான் |

| கிளிநொச்சி மாவட்டம் | |
|---|---|
| பயிற்சி நெறி | பிரதேச செயலாளர் பிரிவு |
| மின்னிணைப்பு | பூநகரி |
| மேசன் | பூநகரி |
| வெளியிணைப்பு, இயந்திரம் பழுதுபார்த்தல் | ஒட்டுசுட்டான் |
| தச்சுத் தொழில் | கண்டாவளை |
| நீர்க்குழாய் பொருத்துதல் | கரைச்சி |
| மின்னொட்டு | கரைச்சி |

தகைமைகள் :

பிரதான போதனாசிரியர்கள்:
1. NVQ Level 4 சான்றிதழ் (அல்லது)
2. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட 2 வருடத்திற்கு குறையாத தொழில்சார் டிப்ளோமா சான்றிதழ் (அல்லது)
3. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட 9 மாதங்களுக்கு குறையாத சான்றிதழுடன், 3 வருட தொழில் அனுபவமும் கொண்டிருத்தல் வேண்டும்.

உதவி போதனாசிரியர்கள்:
1. NVQ Level 3 தரச் சான்றிதழ் (அல்லது)
2. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட 1 வருடத்திற்கு குறையாத தொழில்சார் டிப்ளோமா சான்றிதழ் (அல்லது)
3. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட 9 மாதங்களுக்கு குறையாத தொழில்சார் சான்றிதழுடன் கூடிய 2 வருட தொழில்சார் அனுபவம் (அல்லது)
4. ஐந்து வருடங்கள் தொழில்சார் அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள், நேர்முகப்பரீட்சையினூடாக தெரிவு செய்யப்படுபவர்கள் பங்காளர் நிறுவனங்களினால் 6 மாதகால ஒப்பந்த அடிப்படையில் தொழிலுக்கு அமர்த்தப்படுவர்.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 06th July 2010
விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

Deputy Field Director,
World University Service of Canada
110, Model Tenement Road
4th Lane,
Kurumankadu,
Vavuniya.

WUSC SRI LANKA

Education Changes the World



# உங்களை அழைப்பவர் யார் என்று அறிந்து கொள்ளுங்கள்

யாழ் வாழ் மக்களும்
sltCLI
வசதியை பெற்றிடலாம்



CLI அலகு ரூ. 950/-

மாதாந்த கட்டணம் ரூ. 50/-+வரி

- அழைப்பவரின் இலக்கத்தை பார்க்கும் வசதி
- இலக்கங்களை சேமித்து வைத்து மீளப்பெறும் வசதி

CLI அலகுகளை சகல டெலிஷொப் நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்


மேலதிக விபரங்களுக்கு
(021) 2 222 231/2 222 232

www.slt.lk

Sri Lanka Telecom



## புதிய முதலீட்டு வாய்ப்பு புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை



### யாழ்.மக்களுக்கான.....
### 'பங்குச்சந்தைப் பயன்நுகர்வுக் கருத்தரங்கு'

இடம்: பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் யாழ்ப்பாணம்.
காலம்: 2010 ஜூன் மாதம் 26 ஆம் திகதி சனிக்கிழமை
நேரம்: காலை 9 மணி தொடக்கம் மதியம் 1 மணிவரை

அனுமதி இலவசம்

**வளவாளர்கள்**

★ நீண்டகால நிதித் திட்டமிடல்
பேராசிரியர் மா.நடராஜசுந்தரம்
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

★ பங்குச்சந்தை முதலீட்டு நடைமுறைகளும் அவற்றிலிருந்தான பெறுமதி சேர்ப்புக்களும்
திரு.கோடன் நடேசன்
(இயக்குநர், சி.ரி.சிமித் பங்குத்தரகர் நிறுவனம்)

★ நம்பிக்கை அலகுகளுக்கான அறிமுகம்
திரு.எஸ்.ஜெயவர்மன்
(தலைவர், இலங்கை நம்பிக்கை அலகுகள் சம்மேளனம்)

பங்குச்சந்தை பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு:
0212221455/0215672444
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
யாழ்ப்பாணக் கிளை
398/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

CSE
COLOMBO STOCK EXCHANGE



# மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்

உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு...

# திருமண அழைப்பிதழ் காட்சியறை

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 300றகு மேற்பட்ட பல வர்ண புத்தம் புதிய டிசைன்களுடன் மலிந்த விலையில் பிறிண்டிங் வசதியுடன் பெற்றுக்கொள்ளலாம்.

MATHI COLOURS PRINTERS
WEDDING CARD SHOW ROOM

15/2, முருகேசர் லேன், நல்லூர்.
T.P: 021 2229285, 077 7222524
e-mail: mathicolours@gmail.com
web : www.mathicolours.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “நான் படகு ஒன்றின் மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்தேன். வீணாகக் கஷ்டப்பட்டு எனது பணம் முழுவதையும் இழந்தேன்.”

சத்தூர், வயது 28
வெளிநாட்டில் தடுத்து வைக்கப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர்.



ஒழுங்கற்ற முறையில் அவுஸ்திரேலியா செல்வதற்காக சத்தூர் தனது வாழ்நாள் சேமிப்புக்கள் அனைத்தையும் செலவிட்டதுடன் கடனும் வாங்கினார். துரதிஷ்டவசமாக ஆட்கடத்தல்காரர்கள் வழங்கிய உறுதிமொழி நிறைவேறவில்லை. மற்றொரு நாட்டில் தடுத்து நிறுத்தப்பட்ட சத்தூர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். தற்போழுது, சத்தூர் எல்லாவற்றையும் இழந்துள்ளார். தன்னையும், தனது குடும்பத்தையும் பராமரிக்க முடியாதுள்ளது. முறையற்ற விதத்தில் அவுஸ்திரேலியா செல்ல முயற்சிக்கும் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் அனர்த்தங்களை விளக்கும் கதைகளில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் எண்ணிலடங்கா இலங்கையர்கள் ஆட்கடத்தல்காரர்களுக்கு பலிக்கடாக்களாகின்றனர். படகு மூலம் முறையற்ற விதத்தில் பயணம் செய்பவர்கள் பட்டினியையும் துன்பங்களையும் எதிர்கொண்டு, தமது குடும்பம் உட்பட அனைத்தையும் இழக்கும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். நீங்கள் எதனை இழக்கப் போகின்றீர்கள்?

**இலங்கையர்களின் புகலிடக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுவதை அவுஸ்திரேலியா இடைநிறுத்தியுள்ளது.**

உங்கள் பணத்தை பயனற்ற பயணத்திற்கு வீணாக்க வேண்டாம்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் உங்களுக்கு வழங்கும் சேமநலச் செய்தி.

ஒருவர்: உண்மைச் சம்பவங்கள் மற்றும் மக்கள் கூறிய கதைகள், அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தச் சமூக அறிவித்தல் தயாரிக்கப்பட்டுள்ளது.


# சூரியன் ஒரு முழுக் கோளம் அல்ல

சூரியன் ஒரு முழுக்கோளம் என்கிற நம்பிக்கை அண்மையில் தகர்க்கப்பட்டிருக்கிறது.

சூரியனின் கோளத்தன்மையை நாசா விஞ்ஞானிகள் அண்மையில் துல்லியமாக அளந்துள்ளனர். இப்படி அளவீடு செய்வதற்கு - என்னும் விண்தொலைநோக்கி பயன்பட்டுள்ளது. சூரியப் புள்ளிகள் தீவிரமாக இயங்கும் நாள்களில் சூரிய நடுக்கோட்டின் ஆரம், துருவ அச்சின் ஆரத்தைக் காட்டிலும் சற்றுப் பெரியதாக இருக்கிறதாம். சூரியனைச் சுற்றிலும் பழத்தோல் போன்ற ஒரு பொருள் உருவாவதால் துருவப் பகுதிகளில் நசுங்கிப் போன கோளமாகச் சூரியன் தோற்றமளிக் கிறதாம். சூரியனின் இடுப்பு சற்று பருத்திருக் கிறது என்பதுதான் இதன் பொருள்.

இந்தப் ‘பழத்தோல் பதுக்கம்’ காரணமாகச் சூரியன் ஒரு முழுமையான கோளம் இல்லை என்ற கருத்து உறுதிப்படுகிறது. சூரியனின் தீப்பிழம்புகளை ஆராய்வதற்காக 2002 இல் - என்னும் விண்தொலைநோக்கி ஏவப்பட்டது. எக்ஸ் கதிர்களையும், காமா கதிர்களையும் பயன்படுத்தி இந்த விண்தொலைநோக்கி அளவீடுகளைச் செய்துள்ளது.

விண்மீன்களில் சூரியன் மட்டுமே மிக அதிகமான ஈர்ப்பு விசையைப் பெற்றிருக்கிறது. சூரியனின் கோள வடிவம் 0.001 சதவீதம் என்று இது நாள் வரையில் நம்பப்பட்டு வந்தது. நிமிடத்திற்கு 15 சுற்றுகள் வீதம் சுழலக்கூடிய விண்தொலைநோக்கியின் பொருளருகு துளை வழியாகச் சூரிய வட்டத்தையும், தீப்பிழம்புகளையும் கண்காணித்தபோது, சூரியன் முழுமையான கோளம் இல்லை என்ற உண்மை தற்செயலாக அறியப்பட்டுள்ளது.

இந்தப் பழத்தோல் பதுக்கம் காந்தப்பண்புகளைக் கொண்டதாம். சூரியப்பரப்பல் குமிழ்களாகப் படரும் இந்த மேற்பரப்பிற்கு என்று பெயரிட்டுள்ளனர். பானையில் கொதிக்கும் நீர்க்குமிழ்களைப் போன்று பிறப்பெடுக்கும் இந்த மெள்ள மெள்ள விண்மீன்களின் அளவிற்கு உருப்பெருக்கம் அடைகின்றனவாம். அளவு பூமியைப்போல் இருமடங்கு என்றும் கணக்கீடுகள் காட்டுகின்றன. இவை முழுக்க முழுக்கக் காந்தப்புலப் பிளாஸ்மாவால் ஆனவையாம்.

மையத்தில் தோன்றும் காந்தப்புலம் மெதுவாக மேற்பரப்பை அடைகிறது. சூரியனில் ஏற்படும் காந்தப்புல மாற்றங்களால் - எனப்படும் சூரிய ஈர்ப்பு விசையில் அலைவுகள் ஏற்படுகின்றன. சூரியனின் காந்தப்புல ஏற்றத்தாழ்வுகள், பூமியின் காந்தப்புலத்தை நிச்சயமாக பாதிக்கக்கூடியவை.


**வேதிகா** சுக சௌந்தர்ய வளர்ச்சிக்கு ஆயுர்வேத பராமரிப்பு

VEDICA



**Vedica குங்குமம் கலந்த Fairness Cream**

- இயற்கை சருமத்திற்கு பிரகாசத்தை வழங்கி பொலிவினை தரும்
- சருமத்திற்கு போஷணையை வழங்கி ஈரலிப்புத்தன்மையை பேணும்
- சூரியக்கதிர்களிலிருந்து சருமத்தை பாதுகாக்கும்
- சருமம் கருமையடைவதை (pigmentation) தடுக்கும்

**Vedica குங்குமம் கலந்த Fairness Formula**

- இயற்கை சருமத்தினை பிரகாசமாக்கிடும்
- பருக்கள் மற்றும் கரும்புள்ளிகளை அகற்றும்
- சருமத்திற்கு ஈரலிப்புத்தன்மையை வழங்கி பளபளப்பாக்கும்.

www.vedicbiolabs.com


A GMP CERTIFIED COMPANY

பெளசி மற்றும் பாமசிகளிலும் ஆயுர்வேத மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஹாகோடஸ் (பிரைவேட்) லிமிட்டட் (கன்சியுமர் டிவிஷன்), இல.14 புகையிரத நிலைய வீதி, தெகிவளை, தொ: 011-2740580, 011-2740586


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமருந்தான துளசி

துளசி என்றால் எல்லோருக்கும் தெரியும். அதன் மருத்துவ குணங்கள் ஏராளம். அதற்கு ஆன்மீக மகத்துவமும் உள்ளதாக புராணங்கள் கூறுகின்றன. எல்லோர் வீட்டிலும் இருக்க வேண்டிய செடிகளில் முதன்மையான இடத்தைப் பிடித்திருப்பது துளசி செடிதான்.

அவரவர் வசதிக்கேற்ப சிறிய தொட்டியில் கூட துளசி செடியை வளர்த்து வரலாம். ஆனால் அதனை கவனமாகப் பராமரிப்பது அவசியம். எளிதாகக் கிடைக்கும் அந்த துளசியில்தான் எத்தனை எத்தனை மகத்துவங்கள். அவற்றில் ஒரு சில உங்களுக்காக.

துளசிச் செடியை ஆரோக்கியமான மனிதன் தினமும் தின்று வந்தால் குடல், வயிறு, வாய் தொடர்பான பிரச்சினைகள் அவன் வாழ்நாள் முழுவதும் வராது. ஜீரண சக்தியும், புத்துணர்ச்சியையும் துளசி இலை மூலம் பெறலாம். வாய் துர்நாற்றத்தையும் போக்கும்.

நமது உடலுக்கான கிருமி நாசினியாக துளசியை உட்கொள்ளலாம். துளசி இலையைப் போட்டு ஊற வைத்த நீரைத் தொடர்ந்து பருகி வந்தால் நீரிழிவு நோய் நம்மை நாடாது.


கோடை காலம் வரப்போகிறது. வியர்வை நாற்றமும் கூடவே வந்துவிடும். அதனைத் தவிர்க்க குளிக்கும் நீரில் முதல் நாளே கொஞ்சம் துளசி இலையைப் போட்டு வைத்து அதில் குளித்தால் விர்வை நாற்றம் ஏற்படாது.

தோலில் பல நாட்களாக இருக்கும் படை, சொரிகளையும் துளசி இலையால் குணமடையச் செய்ய முடியும். துளசி இல்லையை எலுமிச்சை சாறு விட்டு நன்கு மை போல் அரைத்து அந்த விழுதை தோலில் தடவி வந்தால் படை சொரி இருந்த இடம் தெரியாமல் மறையும்.

நீரிழிவு நோய் வந்தவர்களும் துளசி இலையை மென்று சாப்பிடலாம். இதனைச் செய்து வந்தால் நீரிழிவு நோய் அளவு கட்டுப்படும். மருந்து மாத்திரை மூலம் குணப்படுத்த முடியாததை இந்த அருமருந்தான துளசி செய்து விடும்.

சிறுநீர் கோளாறு உடையவர்கள், துளசி விதையை நன்கு அரைத்து உட்கொண்டு வர வேண்டும். கூடவே உடலுக்குத் தேவையான அளவிற்கு தண்ணீரும் பருகி வர பிரச்சினை சரியாகும்.

# உங்கள் குழந்தை புத்திசாலியாக வேண்டுமா?



குழந்தைகளுக்கு சிறு வயதிலிருந்தே சில நல்ல ஆரோக்கியமான உணவு வகைகளை கொடுத்து பழகி விட்டால் நல்ல ஆரோக்கியமாக இருப்பார்கள்.

குழந்தைகளின் புத்திக் கூர்மைக்கு கரட்டை துருவி அதில் சிறிது பால்,ஐஸ் கட்டிகள் சேர்த்து நன்கு மின்அரவை இயந்திரத்தில்(மிக்ஸி) அரைத்து வடிகட்டி அதில் தேன் கலந்து கொடுக்கவும்.

இதை குடிப்பதால், கண்கள் தெளிவு பெறுகிறது, உங்கள் குழந்தைகளின் நிறத்திலும் மாற்றம் காணப்படும்., தேன் சேருவதால் பேச்சிலும் தெளிவு வரும். தினமும் கொடுங்கள், இல்லை வாரத்துக்கு மூன்று முறை வாரத்துக்கு ஒரு முறையாவது கொடுக்க வேண்டும்.




# பல் ஈறுகளில் இரத்தக் கசிவா?

## கருவிப்பட்டை

பல் ஈறுகளில் இரத்தம் கசிந்தால் தொற்றுள்ளது என்று அர்த்தம். பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாவிட்டால் நாம் உண்ணும் உணவில் துணுக்குகள் பல்லிடுக்குகளில் ஈறை ஒட்டி தங்கி நாளடைவில் பற்காரையாக மாறும்.

இந்த நிலையில் அதிக இரத்தக் கசிவை ஏற்படுத்தும். பின்னர் ஈறு மற்றும் தாடைகளில் பெரியோடான்டிடிஸ் எனும் நோயை உண்டாக்கி பல்லை வலுவிழக்கச் செய்யும். இறுதியில் பற்களை விழச் செய்யும். நம்மில் 85 சதவீதமானோர் நாள்பட்ட ஈறு தொற்றால் பற்களை இழக்கின்றனர்.


## தடுப்பதற்கான வழிமுறைகள்

மென்மையான முனைகள் கொண்ட பற்தூரிகை மிருதுவாக பற்களைச் சுத்தம் செய்ய வேண்டும். உப்புக் கரைசலினாலோ அல்லது ஹைடிரஜன் பெராக்ஸடு கரைசல் கொண்டோ வாயைக் கொப்பளிப்பதன் மூலம் இதைத் தடுக்கலாம்.

## வராமல் காத்துக் கொள்வது எப்படி ?

தினமும் இருமுறை பல் துலக்குவது; இரத்தக் கசிவைக் கண்டவுடன் பல் மருத்துவரிடம் சென்று பற்களை சுத்தம் செய்து கொள்வது, குறைந்தது ஒருமுறையாவது முறைப்படி வாய் கொப்பளிப்பது; அடிக்கடி இனிப்பு சாப்பிடுவதைத் தவிர்ப்பது; ஆண்டுக்கொரு முறை பல் மருத்துவரை நாடி சிகிச்சை பெறுவது, பக்டீரியாவை நீக்கும் குளோர்ஹெக்ஸிடைன் கொண்டு வாயைக் கழுவுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் ஈறுத் தொற்று, இரத்தக் கசிவு ஆகியவற்றைத் தடுக்கலாம்.

# அடிக்கடி ஞாபக மறதி வருகிறதா?



வேக வைத்த உருளைக்கிழங்கை கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு மறுப்டி யோசியுங்கள். ஞாபகம் வந்துவிடும்.

சாதாரண மாச்சத்து உணவு ஞாபக சக்தியை உணவு சாப்பிட்ட பின்னர் ஓரிரு மணிகள் கூட்டுவதாக ரொராண்டோ பல்கலைக்கழக ஆராய்ச்சியில் நிரூபித்து உள்ளனர். 60 தொடக்கம் 82 வயது வரை மனிதர்களுக்கு குளுக்கோஸ், பார்லி, உருளைக்கிழங்கு போன்ற உணவினை கொடுத்து ஆராய்ந்த பொழுது 37 சதவீதம் பார்லி உண்டதனாலும், 32 சதவீதம் உருளைக்கிழங்கு உண்டதனாலும், 8 சதவீதம் குளுக்கோஸ் உணவு உண்டதனாலும் ஞாபகம் கூடியுள்ளது தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கடமை கடமை

கச்சாயில் இரத்தினம்

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் மூத்த சிறுகதை எழுத்தாளர்களில் கச்சாயில் இரத்தினமும் குறிப்பிட்டுக் கூறத்தக்க ஒருவராவார். அவரது சிறுகதைகள் ஈழநாடு மற்றும் சுதந்திரன் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன.
'பாட்டாளி வாழ்க்கையிலே' அவரது சிறுகதைத் தொகுதியாகும்.
'வன்னியின் செல்வி' அவரது சரித்திர நாவல்.
அமரராகி விட்டார்
1962ஆம் ஆண்டில் ஈழநாடு பத்திரிகையில் வெளியான அவரது "கடமை, கடமை" சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 154

டாக்டர் சுந்தரம் அந்த ஆஸ்பத்திரிக்கு கடமையாற்ற வந்து சுமார் ஆறுமாதகாலங்களாகிவிட்டன. ஆனால் அவருடைய மனசை அங்குள்ள மற்ற டாக்டர்களுக்கோ அல்லது நேர்ஸ் மார்களுக்கோ அறிந்து கொள்ள முடியவில்லை. அவர் மற்றவர்களுடைய பார்வைக்கு ஒரு அதிசய மனிதராகவே தோன்றினார்.

டாக்டர் சுந்தரம் கடமையாற்றத் தொடங்கிய அந்த ஆறுமாதங்களில் ஒரு நாளேனும் ஆஸ்பத்தரிக்கு வராமல் பங்களாவில் இருக்கவில்லை. எந்நேரம் பார்த்தாலும் ஆஸ்பத்திரியில் அவரைக் காணலாம். ஓயாமல் அவர் 'வார்ட்டைச்' சுற்றிப் பார்வையிட்டுக் கொண்டே இருப்பார். அதனால் அவரின் கீழ் வேலைபார்க்கும் டாக்டர்களுக்கும், அப்போதிக்கரிமார்களுக்கும் மற்றும் ஆஸ்பத்திரிச் சிப்பந்திகளுக்கும் பெருத்த சங்கடமாய் இருந்தது. அவர்கள் அவரை ஒரு 'புதுமை மனிதர்' என்று கூறத் தொடங்கினார்கள். டாக்டர் சுந்தரத்துக்கு வயது சுமார் முப்பது இருக்கும். நல்ல வசீகரமான தோற்றம், விசாலமான நெற்றி, நெற்றியில் சில சுருக்குகள் நெளிந்து நெளிந்து உழுதுவிட்ட வயலைப் போலக் காணப் பட்டன. முகத்தில் எந்நேரமும் புன்முறுவல் தவழ்ந்து கொண்டிருக் கும். எப்பொழுதும் அவருடைய அகன்று விரிந்த நீல விழிகள் எதையோ சிந்தித்துக் கொண்டேயிருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டும்.

டாக்டர் சுந்தரத்துக்கு அழகான மனைவி இருந்தாள். நல்ல அழகான குழந்தை ஒன்றும் இருந்தது. ஆனால் அவர் என்றைக்கும் தமது மனைவியுடன் கூடி உலாத்தவோ அல்லது கடற்கரைக்கோ போவதில்லை. அவர் மனைவியை வெளியில் பார்ப்பதே அபூர்வம். எந்த நேரமும் வங்களாவில் தான் செய்யக்கூடிய வேலைகளைச் செய்துகொண்டே இருப்பாள். குழந்தையைக் கவனிப்பாள். தன் கணவனை அழைத்துக் கொண்டு சினிமாவுக்குப் போகவோ தெருவில் உலாத்தவோ அவள் போவதில்லை. டாக்டர் அவளை அப்படி அழைத்துக் கொண்டு போவதும் இல்லை.

இவை அனைத்தும் அங்குள்ளவர்களுக்கு பெருத்த வியப்பை உண்டு பண்ணி விட்டது. அவர்கள் எதைச் செய்ய முடியும். எதையும் கண்டும் காணாமல் பேசவும் மனப்பயம். எப்படியோ அவர் ஒரு பெரிய டாக்டர். அவரிடத்தில் காணப்படும் குறை நிறைகளை அவர் அதிகாரத்துக்குட்பட்டவர்கள் பேசக் கூசுவது இயல்புதானே.

ஒவ்வொருவரும் தங்கள் மனதில் பெரிய டாக்டரைப் பற்றி பலவிதமான அபிப்பிராயங்களை வைத்துக் கொண்டு நல்ல மனிதரைப் போல தங்கள் வேலைகளைச் செய்தார்கள்.

டாக்டர் சுந்தரம் ஆஸ்பத்திரிக்கு வந்த பிறகு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வந்தது. பல பெரும் பிரிவுகளிலிருந்தும் நோயாளிகள் தினமும் இங்கு வந்து குவிந்து கொண்டே இருந்தார்கள். அதனால் அந்த ஆஸ்பத்திரியில் வேலைபார்க்கும் அத்தனை பேருக்கும் மூச்சு விடக்கூட அவகாசமில்லை. ஓயாமல் ஓடியாடி தங்கள்

தங்கள் கடமைகளைச் சுறு சுறுப்பாகச் செய்ய வேண்டியிருந்தது.

டாக்டர் சுந்தரத்தின் பொறுமையான குணமும் நிறைந்த அன்பும் பொதுமக்களின் மனசைக் கவர்ந்து விட்டது. டாக்டர் சுந்தரத்தை அவர்கள் வாயார வாழ்த்தினார்கள்; வானுயரப் புகழ்ந் தார்கள். அவர் அந்த ஆஸ்பத்திக்கு வந்த நாள் தொடக்கம் அங்கே வருகின்ற நோயாளிகளுக்கு நல்ல காலம் பிறந்தது. அவர் அங்கே வருகின்ற ஒவ்வொரு நோயாளியையும் தனது சொந்தமானவர்களை பரிசோதனை செய்து பார்ப்பதைப் போல எம்மட்டோ அக்கறையாய் பார்த்து வந்தார். அதனால் ஊரவர்கள் "ஒரு புண்ணியவான் டாக்குத்தர் இப்போது வந்து இருக்கிறார்கள். அவர் வந்த பிறகுதான் எங்களின்ரை ஊரிலே வருத்தம் குறைஞ்சது. அவரின்ரை மனைவி பிள்ளைகளுக்கு கடவுள் ஒரு குறையும் விடமாட்டார்" என்று அவரை புகழ்ந்து பேசினர்.

அன்று டாக்டர் சுந்தரம் பகல் ஒரு மணி வரைக்கும் நோயாளர்களைப் பரிசோதனை செய்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மருந்து வகைகளை எல்லாம் எழுதிக் கொடுத்துவிட்டுச் சாப்பிட பங்களாவுக்கு போனார்.

பங்களாவுக்கு வந்தவர் தமது பகற் சாப்பாட்டை முடித்துவிட்டுச் சிறிது நேரம் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு பேப்பர் வாசித்தார். அவருக்குப் பக்கத்தில் அவர் அன்பு மனைவி வந்து இருந்து அவர் பார்த்து விட்டுக் கொடுத்த பேப்பரை வாங்கி வாசித்துக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது அங்கே வந்த தந்திக்காரன் தந்தி ஒன்றை டாக்டரிடம் கொடுத்து அவர் கையெழுத்தை வாங்கிக் கொண்டு போனான். டாக்டர் தந்தியைப் பிரித்து வாசித்தார். தந்தியில் 'தாயாருக்கு மிகவும் கடுமையான வருத்தம். உடனே வரவும்'' என்று இருந்தது. அதை வாசித்ததும் அவர் முகம் சிறிது வாட்டமுற்று விட்டது. எப்படியோ! பெற்ற தாய்க்கு வருத்தம் கடுமை என்றால் மனம் கலங்காமல் இருக்க முடியுமா?

கணவனின் முகம் வாடிவிட்டதைக் கண்ட அவர் மனைவி அகல்யா அவரைப் பார்த்து "இஞ்சாருங்கோ! அதுஎன்ன தந்தி. ஆருக்குச் சுகவீனம்!" என்று மிக்க அக்கறையோடு கேட்டாள். "அம்மாவுக்கு வருத்தம் கடுமையாம். எங்களை உடனே வரட்டுமாம்" என்றார் டாக்டர். "என்ன மாமிக்கு வருத்தம் கடுமையோ? அப்ப வெளிக்கிடுங்கோ போவம்" என்று பரபரப்போடு கூறினாள் அகல்யா.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகம் ஔடதம்

எண்ண உணர்வுகளை
நினைவுகளை வேட்கைகளை
வெளிப்படுத்த கலை
இலக்கியங்கள் ஊடகம்!

வெளிப்படுத்தல்கள்
மன அழுத்தத்தைக் குறைத்து
ஆற்றுப்படுத்தல்கள்
செய்தால் அவை ஔடதம்!

திறமைகள் வெளிப்பட்டு
வெற்றிகளைத் தேடித்
தந்தால் அவை மகுடம்!

களமமைத்துக் கொடுத்தலில்
பத்திரிகைகள் சஞ்சிகைகள்
தாராளம் காட்ட வேண்டும்
என்பது பொதுவான
எதிர்பார்ப்பு வேண்டுதல்கள்!

இ. ஜெயபாலன், சங்கானை.

# மகிழ்ச்சியும் சோகமும் தந்த மகப்பேறு

இலக்கியக் காட்சி 46

பல ஆயிரம் ஆண்டுகள் அயோத்தியை ஆட்சி செய்த தசரத னுக்குப் புத்திர பாக்கியம் இல்லையே என்ற ஒரு மனக் கவலை இருந்து கொண்டே வந்தது. தசரதனது மனக்குறையைப் போக்க கலைக்கோட்டு முனிவர் நடத்திய யாகத்தின் பயனாக இராமன் முதலிய நால்வரை நன் மக்களாக அடைகின்றான். அவனது வாழ்க்கையில் வசந்தம் வீசுகின்றது. ஒரு நாள் விசுவா மித்திர முனிவர் வந்து தனது தவவேள்வியைக் காப்பாற்றித்தர "நின்சிறுவர் நால்வரிலும் கரிய செம்மல் ஒருவனை"த் தரும்படி கேட்கிறார்.

நால்வரை நன்மக்களாகப் பெற்றாலும் தரசரனுக்கு மிகப் பிரியமான இராமனைத் தரும்படியல்லவா முனிவர் கேட்டு நிற்கிறார்! தசரதனுடைய மனம் குழப்பத்தில் ஆழ்கிறது!

**எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பிய சொல்**
**மருமத்தின் எறிவேல் பாய்ந்த**
**புண்ணில் ஆம் பெரும் புழையில் கனல் நுழைந்தால்**
**எனச் செவியில் புகுதலோடும்**
**உள் நிலாவிய துயரம் பிடித்து உந்த**
**ஆருயிர் நின்று ஊசலாடக்**
**கண் இலான் பெற்று இழந்தான் என உழந்தான்**
**கடும் துயரம் கால வேலான்.**

என இதனைக் காட்சிப்படுத்துகின்றார் கம்பர். அதிக காலம் புத்திரப்பேறு இல்லாமல் தவஞ் செய்து பெற்ற பிள்ளைகள். அவர்களை இழப்பதென்பது மிகவும் துக்ககரமானது; ஆனால் முனிவர், தனக்கு உதவிக்குத் தரும்படிதானே கேட்கிறார்; இராமனுக்கு விசுவாமித்திரர் உதவியால் பல நன்மைகள் கிடைக்க விருப்பதை மனதில் கொண்ட வசிட்ட முனிவர், தசரத மன்னனுக்கு ஆறு தல் கூறி, இராமனுக்கு வரவிருக்கும் நன்மை கூறி இணங்க வைக்கிறார். இராமன் படைக் கலங்களுடன் புறப்பட்டு முனிவரோடு செல்கிறான். இலக்குமணனும் அல்லவா சேர்ந்து போகிறான்! இராமன் இருக்கும் இடத்தில் இலக்குமணனும் 'உளன்' என்பது விதியாயிற்றே! இராமனை வேள்வி காக்கத் தரும்படி தானே விசுவா மித்திரர் கேட்கிறார். இதில் தசரதனது உயிர் ஊசலாட வேண்டிய துன்பம் எதுவும் இல்லையே! ஏற்கனவே செவிவாயி லாக ஏற்பட்ட புண் அவன் மனதில் இன்னும் ஆறாமல் இருக்க, அப்புண்ணில் கனல் சுட்டது போல அவன் வேதனைப்பட்டான் என்கிறார் கம்பர். இதனை நாம் அறிவதற்கு, இராமன் பிற்காலத்தில் தசரதனைப் பிரிந்து போகும் பொழுது, தனது உயிர் அகத்ததோ புறத்ததோ என ஊசலாடிக்கொண்டிருக்கும்போது, தனது அன்பு மனைவியான இராமனைப் பெற்ற தாயான கோசலைக்கு தசரதன் சொன்ன செய்தி என்ன என்று பார்க்க வேண்டும்!

**பொன் ஆர் வலயத் தோளான், கானோ புகுதல் தவிரான்**
**என் ஆர் உயிரோ அகலாது ஒழியாது; இது கோசலை கேள்;**
**முன் நாள் ஒரு மாமுனிவன் மொழியும் சாபம் உளது என்று**
**அந்நாள் உற்றது எல்லாம் அவளுக்கு அரசன் அறைவான்**

என்கிறார் கம்பர். விசுவாமித்திர முனிவரோடு சென்ற இராமன், முனிவரது வேள்விக்கு இடையூறாக இருந்த தாடகையையும் அவளது கூட்டத்தாரையும் கொன்றழித்து, அகலிகை சாபம் நீக்கிக் கௌதமரிடம் ஒப்படைத்து, சீதையை மணஞ் செய்து தனது அவதார நோக்கத்தின் ஒரு பகுதியை நிறைவு செய்துவிட்டு அயோத்திக்குத் திரும்புகிறான்.

பன்னிரண்டு வருடம் அவனது இன்ப வாழ்க்கை கழிகிறது. தசரத மன்னனும் குறையின்றி முறைசெய்து அரசாட்சி செய்கிறான். பின்னர் தனது மூத்த மகன் இராமனுக்கு முறைப்படி பட்டாபிசேகம் செய்துவைக்க எண்ணி அதற்கான ஆயத்தங்களைத் தரசதன் செய்து கொண்டிருக்கிறான். அந்தச் சமயத்தில் பரதன் கேகய நாட்டுக்குச் சென்றிருக்கிறான். மந்தரையின் சூழ்ச்சியால் மனம் மாறிய கைகேயி, தன் மகன் பரதனுக்குப் பட்டாபிசேகம் செய்யும் படி தசரதனுக்கு அழுத்தம் கொடுக்கிறாள். இரண்டு [illegible] படுத்திய பொழுது, சத்தியந் தவறாத தசரதன் "தந்தேன் வரம்" என்று கூறு கின்றான். அதன்படி இராமன் வன வாசம் செய்யப் புறப்பட்டுச் செல்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது தான் தசரதன் தன் இளமையில் பெற்ற சாபத்தினை தனது முதுமைக் காலத்தில் அதுவும் அவனது உயிர்பிரிவது நிச்சயமான நேரத்தில் மேற்கண்டவாறு கூறத்தொடங்குகின்றான்.

ஒரு நாள் இரவு நேரம், சரயு நதிக்கரைக்கு வேட்டைக் காகச் செல்கின்றான். சத்தத்தை இலக்காக வைத்து அம்பு எய்வதில் வல்லமை படைத்திருந்த தசரதன் அங்கே யானை தும்பிக்கையால் நீர் மொள்ளுவது போன்ற ஒரு சத்தம் கேட்டு அம்பை ஏவுகிறான், அந்தோ, பரிதாபம் எதிர்புறத்திலிருந்து 'ஐயோ செத்தேன்' என்று ஒரு மனிதக் குரல் கேட்கிறது!

அக்காட்டில் தவம் மேற்கொண்டு வாழுகின்ற கபோதிகளான பெற்றோருக்கு, அவர்களுக்கு கண்போல இருக்கும் தவச்செல்வன் குடத்தில் நீர்மொள்ளும் போது உண்டான சத்தத்தை, தசரதன் யானை நீர்குடிக்கும் போது எழும் சத்தமாக எண்ணி அம்பை விட்டதில் அந்தச் சிறுவனுக்கு அம்பு தைக்கிறது! அம்பும் வில்லும் கைநழுவ அரசன் மனிதக் குரல் வந்த திசையில் ஓடுகிறான்.

"கண்களை இழந்தவர்களான எனது பெற்றோரின் தாகத்துக்கு இந்த நீரைக் கொடுத்து, இப்போது நடந்தவற்றையும் சொல்லுவாய்; அல்லது சாபம் பெறுவாய்" என்று சொன்ன சிறுவனின் உயிர்பிரிகிறது.

கண்ணீர் மல்கத் தண்ணீரைக் கொண்டு சென்று அப் பெற்றோரிடம் கொடுத்து, நடந்தவற்றையும் சொல்லி நிற்கிறான் தசரதன்.

**"ஏவா மகனைப் பிரிந்து இன்று எம்போல் இடர் உற்றனை நீ போவாய் அகல்வான்" என்னா பொன் நாட்டிடை போயினரால்**
என முனிவர்களின் சாபம் பெற்ற மன்னன்,
**"சிந்தை தளர்வுற்று அயர்தல் சிறிதும் இலெனாய் 'இன்சொல் மைந்தன் உளன்' என்றதனால், மகிழ்வொடு இவன் வந்தினொனால்;**
**அந்த முனி சொற்றமையின் அண்ணல் வனம் ஏகுதலும்**
**எம்தம் உயிர் வீகுதலும் இறையும் தவறா"** என்றான்

இவ்வாறு, தான் சாபம் பெற்றமை பற்றிக் கூறிக் கொண்டிருக்க, இராமன், இலக்குவனோடு சீதையோடும் வனம் சென்றுவிட்ட செய்தியைச் சுமந்திரன் கூறுகின்றான். மைந் தன் உளன் என்ற இன்சொல்லால் இளமையில் மகிழ்ந்திருந்ததும்; ஏவா மகனைப் பிரிந்து புத்திர சோகத்தால் இறப்பதை மறந்திருந்ததும் நினைவிற் சுமந்து தசரதனுடைய உயிர்பிரிகிறது.

*******

நா. நல்லதம்பி, மட்டுவில்

## சொற்சிலம்பம் - போட்டி இல: 118

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 | 5 | 6 |
| 7 | | | 8 | | | | |
| 9 | | 10 | | | 11 | | |
| | | 12 | | 13 | | | 14 |
| | 15 | | | | | 16 | |
| 17 | | | | | 18 | | |
| | | | | 19 | | | |
| 20 | | | | | | 21 | |

அனுப்புபவர் பெயர்:.................................................

விலாசம்:.................................................

.................................................

கையொப்பம்:.................................................

### இடமிருந்து வலம்

1. பொய்யாகப் பாவனை பண்ணுவது.
4. அவசரத்தை/அந்தரத்தை ஏற்படுத்துவது.
7. பெருக்கல் குறி.
8. முதல் பிள்ளையை இப்படி அழைப்பர்.
9. எரிந்த பின் மிஞ்சுவது.
11. மறைவில் தீட்டப்படும் திட்டம்.
12. கவலை.
15. பிரச்சினை.
16. அருகில் இருப்பதைச் சுட்டும் சொல்.
17. அகன்று போகும்/ தள்ளிப் போகும்.
18. கீழ்த்தனம்.
19. விடை.
20. தூங்குதல்/ நித்திரை கொள்ளுதல்.
21. நெருப்பில்லாமல் இது வராதாமே.

### மேலிருந்து கீழ்

1. கால்நடையாகச் செல்பவன்.
2. உயரமான கட்டடங்களுக்கு வர்ணம் பூச இதைத் கட்டுவார்கள். ஆண்கள் வீட்டில் உடுத்துவதையும் இப்படித்தான் அழைப்பர்.
3. முறைகெட்ட வாதம்.
4. பயம்/ பீதி.
5. வாய்ப்பான ஏற்பாடு.
6. சாப்பிடு.
10. ஒரு பொருளுக்குக் கேள்வி அதிகரித்ததும் வியாபாரிகள் புரியும் செயல் இது.
13. மண்ணுக்கு முந்தியது.
14. சிலை.
15. பலவல்ல.
16. வழமை.
17. பாராட்டி வழங்குவது.
18. வேகம்.
19. உணவுப் பொருளை அரைப்பது.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 116 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)பிரதிநிதி (5) கோழி (6) கதிரவன் (8) சகதி (10)வில் (12)வரி (13) அயலவன் (15)படம் (17)தகர் (18)கனல் (19)அமரத்துவம் (21)வாது (22)திருடு (23)பா

**மேலிருந்து கீழ்**

(1)பிரசவம் (2)திகதி (3)நிதி (4)திரவியம் (5)கோன் (7)வல்ல (9)கரி (11)அன்றில் (13)அடர்த்தி (14)வதனம் (15)பகர (17)தமது(18)கவடு (19)அவா

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 116 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — **பாமினி பிரதீபன்,** இல, 234, செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு, நல்லூர்.

**2 ஆம் பரிசு** — **பொ.சிவசுப்பிரமணியம்,** செம்பாட் டோலை, உடுப்பிட்டி.

**3 ஆம் பரிசு** — **தங்கவேலாஜினி அப்புத்துரை,** சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

**4 ஆம் பரிசு** — **கோ. நரேந்திரன்,** நாராயணன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

**5 ஆம் பரிசு** — **சி. அன்னலிங்கம்,** நெல்லியான் வீதி, கல்விளான், சுழிபுரம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **ச.கௌசிகன்,** இல.23, சிவன் பண்ணைவீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

(2) **க.நந்திகா,** 'சந்திரகிரி' வதிரி, கரவெட்டி.

(3) **ச.ஏகநாதன்,** பிள்ளையார் கோயிலடி, மாதகல்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தை சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### போட்டி விதிகள்

1. *வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
2. *ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
3. *உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
4. *போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
5. *வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*

*அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*

6. *பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 118**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 30.06.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*

7. *சொற்சிலம்பம் போட்டி இல.118 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 04.07.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

# கடமை கடமை

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

''அகல்யா நாங்கள் நினைத்த உடனே போகக் கூடிய வேலை அல்ல இந்த வேலை. உம் சரி நான் எதற்கும் ஒருக்கால் ஆஸ்பத்திரிக்குப் போய் பார்த்துவிட்டு வருகின்றேன். நீ வெளிக்கிடு'' என்று கூறிவிட்டு தமது 'ஸ்டெலஸ் கோப்பை'யும் கையில் எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அவர் எதிரில் நர்ஸ் கமலா மூச்சு வாங்க வாங்க ஓடிவந்தாள். அவள் ஓட்டமாய் ஓடிவருவதைக்கண்ட டாக்டர் சுந்தரம் கமலாவைப் பார்த்து ''மிஸ் கமலா, என்ன சங்கதி? யாருக்காவது வருத்தம் கடுமையோ?'' என்று மிக்க கரிசனையோடு கேட்டார்.

''ஓம் டாக்டர் ஒரு பெண்ணுக்கு மிகவும் ஆபத்து. அவளுக்கு குழந்தை பிரசவிக்க வேண்டிய நேரம் தவறிவிட்டது. தயவு செய்து நீங்கள் அவளைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும்'' என்றாள் நர்ஸ் கமலா.

நர்ஸ் கமலா கூறியவற்றைக் கேட்ட டாக்டர் சுந்தரத்தின் சிந்தனையில் உதித்த எண்ணம் எல்லாம் எங்கோ மாயமாய் மறைந்துவிட்டன. அவர் நேரே பிரசவ வாட்டிற்குப் போனார். அங்கே இரண்டாவது டாக்டர் விசுவநாதனும் சில நர்ஸ்மார்களும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் டாக்டர் சுந்தரத்தைக் கண்டதும் அந்தக் 'கேஸ்' மிகவும் ஆபத்தான கேஸ்' என்றும் அந்தப் பெண்ணைத் தப்பவைக்க வேண்டுமானால் உடனே சத்திரசிகிச்சை அளிக்கவேண்டும் என்று கூறினார்கள்.

டாக்டர் உடனே அந்தப் பெண்ணைச் சத்திர சிகிச்சை அளிக்கும் அறைக்குக் கொண்டு போகுமாறு கூறிவிட்டு, அவர் சத்திரசிகிச்சை செய்ய ஆயத்தமானார்.

மிக்க கவனத்தோடு டாக்டர் சுந்தரம் சத்திரசிச்சையை அந்தப் பெண்ணுக்கு வெற்றிகரமாக செய்து முடித்தார்.

குழந்தை ''குவா குவா'' என்று அழுதது. ஆனால் இனித் தாய்க்கு சுய அறிவு வரும் வரைக்கும், அவளுக்குப் பக்கத்திலிருந்து முக்கியமான சில சிகிச்சைகளைச் செய்ய வேண்டும். அதனால் அவளைக் ''கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று டாக்டர் விசுவநாதனிடம் கூறிச் சென்ற டாக்டர் சுந்தரத்தின் மனசு நிம்மதி அடையவில்லை. அந்தப் பெண்ணின் உயிர் அவர் கையில்தான் தங்கியிருப்பது போன்ற மனப்பிரமை ஏற்பட்டு அவரை அங்காலே செல்ல விடாது தடுத்துவிட்டது.

மீண்டும் அவர் திரும்பி வந்து அவள் உடம்பிலுள்ள உஷ்ண நிலையை பரிசோதித்துப் பார்த்தார். உஷ்ண நிலை மிக மந்தமாக இருந்தது. உடனே அவர் அங்கு நின்ற நர்ஸ்மாரிடம் அவள் உடம்பில் உஷ்ணம் குறையாமல் இருக்க சுடுதண்ணீர் 'டியூப்புக்களை' அவள் உடம்புக்கு அணையாக வைக்கும்படி கூறிவிட்டு, அவரும் அந்த இடத்திலேயே இருந்து கொண்டார்.

இரவு சுமார் பத்து மணியளவில் அந்தப் பெண்ணுக்கு சுய அறிவு வந்தது. அதன் பிறகு அவளுக்கு செய்ய வேண்டிய சிகிச்சை முறைகளை எல்லாம் அங்குள்ள நார்ஸ்மாரிடம் கூறிவிட்டு அவர் தனது பங்காளவை நோக்கி வந்து கொண்டிருந்தார். அகல்யா சாயந்தரம் மூன்று மணியிலிருந்து இரவு பத்து மணி வரைக்கும் தனது கணவனது வரவை எதிர்பார்த்துப் பார்த்து ஏமாந்து போனாள். அவளுக்கு மனசு அலுத்து விட்டது. அவள் அதுவரைக்கும் உடுத்து இருந்த உடையைப் போய் உள்ளறையில் மாற்றிக்கொண்டு வெளி விறாந்தைக்கு வந்து வழியைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

சுவர்க்கடிகாரத்தில் மணி பத்து அடித்து நிமிஷங்களும் மூன்றாகி விட்டன. அகல்யாவுக்கு தனது கணவரின் போக்கு ஒன்றும் புரியாத புதிராகவே இருந்தது. ''தாயாருக்கு வருத்தம் கடுமை, உடனே வாருங்கள்'' என்று தந்தி வந்தும்கூட அவர் ஆஸ்பத்திரியை விட்டு வரவில்லையே என்று என்பதை எண்ண அவள் மனம் துணுக்குற்றது. பெற்ற தாயாரைக் காட்டிலும் அந்த உத்தியோகம் ஒரு பெரிதா? என்று அவள் மனதில் எண்ணிக்கொண்டாள். அப்போது அங்கு வந்த டாக்டர் சுந்தரம் 'அகல்யா நான் உன்னை நெடுநேரம் காத்துக்கொண்டு இருக்க வைத்துவிட்டேன். என்ன செய்கிறது. ஆஸ்பத்திரயில் மிக ஆபத்தான கேஸ் ஒன்று இந்த நேரம் பார்த்துதான் வந்து சேர்ந்தது. அதை நான் கவனிக்காது போனால் நான் என் கடமையை சரிவரச் செய்யாதவன் ஆவேன். நான் இல்லாவிட்டால் மற்றவர்களால் எதுவும் செய்ய முடியாது. இவையாவும் நமக்கு கடவுளின் சோதனை. இனி நாங்கள் இந்த அவசரக் காலத்தின்படி வெளியே செல்ல முடியாது. இன்னும் என்ன! விடிய ஏழுமணித்தியாலங்கள் தானே இருக்கிறது. விடியட்டும் போவோம் என்று கூறினார்.

''இது நல்ல கடமை தான்'' உங்கள் அம்மாவுக்கு வருத்தம் கடுமை என்று தந்தி வந்து இருக்கிற இந்த நேரத்தில் இதை எல்லாம் பார்க்கலாமா? நாளைக்கு மாமிக்கு ஒன்றானால் உங்களை ஊரவர் என்ன எல்லாமோ சொல்லிக் குறைபாடுவார்கள்,'' என்றாள் அகல்யா.

''அகல்யா நாம் ஊரவருக்குப் பயந்து நமது கடமையைத் தவற விடக்கூடாது. ஊராருக்கு என்ன! எலும்பு இல்லாத நாக்கால் எதையும் பேசுவார்கள். அதை எல்லாம் நாம் காதிற் போட்டுக் கொள்வது தான் பிசகு. எவன் ஒருவன் கடவுளுக்குப் பயந்து தனது பணியைக் கண்ணியமாகச் செய்கிறானோ அவனே கடமையை சரிவரச் செய்த கனவானாவான்'' என்றார் டாக்டர்.

எடுத்ததற் கெல்லாம் ''கடமை, கடமை'' என்று கூறிக்கொள்ளும் அவள் கணவனுடைய பிடிவாத குணத்தைக் கண்டதும் ''சரி, இப்ப நீங்கள் போய் உங்கள் உடையை மாற்றிக் கொண்டு வாருங்கோ! சாப்பிட'' என்றாள்.

மறுநாள் அதிகாலையில் டாக்டர் தனது மனைவி குழந்தையுடன் தனது பெற்றோர் வீட்டுக்குப் போனார். அங்கே அவர் கண்ட பரிதாபகரமான காட்சி அவரைக் கதிகலங்க வைத்தது. அவர் தாயார் நல்லமணி அன்று இரவே இறந்து போய்விட்டாள்.

டாக்டரைக் கண்டதும் அங்கு கூடி நின்ற சுற்றத்தவர்கள் அவரைச் சுற்றி வளைந்து கொண்டு ''நீங்கள் நேற்று தந்தி கிடைத்தவுடன் வந்து இருந்தால் உங்கள் தாயாரின் கண்ணில் விழிக்க இருந்தது. அதை நீங்கள் தவற விட்டதால் உங்கள் தாயார் முகத்தில் விழிக்க உங்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை என்றார்கள்.

டாக்டர் அவர்களிடம் எதுவும் பேசவில்லை. அவர்கள் அன்று ஆஸ்பத்திரியில் இரண்டு ஜீவன்களை மீட்பதற்காக எவ்வளவோ பிரயாசித்தனர், ஆனால் அந்த நேரம் இங்கே அவர் தாயார் நல்லமணியின் உயிர் பிரிந்து விட்டது. என்ன நிகழ்ந்தாலும் மனிதன் கடமையைச் செய்ய தவறக் கூடாது என்பது அவர் இலட்சியம் அல்லவா? அதனால் அவர் தனது தாயாருக்கு அதற்குப் பிறகு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய ஆயத்தமானார். அவர் கண்களில் கண்ணீர் சுரந்து வழிந்தது. *****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய பயிற்சிகள் மூலம் மன அழுத்தத்தைக் குறைக்கலாம்

# அதிலிருந்து விடுபட துன்பத்தை இலேசாகக் கருதப் பழகுங்கள்

மனிதர்களுக்கு மன அழுத்தங்களை ஏற்படுத்தக் காரணிகளாக அமையும் விடயங்கள் குறித்துக் கடந்த பகுதியில் ஆராய்ந்தோம். அந்தவகையில் இத்தகைய மன அழுத்தங்களிலிருந்து விடுபட உதவும் வழிமுறைகள் குறித்து இத் தொடரில் ஆராய்தல் பொருத்தமாக அமையும்.

அ)உண்மையில் மன அழுத்தத்துக்கான அறிகுறிகள் தென்பட்டால் ஒரு நரம்பியல் நிபுணரிடமோ



(Neurologist) அல்லது ஒரு மனோ தத்துவ நிபுணரிடமோ (Psychologist) சென்று ஆலோசனை ஆரம்பத்திலேயே பெறுதல் இன்றியமையாதது. பொதுவாக மன அழுத்தம் நரம்புத் தொகுதியுடனேயே

## எது நடந்ததோ அது நன்றாகவே நடந்ததாகக் கொண்டு உங்கள் மனோ பலத்தை வளருங்கள்

கூடியளவில் சம்பந்தப்பட்டது.

எமது நாளாந்த வாழ்க்கையில்கூட சில விற்றமின்களின் பற்றாக்குறை (deficency) அழுத்தத்தை அதிகரிக்கிறது. உதாரணமாக Neuro - B நரம்புகளை வலுவடையச் செய்கின்றது.

கடுமையான உடல் உழைப்பு, கடுமையான நோய்த்தாக்கம், உடலில் இருந்து குருதி, போசனைப் பொருள்களின் இழப்புக்கள் கூட ஒரு தற்காலிக நரம்புத் தளர்ச்சியை ஏற்படுத்துவதனால், மனிதர்கள் ஒரு தற்காலிக குழப்ப நிலையில் காணப்படலாம்.

குறிப்பாகப் பெண்களில் மாதவிடாயின் போது அதிகளவு குருதி, போசனை இழப்புக்கள்கூட, கோபம்,

### மன அழுத்தங்களும் அதன் இயலாமையைத் தூண்டும் எண்ணங்களும் 3

எரிச்சல், ஏசுதல், குழப்பம் போன்ற தளர்ச்சியான மன மாற்றங்களைத் தற்காலிகமாக வெளிப்படுத்தும். இது மீளக்கூடியது.

ஆ) ஒரு நாளில் ஒரு குறித்த நேரத்தை ஒதுக்கி எமது மனதுக்கு இனிய பொழுது போக்கில் ஈடுபடுவதன்மூலம் மனத்தின் எண்ண ஓட்டத்தின் திசையை அடிக்கடி மாற்றுதல்.

உதாரணமாக: இனிய மலோடி இசைகளையோ, நாதஸ்வரக் கச்சேரிகளையோ கேட்கலாம்.

வீட்டின் அருகிலே ஒரு வீட்டுத் தோட்டத்தை அமைத்து அல்லது அழகுத் தாவரங்களை வளர்த்து நேரம் கிடைக்கும்போது அவற்றை மேற்பார்வையிடலும் இரசித்தலும். செல்லப் பிராணிகளாக நாய், பூனை, கிளி போன்றவற்றை வளர்த்துப் பராமரித்தல்.

இன்றைய நவீன அவசர உலகில் படுவேகமாக நிறுவனங்களிலே அலுவலர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இதில் கணனிகளின் பங்கும் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. தொடர்ச்சியாகக் கணனிகளுக்கு முன் இருந்து கிரகித்து வேலை செய்யும் பொழுது மூளையின் ஒரு சில புள்ளிகளில் மட்டும் இரத்த ஓட்டம் செறிவடைகின்றது. இது பின்னர் படிப்படியாக சூடாக்கம் அடைகின்றது. இவைகளே தலையிடி, ஒற்றைத் தலைவலி, கண்பார்வைக் குறைபாடுகளைப் பிற்காலத்தில் ஏற்படுத்துகின்றது.

இவற்றை உளரீதியாகக் குறைப்பதற்காகவே பாரிய நிதி நிறுவனங்களின் முன் பச்சை நிற பின்புலத்தில் உருவாக்கப்பட்ட மீன் தொட்டிகள், வளர்ப்புக் குருவிகளின் கூடுகள், பச்சைத் தாவரங்கள் என்பன உள்ளகத்தே அமைக்கப் பெற்றிருக்கும்.

ஆகக் குறைந்தது கணனியைத் தொடர்ச்சியாகப் பாவிக்கும் அலுவலர்கள் ஒரு மணிநேர இடை வெளியில் 5 - 7 நிமிடங்கள் இருக்கையை விட்டு எழுந்து நடந்து தூர உள்ள இயற்கையான மேற்கூறிய அமைப்புக்களின் அசைவை அவதானிப்பதன் மூலம் இரத்த ஓட்டம் மூளையின் அனைத்துப் பகுதிகளுக்கும் சமனாகப் பரம்பலடைகின்றது. இது அழுத்தத்தைக் குறைக்கின்றது எனலாம்.

சில சந்தர்ப்பங்களில் கடுமையான அழுத்தத்திற்கு உட்பட்டு இறுகிப்போன நோயாளிக்கு ஊசல்முறை சிகிச்சையும் வழங்கப்படலாம். இங்கு ஓர் ஊசலை அலைய விட்டு அதைத் தொடர்ச்சியாகக் கண்களால் கிரகித்தல். இதன் மூலம் மூளையின் ஓர் இடத்தில் செறிவடைந்த அழுத்தம் பரம்பலடைந்து சீராக்கப்படுகின்றது. (Pendulam Treatment)

இ) தேகத்திற்கு வலுவூட்டும் தேக அப்பியாசப் பயிற்சிகளில் ஈடுபடுதல். இதில் சைக்கிள் ஓட்டுதல், நீந்துதல் ஏனைய விளையாட்டுக்களையும் உள்ளடக்கலாம். இதன் மூலம் குருதிச் சுற்றோட்டம், தசைநார்களின் அசைவுகள் சீராக அமையும்.

ஈ) போசனை உடைய சம உணவை ஆறுதலாக இரசித்து ருசித்தல்.

உ) ஒழுங்கான எட்டுமணி உறக்கமும் ஓய்வும் மூளைக் கலங்களுக்கும் உடற் கலங்களுக்கும் ஓய்வளித்து மறுநாள் வேலைகளை உற்சாகமாகத் தொடங்க உதவுகின்றன.

ஊ) மூச்சுப்பயிற்சி ஐம்பது வீத மன உளைச்சலைக் குறைக்க உதவுகின்றது.

எ) தியானம் (Meditation) :- தியானம் செய்ய உரிய முறையில் பயிற்சி பெறுதல் வேண்டும். அப்போதுதான் உரிய பலனை அடைய முடியும், தியானப் பயிற்சியானது, மன அமைதியையும் எம் உள்ளே ஓர் ஆத்மீக உணர்வையும் வளர்த்துவிட மிகமிக இன்றியமையாதது. இது எமது மைய நரம்புத் தொகுதியைக் கூட வலிமை பெறச் செய்யும் ஆற்றல் உடையது. சதா தியானப் பயிற்சி செய்பவர்கள் உடல் உளத் தூய்மை அடைகின்றார்கள் என்பது தெட்டத் தெளிவாக இந்த நவீன மருத்துவ உலகில் கூட உணரப்படுகின்றது.

ஏ) இன்றைய அவசர உலகில் அலுவலகங்களில் வேலை செய்பவர்கள் வேலைச் சுமையைத் தாங்கமுடியாது மன அழுத்தங்களுக்கு உட்பட்டு அவசரப் புத்தியுடன் ஏனையவர்களையும் திட்டித் தீர்த்தபடி உளைச்சலுடன் வேலை செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான இடர்பாடுகளில் இருந்து விடுபடப் பின்வரும் நடைமுறைகளைக் கையாளுவது சிறத்தது.

* முதலில் தரப்பட்ட வேலையின் பிரதான நோக்கத்தை உணருதல்
* முதன்மை அடிப்படையில் வேலைகளை ஒழுங்குபடுத்துதல்
* நேர அட்டவணையை முறையாகக் கடைப்பிடித்தல்
* ஒருநேரத்தில் ஒரு வேலையை மட்டும் கிரகித்தல்.
* வேலை அழுத்தங்களைச் சவால்களாக எடுத்து வெற்றி பெற முயலுதல்.

ஐ) எமது மனத்திலே நாம் சில அடிப்படையான எண்ணக் கருக்களை நிலை நிறுத்தி சூழலில் தொழிற்படும்போது நாம் மன உளைச்சலில் இருந்து இலகுவில் விடுபடக் கூடியதாக இருக்கின்றது.


உதாரணமாக:-

* எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு எம்மிடம் உண்டு. (Every problem must have a solvent)

* சில பிரச்சினைகளுக்குத் தீர்வு எம்மிடம் இல்லை எனில், அதை அப்படியே விட்டுவிட அது தன்னிச்சையாகிக் காலப் போக்கில் தீரும். அல்லது மறைந்துவிடுகின்றது. தீர்வை உடனடியாக எடுக்க முயலும்போது அது மன அழுத்தத்தைத் தூண்டி இயலாமை என்ற துன்பகரமான முடிவு கிடைக்கின்றது.

ஒ) ஒவ்வொரு நாளின் முடிவிலும் நாம் செய்த நல்ல காரியங்களை மட்டுமே மீட்டுப்பார்த்து சந்தோசமடை தல், மனதுக்கு இனியவற்றை மட்டும் மீளுகை செய்தல், நடந்த துன்பங்களை இயன்றவரை மீள நினைவுபடுத் தாது மறந்துவிட முயலுதல், சூழலில் ஏற்படும் மாறுதல் களுக்கு எம்மையும் மாற்றி அமைத்தல், எப்போதும் நடை முறை யதார்த்தமான சிந்தனைகளை மட்டுமே எண்ணு தல், கிடைத்தவற்றைக் கொண்டு முன்னேற முயற்சித்தலும் திருப்தி கொள்ளலும் போன்ற செயற்பாடுகள் எமது உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆறுதல் அளித்து வாழ்க்கையை வளம்படுத்த உதவுகின்றன.

ஓ) உடலில் மசாச் செய்வதும், வாயில் சுவிங்கம் மெல்லுதலும் கூட ஓரளவுக்கு சுற்றோட்டத்தைச் சீர்செய்து அழுத் தத்தை குறைத்து, பதட்டத்தைத் தணித்து உட லையும் உள்ளத்தையும் உற்சாகப் படுத்துகின்றது என்பதும் தற்கால மருத்துவ



உலகில் வழங்கி வரும் கருத்துக்கள்.

ஔ) மனிதன் ஒரு சிரிக்கும் விலங்கு. எனவே வாழ்க்கையில் சிரிப்பு என்பது உள்ளத்தை உற்சாகப்படுத்துகின்றது. மனம் திறந்து எமது உள்ளக்கிடக்கைகளை எமக்கு நம்பிக்கையானவர்களுடனும் நல்லவர்களுடனும் அளவளாவி ஆலோசனை பெறும்போது நாம் மன அழுத்தம், மன முரண்பாடுகளில் இருந்து விடுதலை பெறுகிறோம்.

ஃ) உலகிலே பிறந்த அனைத்து ஜீவராசிகளுக்கும் வாழ்க்கை என்பது பல சவால்களைக்கொண்ட கரடு முரடான பாதை. இதனை ஏற்றோ அல்ல ஏற்காமலோ அதைக் கடந்து வெற்றிகொள்வதே எமது இலட்சியம். அந்த இலட் சியத்தை அடைவதற்கு எமக்குள்ளே உள்ள அந்த மனோ பலத்தை உற்சாகப்படுத்தலே மன அழுத்தம், மற்றும் மன நோய்களில் இருந்து விடுபடுவதற்கான ஒரேவழி.

இதையே அன்று மகாபாரதத்தில் கண்ணன் அருளிய 'கீதா' உபநேசத்தில் வியாச முனிவர் இவ்வாறு எழுதுகின்றார்.

"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்க இருக்கிறதோ அது நன்றாகவே நடக்கும்
மனமே இங்கு நீ எதை இழந்தாய் அழுவதற்கு
உன்னுடைய அனைத்தும்
இங்கிருந்தே எடுக்கப்பட்டது
இன்று உன்னுடையது
நாளை மற்றொருவருடையதாகின்றது.
இதுவே உலக நியதி.



இந்த அடிப்படைக் கொள்கை விதிகளே பிற்கால நவீன உளவியல் (Psychology) தோற்றம் பெற வழிசமைத்தது எனலாம். * * *

ஆ. சிவானந்தம்,
(முதுகலைமாணி, சமூகவிஞ்ஞானம் மற்றும் உளவியல் துறை)
மாவட்ட அலுவலர், ஐ.நா.உணவு விவசாய நிறுவனம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WORLDWIDE OPPORTUNITIES

- சர்வதேச, தேசிய, தொழில் வாய்ப்புகள் பற்றிய தகவல்கள்.
- இலவச தொழில்சார் பயிற்சி நெறிகள்.
- சர்வதேச புலமைப் பரிசிற் திட்டங்கள்.
- சமூக நல நிதி வாய்ப்புத் தகவல்கள்.
- இலவச நூல்கள், சஞ்சிகைகள் பற்றிய தகவல்.

போன்ற அரும் பெரும் தகவல்களுடன்
மாதம் இருமுறை வெளிவரும் எமது
இலவச செய்தித் தாளிற்கு எழுதுங்கள்.
(முதற் சில பிரதிகள் மாத்திரமே இலவசம்)

**Newsletter,**
**P.O.Box 206,**
**Kandy.**

## மணமகள் தேவை

யாழ் இந்து Professionally qualified (Double Accountant - CIMA + Chartered) தற்சமயம் கொழும்பில் கடமையாற்றும் Australiaற்கு Migrate பண்ணக்கூடிய 31 வயதுடைய செவ்வாய்தோஷமற்ற பாவம் கூடிய அவிட்ட நட்சத்திர மணமகனுக்கு 26 வயதிற்குட்பட்ட தகுந்த மணப் பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர்.

**077 8849608**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தில் 1976 இல் பிறந்த, ஆயிலியம் நட்சத்திரம், பாவம் குறைந்த, செவ்வாய்க் குற்றமற்ற, UK யில் P.R உள்ள மணமகனுக்கு பெற்றோர் அழகிய, படித்த மணமகளைத் தேடுகின்றனர். தொடர்பு: 0777163082

## வேப்பமரம் விற்பனைக்குண்டு

466, கஸ்தூரியார் வீதியில் வேப்பர மரம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 466, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலை ஆள்கள் தேவை

1.லேத்மென் 2.வெல்டர் 3.பழகுநர்
தொடர்பு:
லிங்கோ நுண்பட்டறை சட்டநாதர் றோட், நல்லூர். தொ.பே.: 0773760594

# DO YOU HAVE WHAT IT TAKES?

PAN AUDIO HAS BEEN A LEADING IT PERIPHERAL COMPANY IN SRI LANKA FOR OVER 25 YEARS AND HOLDS A TRACK RECORD AS ONE OF THE FASTEST GROWING COMPANY.

TODAY THE COMPANY HAS INCREASED ITS PORTFOLIO TO A WIDE RANGE OF PRODUCTS AND WE ARE ON THE LOOK OUT FOR DYNAMIC INDIVIDUALS WHO WILL ALSO BE A TEAM PLAYER AND TAKE PAN AUDIO TO A WIDER MARKET AND HELP ACHIEVE OUR GOALS.

**SALES EXECUTIVE** *(3 Vacancies - Male)*
**NORTH - Jaffna/ Mannar/ Vavunia**
**EAST - Batticaloa/ Trincomalee**
**CENTRAL - Hatton/ Nuwara Eliya/ Badulla**

We are on the lookout for smart individuals with a flair for sales & PR. A reasonable track record in the industry or elsewhere, with proven capabilities. Must be able to help take the company towards its growth targets successfully. Minimum of 2 years sales experience is essential and the applicant must be a resident of the area he represents. All applicants must include 2 non-related referees in there CV.

THE HUMAN RESOURCE MANAGER,
PanAudio
PRIVATE LTD
No. 3-1/1, Station Road, Colombo 03. Tel: 2574430, 2575575 E-mail: info@panaudio.com

## ஓய்வூதியர் சங்க அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 20

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவினால் 2009 ஆம் ஆண்டுக்கான பகிரங்க சேவை ஓய்வூதியர் சங்க அட்டைகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை முற் பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒருமணிவரை பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கடன் விண்ணப்பம், கண் சிகிச்சை, நிவாரணப் படிவம், பல்கலைக்கழக மாணவர்களுக்கான நன்கொடை விண்ணப்பம், வைத்திய செலவு நிவாரணப் படிவம் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

மேற்படி நிகழ்வில் சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்கள் கலந்துகொள்ளும்படி பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறைப் பிரதேச சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

(50-201-10)

## இலவச மருத்துவ முகாம்

கொழும்புத்துறை, ஜூன் 20

கொக்குவில் இந்துக்கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை தைரொயிட் நோயாளிகளுக்கான இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.


'அபொட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இலவச மருத்துவ முகாம் இன்று காலை 8.30 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது.

201-135)

# கூல்எயார்ஸ் COOL AIR'S

- 9000 BTU தொடக்கம் 60000 BTU வரையிலான குளிரூட்டிகள்
- BRAND NEW AIR CONDITION
- RECONDITION AIR CONDITION

FUJI PURE (இறக்குமதி செய்யப்பட்டது)




AC பொருத்துதல் இலவசம்
AC சேர்விஸ் இலவசம் (மூன்று)

ஐந்து வருட உத்தரவாதம்
(COMPRESSOR)

12000 BTU விலை - 65000/=
18000 BTU விலை - 85000/=

## எமது ஏனைய சேவைகள்

- AC பொருத்துதல்
- சகல விதமான AC திருத்த வேலைகளும் உத்தரவாதத்துடன் செய்துதரப்படும்.
- சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகள் திருத்த வேலைகள் உத்தரவாதத்துடன் செய்துதரப்படும்.

## GALANZ AIR CONDITIONERS
## விலை விவரம்

9000 BTU - 55000.00
12000 BTU - 65000.00
18000 BTU - 75000.00
24000 BTU - 98000.00

| | |
|---|---|
| **கூல் எயார்ஸ்** | **கூல் எயார்ஸ்** |
| மின்சார நிலைய வீதி, | நீர்வேலிச் சந்தி, |
| யாழ்ப்பாணம். (விமாசி கட்டடம்) | நீர்வேலி. |
| 0727738888, | தொ.பே: |
| 0777738888. | 0773144636 |

(99557)

# கண்ணீர் அஞ்சலி



நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய உப தலைவரும், நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் காப்பாளரும், நல்லூர் தெற்கு மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் காப்பாளருமான
அபயகரம் உயர்திரு. க.குமாரசுவாமி (ஜே.பி) அவர்களின் துணைவியார்

## திருமதி நல்லம்மா குமாரசுவாமி

*(இளைப்பாறிய ஆசிரியை)*

அவர்களின் மறைவு குறித்து "நல்லூர் வாழ் மக்கள் சார்பில்" எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவர்தம் குடும்பத்திற்குத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்,
நல்லூர் தெற்கு மாதர் அபிவிருத்திச் சங்கம்,
நல்லூர் முருகன் சனசமூக நிலையம். (99584)

# மரண அறிவித்தல்கள்

## கணேசமூர்த்தி சசிதரன்



பேக்கரி லேன், சீரணி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த கணேசமூர்த்தி சசிதரன் (முன்னாள் சசி மில் உரிமையாளர்) 17.06.2010 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கணேசமூர்த்தி - லங்காதேவி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் சிவபாக்கியம், காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் புஸ்பவதி ஆகியோரின் அன்பு மருமகனும் றமீனாவின் அன்புக் கணவரும் பிரியாந்தி (சுவிஸ்), பிரதுஷா (A/L வர்த்தகத்துறை மாணவி, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சாய்ப்பிரகாஷ் (A/L கலைத்துறை மாணவன், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் றமேஷின் (சுவிஸ்) பாசமிகு மாமனாரும் சுபாசினி (சுவிஸ்), செந்தில்தரன் (லண்டன்), சுகந்தினி, சந்திரகுமார் (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும் விஜயபாலன் (சுவிஸ்), நளாயினி (லண்டன்), ஆனந்தராஜா (ஆசிரியர், யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி.), தனுஜா (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் சுஜித்தின் (சுவிஸ்) பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பேக்கரி லேன்,
சீரணி, சண்டிலிப்பாய்.
தகவல்: மனைவி, பிள்ளைகள்

## திருமதி நல்லம்மா குமாரசுவாமி

(இளைப்பாறிய ஆசிரியை)



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா குமாரசுவாமி 17.06.2010 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான உடுப்பிட்டி கந்தசாமி- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நல்லூர், செட்டித்தெருவைச் சேர்ந்த கந்தையா-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் க.குமாரசுவாமியின் (இளைப்பாறிய உள்ளூராட்சி செயலாளர் சேவை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருமதி அழகாம்பிகை பொன்னையா, க.செல்வராஜா மற்றும் திருமதி சிவயோகம் ஜெய்சிங் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும் உமாபாலன் (பொறியியலாளர்- UK), திருமதி கலாநிதி புவனேஸ்வரி (UK), Dr.தயாளினி (யாழ்.போதனா வைத்தியசாலை), சங்கர் (பொறியியலாளர்- UK), Dr.திருமால் (களு போவில வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் உமாதேவி (பொறியியலாளர்-UK), அசோகன் (கணக்காளர்- UK), Dr.சிவதாசன் (யாழ்.போதனா வைத்தியசாலை), Dr. சுலோஜனா (UK), Dr. சுதர்சினி (லேடி றிச்வே, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் UK யைச் சேர்ந்த வைதேகி, பிருந்தன், கஜன், லக்ஸ்மன், அரண், பிரணவி, சங்கவி, நல்லூரைச் சேர்ந்த தேவசாயினி, தர்மதாசன், தர்மசாயினி கொழும்பைச் சேர்ந்த நேகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.
(99568)
தகவல்: க.குமாரசுவாமி (ஜே.பி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசணித் திருடன்




ஒரு காய்கறித்தோட்டம். அங்கிருந்து ஒருவன் சாம்பல் பூசணிக் காயொன்றைத் திருடினான். அதைத் தனது தோளில் வைத்து தனது வீட்டிற்கு எடுத்துச் சென்றான். தோட்டச் சொந்தக்காரனான விவசாயிக்குச் சரியான கோபம். அவன் கிராமவாசிகள் எல்லோரையும் பறைசாற்றி ஒன்று கூட்டினான். அவன் அவர்களுக்குச் சொன்னான். நான் உங்கள் ஒவ்வொருவருடைய தோளையும் பார்த்தால்த் திருடனைக் கண்டுபிடித்து விடுவேன். பூசணிக்காயிலுள்ள சாம்பல் இன்னும் திருடனுடைய தோளில் இருக்கும்.

இதைக்கேட்ட ஒருவன் தனது கைக்குட்டையினால் தோளில் தூசி தட்டினான். அவனே சாம்பல் நிறப் பூசணிக் காய்த்திருடன் எனப் பிடிபட்டான்.

சு.தர்சிகா, தரம் 9C, யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

# பூ

பல நிறம் கொண்ட பூ
அழகாய் வளரும் பூ
சிரிக்கும் நல்ல பூ
மக்கள் விரும்பும் பூ
நாம் பறிக்கும் பூ
மாலை கட்டும் பூ
பூசை செய்யும் பூ
கூந்தல் விரும்பும் பூ
குமரி அணியும் பூ



ப. ஜஷி, தரம் 5, நயினாதீவு ஸ்ரீநாகபூசணி வித்தியாலம்.




## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? 61

1. 2010 உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தில் ஹற்றிக் கோல்களை அடித்த முதலாவது வீரர் யார்?
2. தம்புள்ளவில் உள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஒரு இனிங்சில் 300க்கும் அதிகமான ஓட்டங்களைக் குவித்த அணி எது?
3. இந்த வருடம் தேசிய ரீதியிலான தமிழ்த் தினப் போட்டிகள் எங்கு நடைபெறுகின்றன?
4. மில்றோய் பெர்ணான்டோ எந்த அமைச்சுப் பதவியை வகிக்கிறார்
5. 'இதோ என்முகவரி' என்னும் கவிதைத் தொகுதியின் ஆசிரியர் யார்?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 30.06.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா?
59 இற்கான சரியான விடைகள்

1. அரவிந்தடி சில்வா
2. சிகிரியா
3. மங்களூர்
4. டி.எம். ஜயரட்ண
5. ஷேக்ஸ்பியர்

### பரிசுபெறுவோர் விவரம்

1. ந.துஷாந்தின், தரம் 12, யா/ சண்டிலிப்பாய் இந்து மகா வித்தி.
2. ம. நிறோஜன், தரம் 9C, இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி.
3. சி. நிறோஜன், தரம் 5B யா/ கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி
4. ஜெ. துவாரகா, தரம் 4C, யா/ இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-.......................................
தரம் :-.......................................
பாடசாலை :-.......................................
.......................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)








கு.மீரா, தரம் -8 B,
யா/ இணுவில் இந்துக் கல்லூரி.



சி. ரேணுஜா, தரம் -7,
அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.




இ. நிதர்சினி, தரம் -8A,
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.




நி. சுபாநிதா, தரம் -4B,
யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்தி.




வி. துசிந்தா, தரம் -5 A,
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.



ச. சங்கீதா, தரம் -7B,
யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்தி.



[illegible], தரம் -6A,
அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.



ஸ்ரீ ஆர்த்தியான், தரம் -1 B,
யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## ஜூன் 20 முதல் ஜூன் 26 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

இந்த வாரம் சோர்வின்றி சுறுசுறுப்பு, உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் வரலாம். நண்பர்கள், உறவினர்களிடம் கேட்ட உதவிகள் கிடைத்து பெருமை அடைவீர்கள். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில வேலைகளில் இறங்கி விட்டு அவதிப்படுவீர்கள். உறவினர்கள் வகையில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். ஆறாம் இடத்தில் இருக்கும் சனியால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் முன்னேற்றமான நிலைமை காணப்படும். அவற்றில் வருமானத்தை பெருக்கிக் கொள்ளும் வாய்ப்புகள் உருவாகலாம். விரய ஸ்தானத்தில் குரு இருப்பதால், பிள்ளைகள் வழியிலும், அவர்களின் தேவைகளை, கடமைகளை நிறைவேற்றவும் கணிசமான பணத்தை செலவிடலாம். உறவினர்களின் சுபகாரியங்களுக்கு கொடுத்து உதவும் சூழ்நிலை உருவாகலாம். தந்தை வழியில் உருவான சிரமங்கள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். மருத்துவ காரியங்கள் நல்ல விதமாக முடியும். புத்தி ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், மனம் ஒரு விதத்தில் நிலை கொள்ளாமல் அலைபாயும். குழப்பங்கள், தடுமாற்றங்கள் அதிகரிக்கும். மறதி, கவனக்குறைவு போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். பணவரவுகளைப் பெறலாம்.

### இடபம்

இந்த வாரம் குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். முக்கிய காரியம் ஒன்று முடியாமல் தடைப்படலாம். ஏதோ ஒரு வழியில் பணவரவு களைப் பெறலாம். உறவினர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். தடை, தாமதமின்றி சுலபமாக வேலைகளை முடிப்பீர்கள். லாபஸ்தானத்தில் குரு இருப்பதால், கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளின், குடும்ப உறுப்பினர்களின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சிறிது சிறிதாக சேமித்தோ அல்லது வேறு வகையிலோ கணிசமான பணம் கிடைக்கலாம். விலை உயர்ந்த பொருட்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். இருந்தாலும், சூரியன் இரண்டாம் இடத்தில் கேதுவுடன் சேர்ந்து சஞ்சரிப்பதால், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் அவசியம். சூடான, குதர்க்க மான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். அவசரப்பட்டு வாக்குக் கொடுத்து விட்டு அல்லல் படாமல் இருக்க முன்னெச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். தந்தையுடன் வாக்குவாதங் களைத் தவிர்க்க வேண்டும். செவ்வாய் நான் கில் இருப்பதால், உடன் பிறப்புக்கள், பங்காளிகள் வகையில் தொந்தரவு உண்டு. தாயின் உடல் நலன் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம். தேக ஆரோக்கிய குறைவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல் உண்டு. பிள்ளைகள் வழியில் செலவு நேரும்.

### மிதுனம்

இந்த வாரம் மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். அதேநேரத்தில் வீட்டிலோ, பணிபுரியும் இடத்திலோ சிலர் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படுவதால், கோபம் கொள்ள நேரிடலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்ற கணிசமான பணத்தை செலவிடலாம். சிலருக்கு கடனுதவி வழங்கலாம். சோர்வு, சோம்பல் கூடும். செவ்வாய் சாதகமான நிலையில் இருப்பதால், உடன் பிறப்புக்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். சொத்து விவகாரங்கள், கடன் விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்களை வெற்றிகரமாக தீர்த்துக் கொள்ள வாய்ப்பு கிடைக்கும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. சுக்கிரன் இரண்டாம் இடத்தில் இருப்பதால், கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். நான்காம் இடத்தில் சனி இருப்பதால், வேலைப்பளு அதிகரிக்கும். சில காரியங்களை நினைத்த வேகத்திற்கு செய்ய முடியாமல் இடையூறுகளை சந்திக்கலாம். குருவும் பாதகமாக இருப்பதால், பணிபுரிவோர் தொழிலில் கவனமாக இல்லாவிட்டால், வீண்பழிகள் உருவாகலாம். மற்றவர்களின் சூழ்ச்சிகளில் சிக்கிக் கொள்ளலாம். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் வகையிலும் தொல்லைகளே. பணவரவுகளைப் பெறலாம். உதவிகள் கிடைக்கும். ஏமாற்றங்களைச் சந்திக்கலாம்.

### கடகம்

இந்த வாரம் அதிகமான செலவுகளால் பணப்பற்றதக்குறையை சந்திக்கலாம். முக்கியமான சில வேலைகளை செய்ய மறப்பதால், அவதிகளுக்கு ஆளாகலாம். புத்துணர்ச்சி, தெம்புடன் செயற்படுவீர்கள். அடுக்கடுக்காக குவியும் வேலைகளை அசராமல் செய்து முடிப்பீர்கள். எதிர்பாராத வகையில் சில நிகழ்ச்சிகள் நடக்கலாம். மூன்றாம் இடத்தில் சனியும், ஒன்பதாம் இடத்தில் குருவும் இருப்பது சாதகமான அம்சமே. எந்த வேலையையும் சிரமம் இன்றி, முடித்துக் கொள்வீர்கள். சண்டை போட்ட உறவினர்கள் உங்க ளிடம் மீண்டும் அன்பாக நடந்து கொள்வர். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், உறவினர்கள், நண்பர்கள், மாமன், மைத்துனர்கள் போன்ற வகையில் செலவு, அலைச்சல்களைச் சந்திக்கலாம். சுக்கிரன் ஜென்மராசியில் இருப்பதால், உங்களின் சுய தேவைகளுக்கான ஆடை, அலங்காரப் பொருள்களை வாங்குவீர்கள். மற்றவர்கள் மத்தியில் பளிச்சென தோற்றம் அளிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். பயணங்கள் அனுகூலம் தரலாம். குதர்க்கமான பேச்சுக்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். நல்ல செய்தி கேட்கலாம்.

### சிங்கம்

இந்த வாரம் ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் உற்சாகம் அடைவீர்கள். விசேஷங்களால் வீட்டில் கலகலப்பு அதிகரிக்கும். ஒன்றுக்கு இரு மடங்காக செலவு ஏற்படலாம். சில வேலைகளுக்காக கடுமையாக அலையலாம். நீண்ட நாள்களாக செல்ல நினைத்த ஒரு இடத்திற்கு திடீரென செல்லலாம். சூரியன் சாதகமான இடத்திற்கு வருவதால், எந்த வேலையையும் தாமதமின்றி, சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பீர்கள். தந்தை வழியில் உதவிகள் கிடைக்கலாம். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். திட்டமிடாத வகையில் சில காரியங்கள் நடக்கலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறலாம். ஜென்மத்தில் செவ்வாய் இருப்பதால், கோபம், வேகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் அடிக்கடி நடக்கலாம் என்பதால், பொறுமையாக செயற்பட வேண்டும். உடன் பிறப்புக்கள், பங்காளிகள் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் நிதானத்தை இழக்க நேரிடலாம். கடன் விவகாரங்களை சாக்குப் போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். விரய ஸ்தானத்தில் சுக்கிரன் இருப்பதால், உறவுப் பெண்கள், மனைவி வழி உறவுகள், சகோதரிகள் போன்ற வகையில் செலவுகள், அவர்கள் வேலைகளுக்காக அலைதல் போன்றவற்றை சந்திக்கலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். பணவரவுகளைப் பெறலாம். மன அமைதி பாதிக்கும்.

### கன்னி

இந்த வாரம் திட்டமிட்ட காரியங்கள் நடக்கலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். சந்தோஷமான அனுபவங்களால் சங்கடங்களை மறப்பீர்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். நண்பர்கள் வட்டம் விரிவடையும். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். சுக்கிரன் சாதகமான நிலையில் உள்ளதால், சகோதரிகள், உறவுப்பெண்கள், மனைவி வழி உறவுகள் போன்ற வழிகளில் உதவிகள் கிடைக்கலாம். கணிசமாக வரும் பணத்தால் அடகு வைத்த பொருள்களை மீட்பீர்கள். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி விட்டு, புதிய பொருள்கள் வாங்குவீர்கள். மகிழ்ச்சிகரமான பயணங்களை மேற்கொள்ளலாம். அரசாங்கம், அரசியல், மருத்துவம், தந்தை தொடர்பான வகையில் ஆதாயம், அனுகூலம் பெறலாம். தந்தையின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். ஏழாம் இடத்தில் இருக்கும் குரு உங்களின் ராசியை பார்ப்பதால், [illegible] வேகத்தை அதிகரிக்கும் சில நிகழ்ச்சிகள் நடக்கலாம். செலவு, [illegible] அனுபவங்களை சந்திக்கலாம்.

### துலாம்

இந்த வாரம் கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்கு செல்லலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். மற்றவர்கள் தயவில் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். கைமாத்தாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம். விரயச் சனியால் பணம் கையில் இருக்காத வகையில் அடுக்கடுக்காக செலவுகள் வந்து கொண்டிருக்கும். நீங்களே சிரமப்படும் நேரத்தில் உறவினர்கள் உங்களிடம் உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். சிலரிடம் தேவையற்ற வாக்குறுதிகளைக் கொடுத்து விட்டு சிக்கலில் மாட்டலாம். அப்பாடா ஒரு சிக்கலில் இருந்து விடுபட்டு விட்டோம் என, நிம்மதி அடைந்தால், புதிதாக ஒரு சிக்கல் உருவாகும். லாபஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகள் உதவியுடன் உங்களின் வேலை ஒன்றை முடித்துக் கொள்வீர்கள். கடன் பிரச்சினைகளை வெற்றிகரமாக சமாளிப்பீர்கள். சுக்கிரன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். பணவரவுகளைப் பெறலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு.

### விருச்சிகம்

இந்த வாரம் சந்திராஷ்டமம் என்பதால், மந்தம், மறதி, தடை, தாமதங்கள், தண்டச் செலவு போன்றவற்றைச் சந்திக்கலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். வாக்குவாதங்களால் மற்றவர்களின் அதிருப் திக்கு ஆளாகலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். லாப ஸ்தானத்தில் சனியும், ஐந்தில் குருவும் இருப்பது பல வகையிலும் நன்மையே. தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். விலை மதிப்புமிக்க பொருட்கள் வாங்குவீர் கள். சொந்தபந்தங்களின் சுபகாரியங்களுக்கு கொடுத்து உதவுவீர்கள். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் கிடைக்கும் வருமானத்தால் குடும்பத்தில் வசதி, வாய்ப்புகள் அதிகரிக்கும். செவ்வாய் காரிய ஸ்தானத்தில் இருப்பதால், ஓய்வில்லாத வகையில் அடிக்கடி ஏதாவது வேலைகள் வந்து கொண்டிருக்கும். உங்களின் வேலைகளுக்காக மட்டுமின்றி, மற்றவர்களின் வேலைகளுக்காகவும் அலைவீர்கள். நல்ல செய்திகள் வந்து சேரும். காரிய வெற்றி உண்டு. இழுபறி கடன்கள் வரலாம். சந்தோஷ அனுபவம் உண்டு.

### தனுசு

இந்த வாரம் அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். நண் பர்கள் செலவில் உங்களின் தேவைகள் நிறைவேறலாம். உதவிகள் கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள். சந்திராஷ்டமம் என்பதால், தடை, தாமதங்களால் எரிச்சல், வெறுப்பு அடையலாம். பயணங்கள் தொந்தரவு தருவதாக அமையலாம். திட்டமிட்ட வேலைகளில் மாற்றங்கள் செய்யலாம். சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு அம்சங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். ஆடம்பர விடயங்களில் நாட்டம் செல்லும். சகோதரிகள், உறவுப் பெண்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய் வீர்கள். சூரியன் , கேதுவுடன் சேர்வதால், கூட்டு தொழில் விவகாரங்களில் சிக்கல்கள், பிரச்சினைகள் உருவாகலாம். கூட்டு முயற்சிகளைத் தவிர்க்க வேண்டும். சனி, குரு சாதகமற்ற நிலையில் இருப்பதால், சிலர் வீடு மாற்றம், இடமாற்றம், தொழில் மாற்றம் போன்றவற்றை எதிர்கொள்ளலாம். செவ்வாயும் சாதகமற்ற நிலை யில் உள்ளதால், சகோதரர்கள் தொடர்பான விடயங்களில் தலையிட வேண்டாம். எதிலும் முன் யோசனை, எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும். கலகலப்பான அனுபவம் உண்டு.

### மகரம்

இந்த வாரம் எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். சிரமம் இல்லாமல் வேலைகள் முடிவுக்கு வரும். குடும்பத்தினரின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். குறுகிய தூர பயணங்கள் மேற்கொள்ளலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். உறவினர்கள் சிலருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். மூன்றாம் இடத்தில் குரு இருப்பதால், எடுத்த வேகத்திற்கு எந்த காரியமும் நடக்காமல் முட்டுக்கட்டை ஏற்படலாம். மனைவி, குழந்தைகள் விவகாரங்களில் அனுசரித்துச் செல்ல வேண்டும். பெரிய மனிதர்களிடம் கோபம், வேகமாக நடந்து கொள்ள வேண்டாம். அவ்வப்போது உங்களின் மனம் சங்கடப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். தற்போது ஐந்தாமிடத்தில் இருக்கும் சூரியன், ஆறாமிடத்திற்கு செல்வதால், அரசு காரியங்கள் அனுகூலமாக முடியும். அரசியல்வாதிகள் சந்திப்பால் மகிழ்ச்சியும், அவர்கள் மூலம் காரியம் சாதிக்க வாய்ப்பு கிட்டும். தந்தையின் உதவி மற்றும் செயற்பாடுகளால் சந்தோஷம் அடைவீர்கள். மருத்துவ விடயங்கள் மனதிற்கு பிடித்தமான வகையில் அமையும். பெண்கள் தொடர்பான விடயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். எதிர்பாராத பயணங்களால் செலவுகள் நேரலாம். சந்திராஷ்டமம் என்பதால், பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

### கும்பம்

இந்த வாரம் மற்றவர்களை நம்பி ஒப்படைத்த சிலவேலைகள் முடிவடையாமல் அவற்றை நீங்களே செய்யலாம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களுக்காக அலைய நேரிடலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்களிடம் நீங்கள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தங்கு தடையின்றி வேலை களை முடிப்பீர்கள். எட்டாம் இடத்தில் இருக்கும் சனியால், அவ்வப்போது சில பிரச்சினைகள் உரு வாகிக் கொண்டிருந்தாலும், இரண்டாம் இடத்தில் ஆட்சி பலத்துடன் அமர்ந்திருக்கும் குரு, உங் களின் குடும்பத்தில் மகிழ்ச்சி, உற்சாகத்தை அதிகரித்துக் கொண்டிருப்பார். கொடுக்கல் வாங்கல்களை சரிவர நிறைவேற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளின் உயர் கல்விக்காக எடுத்த முயற்சிக ளில் வெற்றி பெறலாம். உடன் பிறப்புக்களாலும் மன அமைதி பாதிக்கப்படலாம். நோய் உபாதை களாலும் சிலர் அவதிப்படலாம். சிலர் வீடு மாற்றம் செய்ய நேரிடலாம். தொழில் ரீதியாக பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். சூரியன் புத்தி ஸ்தானத்தில் கேதுவுடன் சேருவதால், எந்த விடயத்திலும் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் தவிக்கலாம். வாகனங்கள், பயணங்கள் போன்றவற்றாலும் செலவுகள் உண்டு. உத்வி கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள். தடை, தாமதம் ஏற்படும்.

### மீனம்

இந்த வாரம் ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். தேவையற்ற செலவுகளைச் செய்யலாம். சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பங்களைச் சந்திக்கலாம். சிறிய பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் பயம் கொள்வீர்கள். ஏழாம் இடத்தில் இருக்கும் சனியால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் திருப்தி இருக்காது. நினைத்தபடி எதுவும் நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். கடன் வாங்கியிருப்போர், அதற்கான வட்டி கட்ட முடியாமல், அதற்கேற்ற வருமானம் இல்லாமல் தவிக்கலாம். ஆறாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், பிள்ளைகள் பற்றிய கவலைகள் நீங்கி தெம்பு பெறுவீர்கள். எந்த விடயத்திலும் தடுமாற்றம் இல்லாமல் தெளிவான முடிவு எடுப்பீர்கள். உடன் பிறந்த சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வெளி [illegible] தொடர்புகள் விரிவடையும். சுக்கிரனால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்களால் ஆறுதல் அடைவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருள் வரவு உண்டு. ஆடை, ஆபரணம் சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரக் கரையோரக் கிராமங்கள் வாழ்வுரிமையைப் பெறுவது எப்போது?

யாழ். நகரின் கிழக்குப் பகுதியான குருநகர் தொடங்கி அரியாலை கிழக்கு வரையான சுமார் பத்து கிலோமீற்றர் நீளமான பிரதேசம் கடலும் கடல் சார்ந்த அழகான நெய்தல் நிலமாகும்.

கடற்கரையை அண்டிய இப்பிரதேசத்தில் குருநகர், றெக்கிளமேசன், பாஷையூர், மகேந்திரபுரம், எழிலூர், கொழும்புத்துறை, வசந்தபுரம்,



மணிப்புரி, உதயபுரம், பூம்புகார், அரியாலை கிழக்கு போன்ற கிராமங்கள் அடங்குகின்றன.

தத்தமது வசதிக்கேற்ப குடிமனைகளை அமைத்து நிம்மதியாகவும், அமைதியாகவும் வாழ்ந்து வந்த இக்கரையோரக் கிராம மக்கள், நாட்டின் யுத்த காலங்களில் பலமுறை இடப்பெயர்வுகளையும் இழப்புக்களையும் சந்தித்து வந்திருக்கின்றனர்.

கடற்கரை வீதிக்குத் தெற்காகவும் கடற்கரையை அண்டிய கிராமங்களையும் உள்ளடக்கிய இப்பகுதிகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக கடந்த 15 வருடங்களாக உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து வந்துள்ளன.

இப்பகுதிகளில் வசித்த சுமார் 2500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாடகை வீடுகளிலும் உறவினரின் இல்லங்களிலும் தஞ்சமடைந்து வாழ்வை நகர்த்தி வருகின்றனர்.

இவர்கள் வள்ளங்கள், வலைகள் மற்றும் தொழில் உபகரணங்களை இழந்தும் தும்புக் கைத்தொழிலை தொடரமுடியாதும் பாதிப்புக்கு உள்

**எஸ்.யேசுதாஸ்**

ளாகி வாடுகின்றார்கள். இவர்கள் கைவிட்டுவந்த கால்நடைகள் அரியாலைப் பகுதியில் கட்டாக்காலிகளாக அலைகின்றன.

பல குடும்பங்கள் இங்கிருந்து வன்னி சென்று அங்கு நடைபெற்ற இறுதிப் போரில் சிக்குண்டு கையில் இருந்தவற்றையும், உயிர்களையும் இழந்து முள்ளிவாய்க்கால் கண்டு வவுனியா முகாம்களில் முட்கம்பிகளைத் தரிசித்து மீண்டு வந்திருக்கின்றார்கள்.

'எலி வளையானாலும் தனிவளை வேண்டும்' என்பது போல தமது சொந்த வீடுகளில் குடியேறும் நாள் எப்போ வருமெனக் காத்திருக்கிறார்கள்.

இவ்வாறான சூழலில் யுத்தம் முடிவுக்கு வந்து ஒருவருடம் கழிந்த நிலையில் தற்போது படிப்படியாக சில கிராமங்களுக்குச் சென்று வரவும், குடியேறவும் அனுமதிக்கப்பட்டு வருவது மகிழ்ச்சிதரும் செய்தியாகும்.

என்றாலும் மணிப்புரி, வசந்தபுரம், உதயபுரம் தவிர்ந்த குருநகரின் கரையோரப்பகுதிகள், எழிலூர், மகேந்திரபுரம், கொழும்புத்துறையின் கடற்கரைப் பகுதி வீடுகளுக்குச் செல்ல இன்னமும் அனுமதி கிடைக்கவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த உயர் பாதுகாப்பு வலயத்தில் தொடர்ச்சியாக நடைபெற்ற ஷெல் தாக்குதல், மற்றும் குண்டு வெடிப்புகள் காரணமாக வீடுகள் பெரும் சேதமடைந்துள்ளன. குடியிருக்க உகந்ததான வீடுகள் எவையும் காணப்படவில்லை. இடிந்து வீழ்ந்த சுவர்கள், மதில்களின் கற்கள் எங்கே போனதோ தெரியவில்லை.

கூரையில் இருந்த மரங்கள், நிலைகள், கதவுகள் அனைத்தும் மாயமாய் மறைந்துள்ளன. மீள்குடியேற அனுமதிக்கப்பட்டாலும் கூட விரைவில் மக்கள் வசிக்கக்கூடியதான தோற்றம் தென்படவில்லை எனக் கூறப்படுகின்றது. தொடர்ந்தும் சிலரால் எஞ்சிய இடிபாடுகளின் சூறையாட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

அனுமதி அளிக்கப்படாத இடங்களின் தோற்றப்பாடு இதுவென்றால் அண்மையில் அனுமதிக்கப்பட்ட கிராமங்களின் நிலையோ அதோகதியாகக் காணப்படுகின்றது.

வசந்தபுரம், மணிப்புரி, உதயபுரம் கிராமங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்தன.

இப்பகுதிகளில் அண்மையில் குடியேற அனுமதிக்கப்பட்டு தமது காணிகளைத் துப்புரவு செய்வதில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தனது காணியில் வளர்ந்துள்ள மரங்களை வெட்டிக் கொண்டிருந்த ஒருவர் கவலையுடன் கூறினார் ''பதினைந்து வருடங்களின் பின்னர் எமது கிராமங்களை வந்து பார்த்தோம். அடையாளமே தெரியாது அடர்ந்த காடுபோன்று காட்சி அளித்தது. வீதிகள் எது, காணி எது என்று கண்டுகொள்ள முடியவில்லை. குடிமனைகள் இருந்ததற்கான தடயங்களே இல்லை.

கல்வீடுகளின் அத்திபாரம் தான் இது ஒரு குடிமனை என்று சொல்லி நிற்கிறது. மேற்பகுதிகளுக்கு என்ன வாயிற்று என்பது தெரியவில்லை. ஏனைய காணிகளைக் குறிப்பிட்டளவில் மக்கள் செம்மைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

காணிகளுக்கு எல்லையிட்டு வேலிகளை அடைக்க முடியாதுள்ளது. எல்லைப் பிணக்குகள் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது. அவரவர் காணிகளை அளப்பதென்பது முடியாத காரியம். அதன் செலவீனங்களை எம்மால் பொறுக்க முடியாத நிலையில் உள்ளோம். காணி எல்லைகளை நிர்ணயிப்பதில் உரிய அதிகாரிகளின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது'' என்றார்.

இங்கே பெரும் சோலையாகக் காணப்பட்ட தென்னந்தோட்டங்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. பனை மரங்களும் தறித்து எடுக்கப்பட்டுள்ளன. பகல் வேளைகளில் கொழுத்தும் வெய்யிலில் பாலைவனத்தின் மத்தியில் அகப்பட்டவர்கள் போன்று பற்றைகளை வெட்டுவோர் துடியாய்த் துடிக்கின்றனர். இங்குள்ள கிணறுகள் தூர்ந்தும் மாசடைந்தும் உள்ளதால் குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த நிலையில் மாலை 5 மணிக்கும் பின்னர் அங்கு எவரும் நிற்கக் கூடாது என்பது பாதுகாப்புப் படையினரின் பணிப்பு.

''எமது காணிகளுக்கான உறுதிப் பத்திரங்கள் செயலகத்தால் வழங்கப்படவிருந்த சமயம் நாங்கள் இடம்பெயர நேரிட்டது. தற்போது வீடுகளும் இல்லை. காணிகளுக்கான உரிமமும் இல்லை. எனவே உறுதிகளை நாம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பிரதேசம் 35 வருடங்களுக்கு முன்னர் நில சுவீகரிப்புத் திட்டத்தின்கீழ் தனியார் காணியில் ஏற்படுத்தப்பட்ட பாரிய குடியேற்றத் திட்டமாகும்'' என்று தெரிவித்தார் இங்கு வசித்த ஒரு குடியிருப்பாளர்.

இப்பகுதி மக்கள் எவருடைய உதவிகளும் இன்றி தனித்து விடப்பட்டுள்ளனர். இவர்களின் தேவைகள், எதிர்பார்ப்புக்கள், அடிப்படை வசதிகள், மீள்கட்டுமானப் பணிகளில் அதிகாரிகள் அக்கறைகொள்வதாகத் தெரியவில்லை என்று கூறப்படுகின்றது. மணிப்புரிக்கு அப்பால் அரியாலை கிழக்கு வரை நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நிர்வாகப் பிரதேசமாகும்.

''நாங்கள் இங்கிருந்து ஓடும்



போது 5 பிள்ளைகள். இப்போது பிள்ளைகள் திருமணம் முடித்து பல குடும்பங்களாகிவிட்டோம். அத்தனை குடும்பங்களுக்கும் எமது காணியில் எத்தனை வீடு கட்ட முடியும்?'' என்று கூறினார் ஒரு குடும்பத் தலைவி. இதேபோல் பல குடும்பங்கள் இந்த 15 ஆண்டுகளில் பல்கிப் பெருகியுள்ளன. இப்பிரச்சினை மீள்குடியேற்றத்தில் பெரும் சவாலாக உள்ளது.

பகல் முழுவதும் நின்று வேலை செய்துவிட்டுச் செல்கின்றோம். மறுநாள் வந்து பார்க்கும்போது எமது காணிகளில் மணல் அகழப்பட்டுக் காணப்படுகின்றது. இரவில் மணல் மறையும் மாயமென்ன? சமதரையாக உள்ளவளவுகள் மேடும்பள்ளமுமாக மாறிவருகிறது. இதில் எவ்வாறு நாம் வீடுகளை அமைப்பது. இந்த மண் கொள்ளை உடனடியாக தடுக்கப்பட வேண்டும்-என்றார் இப் பகுதி சமூக சேவையாளர் ஒருவர்.

அதேவேளை பாரிய இராணுவ கண்ணிவெடிகள் இடம்பெற்ற இப் பகுதிகள் முறையாக கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படாது இருப்பது அச்சமூட்டுவதாகத் தெரிகின்றது.

இப்பாரிய கரையோரப் பிரதேசத்தில் அமைந்திருந்த ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், வைத்திய நிலையங்கள் என்பனவும் முற்றாக அழிவடைந்துள்ளன.

குருநகர் வேளாங்கண்ணி மாதா ஆலயம், எழிலூர் வேளாங்கண்ணி மாதா ஆலயம், துண்டி ஐயனார் கோயில், துண்டி இந்து மயானம், மணிப்புரி கர்த்தர் கோயில், இந்துக் கோயில், வசந்தபுரம் புனித யாகப்பர் ஆலயம், உதயபுரம் புனித லிகோரியார் ஆலயம், ஆத்திக்காடு அம்மன் கோயில், பூம்புகார் புனித பிலிப்பு நேரியார் ஆலயம், அரியாலை கிழக்கு வேளாங்கண்ணி மாதா யாத்திரைத் தலம், பிள்ளையார் கோயில் என்பன குறிப்பிடத்தக்கவை.

மணிப்புரியில் நல்லூர் பிரதேச சபையால் நடத்தப்பட்ட ஆயுள்வேத உப வைத்திய நிலையம், உதயபுரத்தில் இயங்கிய றொசாறியன் சித்த ஆயுள்வேத தனியார் வைத்திய நிலையம் போன்ற மருத்துவ நிலையங்களும் அழிவடைந்துள்ளன.

அரியாலைப் பகுதியில் கட்டடிக்கு அப்பால் மக்கள் குடியேறவோ, விவசாயத்தை மேற்கொள்ளவோ அனுமதி வழங்கப்படவில்லை. விவசாயத்தை நம்பி வாழ்ந்த பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த யாழ்.நகரின் கரையோரக் கிராமங்கள் மீண்டும் புத்தெழுச்சி பெற்று சுபீட்சமுடன் வாழும் காலம் வருமா? தமது தொழில் வளங்களை மீள ஆரம்பித்து இயல்பு வாழ்வுக்குத் திரும்புவது எப்போது? தரைமட்டமான இல்லிடங்கள், ஆலயங்கள் நிமிர்ந்தெழுமா?

நிர்க்கதிக்குள்ளாகி பிறர்கையை எதிர்பார்த்து நிற்கும் இவர்களின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்த அரச, தனியார் தொண்டுநிறுவனங்கள் கை கொடுத்து உதவ முன்வர வேண்டும் என்பதே இவர்களின் எதிர்பார்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஒரு செம்மொழி என்பது ஏன்;.....

*(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

தமிழிலே தோன்றிய செவ்வியல் இலக்கியங்களுக்கு ஊற்றாக இருந்துவந்த வாய்மொழி மரபுகளும் நாட்டார் இலக்கியங்களும் சமாந்தரமாக வளர்ந்துவருவதையும் இங்கு குறிப்பிடவேண்டும். செவ்வியல் மரபும் நாட்டார் மரபும் இணைகின்ற போது மிகச் சிறந்த தமிழ் இலக்கியங்கள் உருவாகியுள்ளதைக் காணக்கூடியதாயுள்ளது. சிலப்பதிகாரமும் பக்திப் பாடல்களும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன..

**வேறெந்த மொழியிலிருந்து கிளைத்தெழாதது**

தமிழ்மொழி சமஸ்கிருத மொழியிலிருந்து கிளைத்தெழுந்ததென்பதை நிலைநாட்டப் பல முயற்சிகள் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, மலையைக் குறிக்க 28 சொற்கள் தமிழிலே இருக்கின்றன. அப்படி அவை இருக்கவும் 27 சொற்கள் வடமொழியிலிருந்து பெறப்பட்டுள்ளன. வடமொழிச் சொற்கள் இருபத்தேழும் வழக்கிலே வர, தமிழ்ச் சொற்கள் இருபத்தெட்டும் வழக்கிழந்துபோய்விடலாம். வடமொழி இல்லாமல் தமிழ் மொழி இயங்கமுடியாது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகிவிடும். இவை யாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதுபோல் டாக்டர் கால்ட்வெல் தன்னுடைய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலில் தமிழ் மொழி திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்றும் அது இலக்கண அடிப்படையில் சமஸ்கிருத மொழியைச் சாராதது என்றும் விளக்கமாகவும் தெளிவாகவும் உலகுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

தமிழ் செம்மொழி என உலகுக்கு அறிவித்தாயிற்று. இதுவரை தமிழ் ஒரு செம்மொழி அல்ல என்று எவராவது எதிர்ப்புக் குரல் எழுப்பவில்லை. தமிழ் செம்மொழி என்பதற்கு ஊன்றிய அணை கொடுப்பன அதன் பண்டைய இலக்கியங்களேயாகும். இவற்றை இன்றைய தலைமுறையினர்க்கும் இனி வருவோர்க்கும் செம்மையான முறையிலே கையளிப்புச் செய்வதற்கு ஏற்ற வழிவகைகள் செய்ய வேண்டும். செம்மொழி மாநாடுகளும் செம்மொழி மையத்தின் சிறப்பான பணிகளும் அதற்குத் துணைசெய்யும். சங்க இலக்கியங் களையும் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் ஆகிய நூல்க ளையும் சிறப் பாகக் கற்பதற்கு இளம் மாணவர் களுக்குப் புல மைப் பரிசுகள் வழங்கி ஊக்கம் கொடுக்கப்படு கின்றது. உலகப் பல் கலைக் கழகங் களில் வாய்ப்பு ஏற்படக்கூடிய இடங்களில் செம்மொழித் தமிழ்த் துறை யினை அமைக் கவும், பேராசிரி யர் பதவி நிலை யினை ஏற்படுத் தவும் முயற்சி கள் மேற்கொள் ளப்பட வேண் டும். தமிழ் ஒரு செம்மொழி என்று அறி வித்தபின்னர் அது இன்னும் 50 ஆண்டுகளில் செத்துவிடும் என்று அச்சப் படாமலிருக்க வழிசெய்ய வேண்டும். தொலைக்காட்சி களிலும் வானொலியிலும் ஆங்கிலத் தமிழுக்குப் பதி லாக தனியாகத் தமிழ்மொழியைப் பயன்படுத்த வழிசெய்யவேண் டும்.


## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, தும்பளை வோல்ரன் பிளேஸில் அமைந்துள்ள 3½ பரப்பளவுள்ள காணியும், கட்டிய குறையில் உள்ள வீடும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: செல்வவினாயகம் அருளகம்
ஓர்த்து மாதாலேன், தும்பளை, பருத்தித்துறை.
021 3212573
தும்பளை-077 6648754
கொழும்பு-077 5074749

மகளிருக்கான குறுகிய கால பயிற்சிகள்

**கலாலயா** *பயிற்சியகம்*
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

கடந்தமாதம் ஆரம்பமான புதிய வகுப்புகளில் செவ்வாய், புதன் பிரிவுகளுக்கு மட்டும் கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், தையல், Fabric Painting, Saree Work பயிற்சிகளுக்கு குறிப்பிட்டளவு புதிய மாணவிகள் உடன் அனுமதிக்கப்பட உள்ளனர்.

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப. 2.00 மணிவரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

## INDIAN - இந்திய STUDENT VISA

**A/L** சித்தியடைந்த மாணவர்கள் இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து **Engineer / Graduate** ஆக வாய்ப்பு

**Anna Engineering University / Bangalore University**

**University Grant Commission Approved Degrees**

- I.T Engineering,
- Computer Science Engineering,
- Electronics and Communication Engineering,
- Mechanical Engineering,
- B.Sc. (Genetics),
- B.Sc. (Biotechnology),
- B.Sc. (Microbiology),
- B.Sc. Physiotherapy
- B.Sc. Nursing
- BBM. / BBA
- B.Com (Computers)
- B.Sc. (Fashion & Apparel Design),
- B.A. (Journalism),
- BHM. (Bachelor of Hotel Management),
- BCA. (Computer Applicants),

**Call : 077 9004194 / 0777 767818**

**SIC,** 734, Hospital Road,Jaffna.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 1940.09.16
மறைவு : 2010.05.21

அமரர்
**சங்கரப்பிள்ளை தேவராஜன்**

எங்கள் அன்புத் தெய்வமே!
எத்தனை நாள்கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மைவிட்டு அகலாது

கடந்த 21.05.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (20.06.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ் விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிராமனோடை
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்


## கல்வி

நீங்கள் ஒரு மாணவனா? U.K இல் உயர்கல்வி தொடர விரும்புகிறீர்களா? அப்படியானால் என்னை அணுகவும். U.K இல் உயர்கல்வி தொடர்வதற்கான சகல வசதிகளும் செய்து தரப்படும்.

தொடர்பு
077 0590165

## வீடு விற்பனைக்கு

யாழ் நகரில் மாடி வீடு விற்பனைக்கு உண்டு. யாழ் **Model Market** இல் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்திலும், சுமார் 2.8 பரப்பு வளவு விஸ்தீரணமும், சுமார் 2,850 ச. அடி உடையதும் நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடியது. வீடாகவும் வியாபார தேவைக்கும் பாவிக்க கூடியது. வாகன தரிப்பிட வசதியும் உண்டு. தரகர் சேவை தேவையில்லை.

தொடர்பு 0112478997 வேலை நாட்களில் காலை 9.00 மணி-4.00 மணி. E.mail : Karthicd@gmail.com

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து 1½ கி.மீ. தூரத்தில், நுணாவில் கிழக்கு கல்லடி வீதியில் 8 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

விபரங்களுக்கு தொடர்புகொள்க **0776675574** அல்லது **0776913124**

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப் பட்ட No-1 தரமான Broiler கோழிக்குஞ்சுகள் 21.06. 2010 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசு ஒழுங்கை, நல்லூர். T.P 0212226944
சூட்டி பாம்- வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம். T.P 0213216290

## விற்பனைக்கு


★ நல்ல நிலையில் பராமரிக்கப் பட்ட Toyata Hi-ACE-Hi-Roof வான் (61-XXXX), (Duol-A/C, Radio- Cassette), சாய்முறை ஜப்பான் சீட் மற்றும் HYUN DAI-H100 வான்.

★(JY-XXXX-DUOL-A/C, Radio/ Cassette) சாய்முறை ஜப்பான் சீட்.

இரண்டு வாகனங்களையும் எதிர் வரும் 23.06.2010 புதன்கிழமை
**வோயேச்சஸ் லங்கா**
137, பலாலி வீதி (தபால்பெட்டிச் சந்திக்கு அருகில்),
திருநெல்வேலி
என்னும் முகவரியில் பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு:
நிகன்,
*0777531470, 0217200404/05*


## மரண அறிவித்தல்



**திரு. கந்தையா நடராசா**
**(ஓய்வுபெற்ற மிருகவைத்தியர்)**


வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சொய்சாபுர தொடர்மாடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு. க. நடராசா அவர்கள் 18.06.2010 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சேதுப்பிள்ளை கந்தையா அவர்களின் புதல்வனும், காலஞ்சென்ற அன்னம்மா ராமநாதனின் அன்புச் சகோதரரும், அன்னலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், விஜயகுமார் (கனடா), ஜெயக்குமார் (லண்டன்), லலிதா (சொய்சாபுர தொடர்மாடி) ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலாதேவி, விஜிதா, நந்தகுமார் ஆகியோரின் மாமனாரும் விதுர்ஷன், ரொமியா (கனடா), ஹரிஷன் (லண்டன்), பிருந்தா (ஆசிரியை, Kingston International) கீர்த்தனா (மாணவி-சைவமங்கையர் வித்தியாலயம்), விமல்ராஜ் மாணவன் கொ. இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 20.6.2010 அன்று காலை 8.00 மணி தொடக்கம் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஈமக்கிரியைகளின் பின் மாலை 5.00 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல் க. நந்தகுமார்
B22/1/4, சொய்சாபுர தொடர்மாடி, மொரட்டுவ
T.P. 0785628441, 2622744

## மரண அறிவித்தல்

**சின்னையா இராஜேந்திரா**



யாழ்ப்பாணம் தென்மராட்சி, வரணி, இடைக் குறிச்சி, சாவலப்பிட்டி கந்த சுவாமி கோயிலடியைப் பிறப் பிடமாகக் கொண்டிருந்த சின்னையா இராஜேந்திரா 27.05.2010 அன்று இந் தியா திருச்சியில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - இராசபூரணம் தம்பதியரின் ஏகபுதல்வனும் தொல்புரம் கிழக்கு காலஞ் சென்ற முதலித்தம்பி - இராஜ லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் அனுஜியாவின் ஆருயிர்க் கணவரும் அஜேந் திரா, சஜேந்திரா, விஜேந் திரா ஆகியோரின் அன்பு அப்பாவும் இராஜேஸ்வரி (ராசு), மகேஸ் வரி (தேவி), ச.பாலசுந்தரம் ஆகியோரின் அன்புத் தம்பியும் விக்கி னேஸ்வரியின் (ராணி - கனடா) அன்பு அண்ணாவும் கந்தப்பு, காலஞ்சென்ற கதிர்காமநாதன், இராசநாயகம் (கனடா), சத்திய மூர்த்தி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மைத்துனரும் துளசி, மைதிலி, ரங்கநாதன் (சுவிஸ்), வரதராஜன் (லண்டன்), துவார கன் (கனடா), மிதினா (கனடா), சக்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருச்சி, குமரன்நகர் 11ஆவது தெரு, 19ஆம் இலக்க இல்லத்தில் 27.05.2010 அன்று மாலை 5 மணிக்கு நடைபெற்று காவேரி நதிக்கரையில் பூதவுடல் தக னம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*மனைவி - அனுஜியா*
இலங்கை - 0094718174443
இந்தியா - தொ.பே.: 00919003797035

(99701)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த போக்குவரத்துத்துறை பிரதி அமைச்சர் எஸ்.திஸாநாயக்க கோண்டாவில் இ.போ.ச சாலைக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.*

*இதில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.கணேசபிள்ளை பிரதி அமைச்சரை வரவேற்று அழைத்துச் செல்வதை முதற் படத்திலும், பிரதி அமைச்சருக்கு மாலை அணிவித்து வரவேற்பதை இரண்டாவது படத்திலும், புதிதாகப் புனரமைக்கப்பட்ட நீண்டதூர பஸ் சேவைக்கான பஸ்ஸை பிரதி அமைச்சர் கையளிப்பதை மூன்றாவது படத்திலும், கோண்டாவில் சாலையின் பொறியியல் பிரிவை பிரதி அமைச்சர் பார்வையிடுவதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: சுகந்தன்)*

# குடாநாட்டுக்கான மணல் விநியோகம்; மருதங்கேணியில் மேலும் ஒரு நிலையம்

யாழ்ப்பாணம்,ஜூன் 20

யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது நிலவும் மணல் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் மேலதிகமாக மணல் விநியோக நிலையத்தை மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் கொட்டோடை கிராமத்தில் திறக்கவுள்ளோம்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அரச அதிபர் தெரிவித்தவை வருமாறு:-

அரசாங்கத் திணைக்களங்களினால் கண்காணிக்கப்படும் வீட்டுத் திட்டங்களுக்கும் ஏனைய கட்டுமானப் பணிகளுக்கும் பொதுமக்களின் நன்மை கருதி அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுக்கும் மணல் தேவைப்படுவோர் தமது விண்ணப்பங்களை நாளை திங்கட்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடத்தில் இயங்கும் புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கங்கள் பணியகத்தில் ஒப்படைக்கலாம்.

மேற்படி விண்ணப்பங்களை ஒப்படைக்கும்போது அரசாங்கத் திணைக்களத்தால் கண்காணிக்கப்படும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர், சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரின் சிபார்சினை மணல் பெறுவதற்கான விண்ணப்பத்தில் பெற்றுத் தமக்குத் தெரிவித்த பாரவூர்தியின் இலக்கத்தையும் அந்த விண்ணப்பத்திலேயே குறிப்பிட வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்களினால் கண்காணிக்கப்படும் வீட்டுத் திட்டங்களுக்கும் பொது மக்களின் நன்மை கருதி அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுக்கும் உரிய மணல் பெறுவதற்கான விண்ணப் பங்கள் அந்தந்தப் பிரதேச செயலர்களினால் சிபார்சு செய்யப்படுவதுடன் தேவைப்படும் மணலை ஏற்றிப் பறிப்பதற்கு அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள பாரவூர்திகளை சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் சிபார்சு செய்தல் வேண்டும் - என்று தெரிவித்தார்.

மணல் விநியோகம் தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் யாழ்.அரச அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்துக்கான பதில் கடிதத்தில் மணல் விநியோகத்திற்கு மாற்று ஏற்பாடு செய்யவிருப்பதாக அரச அதிபர் குறிப்பிட்டிருந் தார் என்பது தெரிந்ததே. (ஒ-1-201)

## தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி ஆராய்வு அரங்கு நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாண மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக அபிவிருத்தித் துறைகளை முன்னெடுத்துச் செல்வது குறித்த மதிப்பீட்டுப் பணியை ஸ்ரீலங்கா முதலீட்டுச்சபை மேற்கொள்ளவுள்ளது.

அதன் முதற்கட்டமாக, முதலீட்டு வசதிகள், வாய்ப்புகள் குறித்த தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் அரங்கங்கள் நாளை திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் இங்கு நடைபெற உள்ளன.

நாளைய அரங்கம் யாழ்.செயலகத்தில் பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் நான்கு மணிவரை நடைபெறும். சாத்தியக் கூறுகளைக் கண்டறியும் இந்த அரங்கில் கொழும்பில் உள்ள பிரபல தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பிரதம அதிகாரிகளும், மூத்த அதிகாரிகளும் பங்குபற்றுவர்.

இந்த ஒன்றுகூடல் அரங்கில் குடாநாட்டில் உள்ள தகவல் தொழில்நுட்பம் சார்ந்த அரச, தனியார் நிறுவனங்களைப் பங்குபற்றுமாறு ஸ்ரீலங்கா முதலீட்டுச் சபையின் நிறைவேற்று அதிகாரி கேட்டுள்ளார். (அ)

# முகாம்களிலுள்ள மக்களுக்காக அமெரிக்கா 22 லட்சத்து 50 ஆயிரம் டொலர் நிதியுதவி

கொழும்பு, ஜூன் 20

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களின் நலன் கருதி 22 லட்சத்து 50 ஆயிரம் டொலர்களை நிதியுதவியாக வழங்க அமெரிக்க முன்வந்துள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கையின் போது குறித்த நிதி வழங்கப்படுமென இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

குறித்த நிதியானது 9 ஆயிரம் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு உதவுமென்றும் தூதரகம் கூறியுள்ளது.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அலுவலகத்தின் ஊடாக இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

2009 ஆம் ஆண்டு தொடக்கம் நேற்று வரை இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான மனிதாபிமான உதவி அடிப்படையில் 3 கோடியே 30 லட்சம் அமெரிக்க டொலர்களை அமெரிக்கா உதவியாக வழங்கியுள்ளது.

# ஐ.நா. நிபுணர் குழுவுக்கு இலங்கையில் இடமில்லை!

## அரசு திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு ஐ.நாவின் நிபுணர் குழுவை அனுமதிக்கப் போவதில்லை என்கின்ற நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் கிடையாது - என்று ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்கும் நிபுணர்கள் குழு அடுத்த வாரம் அமைக்கப்படும் என்றும், குழுவில் அடங்கும் உறுப்பினர்களின் பெயர் விவரங்களும் அடுத்த வாரத்தில் வெளியிடப்படும் என்றும் ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான தலைமை அதிகாரி லின் பொஸ்கோ நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஐ.நா நிபுணர் குழு தொடர்பாக அரசின் நிலைப்பாட்டில் ஏதாவது மாற்றம் உண்டா என்று கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

யுத்தக் குற்றங்களை விசாரிக்க ஜனாதிபதியால் நல்லிணக்கக் ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் ஐ.நா நிபுணர் குழு எதற்கு - என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

# இலங்கையர்களுடன் இரு படகுகள் ஆஸ்திரேலிய பொலிஸாரால் மீட்பு

கொழும்பு, ஜூன் 20

இலங்கையர்களும் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு அகதிகள் படகுகள் மேற்கு ஆஸ்திரேலியாவில் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இரண்டு படகுகளும் 40 நிமிட இடைவெளியில் ஆஸ்திரேலியாவின் மேற்குக் கரையை அடைந்தன எனக் கூறப்படுகிறது.

குறித்த இரண்டு படகுகளிலும் 74 அகதிகள் மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், அவர்களை அடையாளம் காணும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, அவர்கள் அனைவரும் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானியர்கள் என உறுதிப்படுத்தப்பட்டால், அவர்களுக்கான அகதி அந்தஸ்து வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் ஆஸ்திரேலியாவுக்கு வந்த அகதிகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 278 பேராக அதிகரித்துள்ளது எனக் கூறப்படுகிறது.

## நாடாளுமன்ற நிர்வாகஆணையர் நியமனம்

கொழும்பு, ஜூன் 20

மேல்நீதிமன்ற முன்னாள் நீதிபதி திஸ்ஸ ஏக்கநாயக்க நாடாளுமன்ற நிர்வாக ஆணையாளராக நியமிக்கப்பட் டுள்ளார்.

மேலும், சிரேஷ்ட சட்டத்தரணி சுரேஸ் சந்திர உயர்நீதிமன்ற நீதியரசர்களில் ஒருவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நியமனங்களை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உட்பட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## 85 புற்றுநோயாளருக்கு உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூன்20

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மிக வறிய புற்றுநோயாளர்கள் 85 பேருக்கு உணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு வட மாகாணப் புற்றுநோய் தடுப்புச் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்த உணவுப் பொருள்களை வழங்குவதற்காக சுவிற்சர்லாந்தில் வசிக்கும் சு.பாலச்சந்திரன், சு.ஜெயமோகன் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் சிலர் நிதி அன்பளிப்பை வழங்கியுள்ளனர்.

இவர்களின் நிதியைக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட புற்றுநோயாளர்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாக வட மாகாண புற்றுநோய் - எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் அறிவித்துள்ளார். (ஒ-10)

# யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பாக நம்பகமான விசாரணையை நடத்துக!

## இலங்கையிடம் பிரிட்டன் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 20

யுத்தத்தின்போது இடம்பெற்றன எனக் கூறப்படும் குற்றச்செயல்கள் தொடர்பில் நம்பகமான விசாரணைகளை இலங்கை நடத்த வேண்டும் - என்று பிரிட்டன் கோரியுள்ளது.

குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீனமானதும், நம்பகமானதுமான விசாரணைகளை முன்னெடுக்குமாறு பிரிட்டன் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அலிஸ்டயர் பேர்ட் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுடன் [illegible] நடத்திய உரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் நீண்டகாலத்திற்கு நாட்டை பாதிக்கும். இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாதது. எனவே, குற்றச் செயல்கள் தொடர்பில் நியாயமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

கொடிய யுத்தச் சூழ்நிலையிலிருந்து விடுபட்டுள்ள இலங்கை, விரைவில் அபிவிருத்தி அடைவதற்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை [illegible] பிரிட்டன் பூரண [illegible] வழங்கும் - என்று மேலும் அவர் கூறினார்.

## றுஹுணு பல்கலையின் 4 பீடங்கள் காலவரையின்றி மூடப்பட்டன

கொழும்பு,ஜூன் 20

றுஹுணு பல்கலைக்கழகத்தின் 4 பீடங்கள் நேற்றுமுன்தினம்முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளன - என்று பல்கலைக்கழகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, மறு அறிவித்தல் வரை குறித்த 4 பீடங்களின் மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திற்குள் நுழைவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது எனவும் பல்கலைக்கழக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, நிர்வாக, பொறியியல் பீடம், கடற்றொழில் மற்றும் அணு விஞ்ஞானம், தொழில்நுட்ப பீடம், சமூக விஞ்ஞான பீடம் மற்றும் விஞ்ஞான பீடம் என்பனவே இவ்வாறு காலவரையரையின்றி மூடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் களரி நகரும் அரங்கு இலங்கை நாடகத்துறைக்கோர் புரட்சிகரமான காலடி

நாடகக் குழு ஒரு பிரதேசத்திற்குச் சென்று அங்கு அமைந்துள்ள நாடக மண்டபத்தில் நாடகம் அரங்கேற்றுவது இலங்கை நாடகத்துறையின் வரவேற்க்கப்பட்ட வழக்காகும். ஆனால், இலங்கையில் ஒரு நாடகக்குழு நாடகம் அரங்கேற்றுவதற்காக தங்களுடைய அரங்கையே எடுத்துச் செல்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? அது போன்ற நகரும் நாடக அரங்கை பின்தங்கிய தூரப்பிரதேசங்களுக்கு எடுத்துச் சென்று நாடகம் காட்ட வேண்டும் என்ற எண்ணம் நாடகக் கலைஞர் பராக்கிரம நிரியெல்ல அவர்களுக்கு உதித்தமைக்கு மிக நீண்ட வரலாறுண்டு. நாடகம் அரங்குகலையின் ஊடாக



கல்வி, தனிமனித வளர்ச்சியை விருத்தி செய்யமுடியும் என்பது நாடகக் கலைஞர் எச்.ஏ.பெரேரா அவர்களின் கருத்தாகும். இக்கருத்துக்களுக்கமைய நீண்ட கால கனவை மெய்ப்பிக்க பிறந்ததே, மக்கள் களரி நாடக அரங்கோடு இணைந்த சஞ்சார நாடகக்குழு.

நாட்டின் பல்வேறு பாகங்களையும் சார்ந்த தமிழ், சிங்கள இளைஞர், யுவதிகள் மக்கள் களரி உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஒரே கூரையின் கீழ் தங்கியிருந்து, நாடக் கலையின் முதன்மை மூத்தக் கலைஞரான மக்கள்களரி நிறுவகர் அவர்களின் சிறந்த பயிற்சியினைப் பெற்று, இன வேறுபாடுகளைத் தகர்த்தெறிந்து நெருக்கமாகவும், புரிந்துணர்வுடனும், ஒற்றுமையுடனும் செயல்படும் சகோதரர்களாக இவர்கள் விளங்குகின்றார்கள். எனவே இவ்வுணர்வை மக்களுக்கு எடுத்துக்காட்டும் முன்னோடியாக மக்கள்களரி திகழ்கிறது.



இப்பல்லின நாடகக்குழுவின் கன்னித் தயாரிப்பு ''அந்தரமல்'' எனும் குறு நாடகம் ஆகும். இது புதிதளித்தல் ஊடாக தயாரிக்கப்பட்ட படைப்பாகும். அதன் பின் ''சீதாம்பரபட்டய'' எனும் நாடகம் தயாரிக்கப்பட்டது. இதன் விசேடம் என்ன என்றால் இவ்விரு நாடகங்களையும் குழுவினர் அயராது முயற்சித்து தமிழில் உருவாக்கினார்கள். அந்நாடகங்கள் முறையே ''[illegible]க்கலம் பூ'' மற்றும் ''மாயப்பட்டாடை'' என்பனவாகும். இந்தப் புதிய முயற்சி [illegible] பரீட்சித்துப் பார்ப்பதற்காக இந்நாடகங்களை அரங்கேற்றுவதற்காக வடக்கு நோக்கி விஜயம் செய்து, இலங்கையில் இதுவரை எந்த நாடகக்குழுவும் பெற்றிராத அரிய அனுபவத்தைப் பெற்றுக் கொண்டார்கள். நீண்ட கால யுத்தத்திற்கு முகம் கொடுத்த சமர் பூமியிலே தாங்கள் பார்த்த சிங்கள நாடகங்களில், தமிழர்களும் நடிப்பதைக் கண்டு சிங்கள மக்கள் பரவசமடைந்தார்கள். தாங்கள் பார்த்த தமிழ் நாடகங்களில், சிங்களவர்களும் நடிப்பதைக் கண்டு தமிழ் மக்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள்.

மக்கள் களரி நாடகத் தயாரிப்பில் முதலாவது நீள்நாடகமான ''சரண்தாஸ்'' இந்திய நாடக்கலைஞரான ஹபிப் தன்வீர் (Habib Tanvir) அவர்களின் ''சரண்தாஸ் சோர்'' என்ற நாடகத்தின் தழுவலாகும்.


ரஷ்ய நாட்டு நாடகக் கலைஞரான யெவ்ஜெனி ஷ்வான்ஸ் அவர்களின் ''தடிரகன்'' என்ற நாடகம் ''மகரராக்ஷ்'' எனும் பெயரில் படைக்கப்பட்டது. ''திருடன் வந்தான்'' எனும் சிறுவர் நாடகமும் ஆறு குறுநாடகங்களும் இதன் பின் தயாரிக்கப்பட்டன. 'சுத்ரக' எனும் பழைய வடமொழி நாடகக் கலைஞரின் '' மிருச்சகடிக்க'' எனும் நாடகம் மக்கள்களரி புதிய தயாரிப்பாகும்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு நாடகங்களைக் காட்டுவதே மக்கள் களரிக்கு சவாலாக அமைந்தது. எனினும் குழுவினரின் ஒற்றுமை நிறைந்த சகோதரத்துவம் அச்சவாலை மிக இலகுவாக வெற்றிக் கொண்டது.

மக்கள்களரி நகரும் அரங்கு, படச்சட்ட அரங்கிற்கு அப்பாற்பட்டு, நான்கு புறமும் இருந்து பார்க்கக்கூடிய ''நிவ் எரீனா'' முறையையும் மூன்று பக்கம் இருந்து பார்க்கக்கூடிய ''திரஸ்ட்'' அரங்கையும் கொண்ட இலங்கையின் முதலாவது ஒரே ஒரு நகரும் அரங்காகும்.

நாடகப் பிரதி எழுதி, தயாரித்து, அதை பார்வையாளர்களுக்குக் காட்டும் ஆற்றுகைக் கலையும் (Performance Theatre) பிரயோக அரங்குக் கலையை பயன்படுத்தி, ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் நாடகப் பயிற்சிப் பட்டறைகள் வழங்குவதும் மக்கள் களரியின் மிகப் பெறுமதியான நோக்கங்களில் ஒன்றாகும். இதன்போது பிரதேச கலைஞர்களின் கலை ஆளுமையை வெளிக்கொணர அவர்களுக்கும் இவ்வரங்கில் வாய்ப்பளிப்படுகிறது.

எரீனா அரங்கை வெற்றிக்கொண்ட ''சரண்தாஸ்'' நாடகம் படச்சட்ட அரங்கையும் வெற்றி கொள்ளும் முகமாக 2006 ஆம் ஆண்டு அரச நாடக விழாவில் தமிழ், சிங்கள பிரிவுகளில் சிறந்த நாடகம் உட்பட 9 விருதுகளை பெற்றுக் கொண் டமை சமூகப் பணிக்காக தம்மை அர்ப்பணித்த இந்நாடகக் குழுவினருக்குக் கிடைத்த சன்மானம் ஆகும். இந்த [illegible] 2008 ஆம் ஆண்டு இந்தியாவில் புது டில்லி நகரில் நடைபெற்ற நாடக விழாவில் கலந்துக் கொண்டது. சென்னை, பாண்டிச்சேரி மற்றும் ஆந்திரா பிரதேசங்களிலும் இந்நாடகத்தை அரங்கேற்றும் வாய்ப்புக் கிடைத்தது.



இதுவரையில் மக்கள்களரி இலங்கை நாடகத்துறையில் சவால்கள்நிறைந்த செயற்பணிகளையே செய்து வருகிறது. அதே போன்று படைப்புக்களைச் சுமந்த முற்றுப் பெறா சஞ்சாரத்தில் குரலில்லா மக்களின் குரலாக அமைவதே மக்கள் களரியின் எதிர்பார்ப்பாகும்.

✱ இது இலங்கையில் உருவான முதல் நகரும் அரங்காகும். (First ever Mobile Theatre in SriLanka)

✱ இது இலங்கையின் ஒருங்கிணைக்கப்பட்ட முதலாவது பல்லின நாடகக் குழு.

✱ இது இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட முதலாவது முழுநேர நாடகக்குழு

✱ இங்கு சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் அனைத்தும் தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டு தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் என அனைத்து மக்களுக்கும் இரசனைத் தன்மையோடிணைந்த அனுபவங்களை பகிர்ந்துக் கொள்வதற்கு எடுத்துக்காட்டாக அமைந்த முதலாவது கலாசார வேலைத்திட்டமாகும்.

மக்கள் களரி நாடகக் குழு இந்த மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 07 ஆம் திகதி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளை நடத்துகின்றது. இந்த நாள்களில் யாழ்ப்பாணம், நல்லூர் செம்மணி வீதியில் அமைந்துள்ள தமிழ் கலவன் பாடசாலை மைதானத்தில் நிறுவியுள்ள மக்கள் களரி நடமாடும் மேடையில் ஜூன் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 2ஆம் திகதி வரை நாடக விழாவொன்றை நடத்தவுள்ளது.

இந்த நாடக விழாவின் போது கௌரவ நாடகங்களாக யாழ்ப்பாண பல்கலைக் கழக லலிதகலா பிரிவினால் விரிவுரையாளர் நவதர்சினி கருணாகரன் தயாரிப்பில் மகாகவி காளிதாசனின் ''அபிஞான சகுந்தலம்'' நாடகமும், திருமுறை கலா மன்றத்தின் 'அட்டை திங்கள்'' நாடகமும் மேடையேற்றப்படவுள்ளன. இதற்கு புறம்பாக, யாழ்ப்பாண பாரம்பரிய நாடகக் கலைஞர்களின் பல்சுவை நிகழ்ச்சிகள் ஜூன் மாதம் 27ஆம் திகதி இந்த நாடக விழாவின் போது உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதே நேரம் , பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக வேண்டி யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 வலயக் கல்விப் பிரிவுகளில் நாடகம் மற்றும் கலை பயிற்சிப்பட்டறைகளும் நடைபெறவுள்ளன.

மக்கள் களரி நாடகம் அனைத்தும் பராக்கிரம நிரியெல்ல அவர்களால் நிர்மாணிக்கப்பட்டவையாகும். நடராஜ சிவம், அமித்த வீரசிங்க, திலீப் ரோஹண, கமலினி செல்வராஜன் மற்றும் பிரேமதிலக்க பேருகந்த ஆகியோர் இந்த நிகழ்ச்சிகளை வழிநடத்துவார்கள். நிஷாந்த குலரத்ன, சொக்கலிங்கம், கிருஷாந்தன், அஜந்தன் சாந்தகுமார், வேணி திரேஸா, தியாகராஜா சிவநேசன், முனியாண்டி காளிதாஸ், சுமுது மல்லவராச்சி, பாலித்த அபேலால், அரோஸா தரங்கனி, ரொனிக்கா ஷாமலி, சினேத் தேவிந்த, மஞ்சுள ரணசிங்க, தாஸன் ஷாம்போல், இராசையா லோகாநந்தன், மலித்தி குமாரி, செல்வராஜ் லீலாவதி, இனேக்கா லங்காபுர, சாந்தினி மல்காந்தி, ரஞ்சித் சுமித், ஜயந்த முத்துதந்ரி, திணேஸ் சுவர்ண சிறி லிவேரா, சுசே சாந்தப்ரிய, அசேல சத்துரங்க, பி.டி ரத்னசேகர, சுரேஷ் அசங்க, ருவினி திலந்தி, அமில தினேஸ், சரத்குமார,ராஜேஸ்வரன் சத்தியப் பிரியா, தினேஸ் ஆகிய மக்கள் களரி நாடகக்குழு உறுப்பினர்கள் நாடகத்தில் பங்கேற்று நடிக்கிறார்கள். வடமாகாண கல்வித் திணைகளம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் மக்கள் களரி வேலைத் திட்டத்திற்கு உதவுகின்றது. ✱




ஈழத்தின் பிரபல எழுத்தாளர் ஐ.சாந்தனின் 'உள்ளங்கையில் உலக இலக்கியம்' என்ற தலைப்பிலான இலக்கிய கட்டுரை நூல் வெளியீடு அண்மையில் தமிழ்நாடு - எழும்பூர் 'இக்சா' மையத்தில் இடம்பெற்றது.

உதயன் பத்திரிகையின் வார இறுதிவெளியீடாக சனிக்கிழமை தோறும் வெளிவந்த 'சஞ்சீவி'யில் '20ஆம் நூற்றாண்டு உலக இலக்கியம்' என்ற தலைப்பில் முன்னர் வெளியான கட்டுரைத் தொடர்,பின்னர் அதேபெயரில் நூலாக வெளிவந்தது. அந்நூலின் இந்தியப் பதிப்பு உள்ளங்கையில் உலக இலக்கியம் என்ற தலைப்பில் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி சென்னை, 'இருவாட்சி இலக்கியத் துறைமுகம்' பதிப்பகத்தால் சென்னையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தமிழக எழுத்தாளர் எஸ்.ஷங்கர நாராயணனின் வழிநடத்தலில் இடம்பெற்ற வெளியீட்டு விழாவில் பிரபல எழுத்தாளரும் 'இந்தியா ருடே' சஞ்சிகையின் முன்னாள் ஆசிரியருமான 'மாலன்' நூலை வெளியிட்டு வைத்தார்.

தமிழகக் கவிஞர் ச.விஜயலட்சுமி மற்றும் எழுத்தாளர் நாஞ்சுமி ஆகியோர் இந்நூலுக்கான ஆய்வுரைகளை நிகழ்த்தினர்.

எழுத்தாளர் மாலன் வெளியீட்டுரை நிகழ்த்துவதையும் நூலாசிரியர் சாந்தன் உட்பட ஏனையோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சகோதரர்களாக வாழ்வதற்கு திடசங்கற்பம் எப்போது....?

* இந்த நாட்டில், இனியும் மக்கள் இரத்தமும் கண்ணீரும் சிந்தாமல் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். உடைந்து போயுள்ள உள்ளங்களில் உண்டான ரணங்களைக் குணப்படுத்த வேண்டும். இலங்கையினால் அந்த ரணங்களை ஆற்ற முடியும் என்பது எனது திடமான நம்பிக்கை.

* இலங்கையில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை வெளிநாடுகளிடம் ஒப்படைக்க முடியாது. எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான பொறுப்பு இலங்கைக்கே உள்ளது.

* எந்த ஒரு காரணத்துக்காகவும் எப்போதேனும் எமது தாய் நாட்டை இனிமேலும் பிளவுபடுத்த நான் இடமளிக்கமாட்டேன்.

* பயங்கரவாதத்தால் மிகப்பெரிதும் பாதிக்கப் பட்டிருந்த கிழக்கில் சகஜநிலையைக் கொண்டு வருவதற்கு எமக்கு நீண்ட காலம் எடுக்கவில்லை. (அதாவது அதனைக் குறுகிய காலத்திலேயே எய்தினோம்.)

அதேபோன்று அடுத்து பயங்கரவாதத்தால் பாதிப்புற்ற வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இந்த வருட இறுதிக்குள் தீர்த்து வைப்போம்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்ற யுத்த வெற்றி விழாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையில் தெரிவித்த பிரதான விடயங்களில் - முக்கிய கருத்துக்களில் - மேற்கண்ட விவரங்களும் உள்ளடங்கும்.

போரின் வெற்றி விழாவைக் கொண்டாடிய வேளையிலும் அதனால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை நினைத்து மனவியல் ரீதியாக அவர் வருந்துகிறார் என்பதை அவரது உரை பிரதிபலிக்கின்றது.

போரின் விளைவுகளால் உடைந்து போயுள்ள உள்ளங்களில் உண்டான ரணங்களைக் குணப்படுத்த வேண்டும் என்று கழிவிரக்கத்துடன் சொல்வதையும் புரிந்துகொள்ள முடிகிறது. இப்போது அது குறித்து மீள நினைத்து மனம் உருகுவதைவிட, போரினால் உண்டாகக் கூடிய பாதகங்களை, மக்கள் வாழ்வில் அது ஏற்படுத் தக்கூடிய கெடுதிகளை, ஆழமான வடுக்களை நீக்க முயற்சிப்பதற்கு இப்போது சிந்திப்பதை விட, அத்தகைய நிலை தோன்றாமல் தடுக்க வழி கண்டிருப்பின், அதுவே உகந்த, சிறந்த மார்க்கம். மனித வாழ்க்கையில், வருமுன் காப்பதே எப்போதும் நன்மை பயக்கும்; நீடித்தும் நிலைக்கும்.

இலங்கையில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை வெளிநாடுகளிடம் ஒப்படைக்க முடியாது என்று ஜனாதிபதி கூறுவது நியாயமானது; ஏற்கக்கூடியது; தன்மான உணர்ச்சி மிகுந்தது.

- ஆனால் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மஹிந்த ராஜபக்ஷ மட்டுமன்றி, அவருக்கு முன்னர் இந்த நாட்டின் தலைவர்களாகப் பதவி வகித்த, அதாவது ஆறு தசாப்தகாலத் தலைவர்களும், சிறுபான்மை இனங்கள் மீதான மேலாதிக்கம், ஒடுக்குமுறை, இலங்கையின் தேசியம் என்பது சிங்களவரது பெரும்பான்மைப் பலத்தின் அநியாயங்களையும், சமதர்மம் அற்ற நிலையியலையும் ஏனைய இனங்கள் சகித்துக் கொள்ளுதல் அல்லது ஏற்றுக்கொள்ள வேண்டும் - என்ற சிந்தனைப் போக்குடன், திமிருடன் செயற்பட்டதன் விளைவே என்பதனை இப்போது வசதிக்கு ஏற்றவாறு மறந்துவிடக்கூடாது!

இந்த நாட்டின் வளமும் சகல இன மக்களும் சமத்துவமான உரிமைகளைக் கொண்டவர்கள் என்ற தேசிய நலனை நாடி, கடந்த 60 வருடங்களாக இந்த நாட்டின் தலைவர்களாக விளங்கியவர்கள் செயற்பட்டிருப்பின், இலங்கையை இன்றைய வினை சூழ்ந்திருக்காது.

இந்த நாட்டு மக்களின் பிரச்சினை குறித்து வெளிநாடுகள் தங்கள் நலனை முன்னிறுத்தி அழுத்தம் கொடுக்கவோ அல்லது எங்கள் நாட்டுக்கு உதவுவது என்ற போர்வையில் தங்கள் பூகோள, பிராந்திய, சொந்த நலன்களை மனதில் இருத்தியோ செயற்பட இடைவெளி இருந்திருக்காது.

இவற்றைக் கவனத்தில் கொண்டு, இந்தச் சிறிய தீவில் வாழும் சகல மக்களும் - எல்லா இன மக்களும் - இந்த நாட்டு மக்களே - வேற்று நாட்டவர்கள் அல்லர்; அதனால் அவர்களுக்கு வெறும் வார்த்தைகளால் மட்டுமன்றி, நடைமுறையில் - சட்டரீதியாக - சமத்துவமான உரிமைகளை வழங்கி சகோதரர்களாக வாழ வழி செய்ய வேண்டும். அரச தலைவர்கள் மனதார நினைப்பதில்லை. அது ஏன்?

இந்த நாட்டில் சலக மக்களும் சகோதரர் களாகச் சமத்துவத்துடன் வாழ வழி செய்ய வேண்டுமென்ற அரசியல் திடசங்கற்பம் தெற்குத் தலைவர்களிடம் எப்போது பிறக்குமோ?

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளை இலகுவாக்க முடிவு

## கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்களை இலகுவாக்குவது என்று கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. இதுகுறித்து ஆராய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை கூடும் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில், இக்குழுவை நியமிப்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அறிவுக்கு அப்பாற்பட்ட வகையில் வினாத்தாள்கள் தயாரிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆரம்பப் பிரிவில் பயிலும் மாணவர்களுக்குத் தேவையற்ற அழுத்தங்களைக் கெடுக்கும் வகையில் கடுமையான கேள்விகளைக் கொண்டதாகக் குறிப்பிட்ட பரீட்சை வினாத்தாள் அமைவதாக அந்த முறைப்பாடுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரபல்யமான பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்காகவே நடத்தப்படும் இந்தப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் களைப்பு அடையும் வகையில் வினாத்தாள்கள் உள்ளன. அவை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும் கூட்டத்தில் அமைக்கப்படும் குழு, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர், பொது மக்களிடம் அபிப்பிராயங்களைப் பெற்று, வினாத்தாளில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து சிபார்சுகளை வழங்கும். அதனடிப்படையில் வினாத்தாளை சுலபமானதாக மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப்பரீட்சை வினாத்தாளுக்கு விடையளிக்க அனேகமான மாணவர்கள் சிரமப்படுகிறார்கள். இதன் காரணமாக அவர்களின் எதிர்காலக் கல்வி இலக்கு தவறான பாதையில் செல்லச் சந்தர்ப்பம் ஏற்படும். இதைத் தவிர்ப்பதற்காக வினாத்தாளைச் சுலபமான கேள்விகளுடன் தயாரிக்க வேண்டியுள்ளது - என்றார் அவர். (ஒ-1)

### தீர்த்தத் திருவிழாவின் போது

## திருவடிநிலை கடலில் மூழ்கி 9 வயதுச் சிறுமி மரணம்

மூளாய், ஜூன் 20

சுழிபுரம், திருவடிநிலைக் கடலில் பறாளை விநாயகர் ஆலய தீர்த்தத் திருவிழா நேற்று நடைபெற்ற போது மாணவி ஒருவர் கடலில் மூழ்கி மரணமான பரிதாப சம்பவம் இடம் பெற்றது.

இந்தச் சம்பத்தில் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையில் தரம் 4இல் கல்விகற்கும் செல்வராசா ஜெசிந்தா (வயது-9) என்னும் சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (201-99-78)

### பளைப் பிரதேச செயலக பிரிவில்

## 10 கிராம அலுவலர் பிரிவுகளில் இன்னும் மக்கள் மீளக்குடியமர அனுமதி இல்லை

பருத்தித்துறை, ஜூன் 20

பளைப் பிரதேச செயலக பிரிவில் எட்டு கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

புலோப்பளை கிழக்கு, புலோப்பளைமேற்கு, முல்லையடி, தம்பகாமம், பளைநகரம், தர்மங்கேணி, மாசார், சோரன்பற்று ஆகிய கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளவும் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இப்பிரிவிலுள்ள மேலும் 10 கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளவும் குடியேறுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. முகாவில், கோயில்வயல், இயக்கச்சி, அல்லிப்பளை, வேம்பொடுகேணி, கிளாலி, முகமாலை, இத்தாவில், கச்சாய் வெளி, அரசர் கேணி ஆகிய கிராம சேவை அலுவ லர் பிரிவுகளில் மக்கள் இன்னமும் மீளக் குடியேற்றப்படவில்லை. (ஒ-190)

## ஹற்றன் நஷனல் வங்கியின் சேவை நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

ஹற்றன் நஷனல் வங்கியின் வாடிக்கையாளர் சேவை நிலையம் ஒன்று ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் நாளை திங்கட்கிழமை நண்பகல் 2 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

வங்கியின் நிறைவேற்று அதிகாரி இ.தியாகராசா கிளையைத் திறந்து வைப்பார். இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்து கொள்வார். (ஒ-1-14)

## பட்டப்பின் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு ஜூலை 18க்கு முன்னர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

2011ஆம் கல்வி ஆண்டில் பட்டப்பின் டிப்ளோமா (உள்வாரி) முழுநேரப் பாடநெறியைத் தொடர்வதற்காக உரிய தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒருவருட காலத்தை இந்தப் பாடநெறி கொண்டிருக்கும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் தமிழ்மொழி மூலம் இந்தப் பாடநெறியைக் கற்க முடியும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைப்பதற்கான இறுதித் திகதி அடுத்தமாதம் 18ஆம் திகதியாகும். மேலதிக விவரங்களை இந்த மாதம் 18ஆம் திகதி 1659 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகையில் பெற்றுக்கொள்ள முடியும். (க)

## கெற்பேலி குடியேற்றத்திட்டத்துக்கு மின்சார வசதி கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜூன் 20

தென்மராட்சி கிழக்கு, கெற்பேலி குடியேற்றத் திட்ட குடியிருப்புகள் முதன்முறையாக மின் வெளிச்சம் பெற்றுள்ளன.

'கார்ப்' திட்ட நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட மின்விநியோகத் திட்டத்தில் விடத்தற்பளை, கெற்பேலி ஆகிய கிராமங்களுக்கு மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளன.

இக்கிராமங்களுக்கு மின் விநியோகம் மேற்கொள்ளப்படுவதற்கு கெற்பேலியில் 160 கே.வி. புதிய மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ளதையடுத்து கெற்பேலி குடியேற்றத் திட்டத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## சிவத்தமிழ்ச் செல்வியின் குருபூசை, நினைவுப்பேருரை இரு இடங்களில்

யாழ்ப்பாணம், ஜூன் 20

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் இரண்டாவது குருபூசைதினம் எதிர்வரும் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்திலும், இண்டாவது ஆண்டு நினைவுப் பேருரை எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

குருபூசை தினத்தன்று முற்பகல் 10.20 மணிக்கு இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நினைவுரை நிகழ்த்துவார்.

முற்பகல் 10.30 மணிக்கு இரண்டாவது திருமுறை நூல் வெளியீடும், 11.10 மணிக்கு அன்னை சிவத்தமிழ்ச் செல்வி மலர் வெளியீடும் இடம் பெறவுள்ளது.

இரண்டாந்திருமுறை நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்லைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் திருமதி ஏ.என்.கிருஷ்ணவேணியும், அன்னை சிவத்தமிழ் செல்வி நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திருமதி கருணாதேவி சிவாஜியும் நிகழ்த்தவுள்ளனர்.

நினைவுப் பேருரை நிகழ்வன்று 'மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர்' என்னும் தலைப்பில் வைத்திய கலாநிதி சிவன்பாலன் சிவன்சுதன் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (1-204)

### நாளை

| | |
|---|---|
| ஆனி 07 | 21.06.2010 |
| | திங்கட்கிழமை |
| திதி | : தசமி |
| | மு.இ. 08.13 வரை |
| நட்சத்திரம் | : சித்திரை |
| | மு.இ. 09.26 வரை |
| சுபநேரம் | : 11.54 - 01.24 |
| ராகுகாலம் | : 07.24 - 08.54 |

## இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவை; மீண்டும் ஆரம்பிக்க ஏற்பாடுகள் தீவிரம்

இராமேஸ்வரம், ஜூன் 20

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான ஏற்பாடுகளை விரைவுபடுத்துமாறு மத்திய அரசு தமிழ்நாடு கப்பல் சேவை சபையைப் பணித்துள்ளது.

கடந்தவாரம் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின்போது கப்பல் சேவையை மீள ஆரம்பிக்க இணக்கம் காணப்பட்டிருந்தது.

இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராயும் பணியை தமிழ்நாடு கப்பல் சேவை சபை ஆரம்பித்துள்ளது. தமிழ்நாட்டில் இயங்கும் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் மூலம் இந்தப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டால் இருநாட்டுக்கும் இடையில் பயணிகளின் போக்குவரத்து சீராகிவிடும் என்று புதுடில்லி அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழ அகதிகள் தமது நாட்டுக்குத் திரும்ப இந்தக் கப்பல் சேவை உதவும் என்றும் இருநாட்டு வர்த்தகர்கள், உல்லாசப் பயணிகள், மீனவர்கள் குறைந்த செலவில் பயணம் செய்யச் சந்தர்ப்பம் கிட்டும் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசதொண்டு நிறுவனங்கள், உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் அறிவிக்குமாறு எஸ்.பி.திவரட்ண அறிவுறுத்தியுள்ளார்.

அவர் தமது பணிப்புரையில் தெரிவித்திருப்பதாவது:-

உத்தியோகபூர்வமான வைபவங்கள் நடத்தப்படும்போது அதிகாரிகள் மாத்தி ரமே அவற்றில் கலந்துகொள்வது அவதானிக்கப்பட்டுள்ளது. உங்கள் மாவட்டங்களில் அரசைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, வட மாகாண ஆளுநரோ பிரதேசத்தின் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியோ மற்றும் ஜனாதிபதியின் விசேட செயலணி குழுப் பிரதிநிதிகளோ அழைக்கப்படுவதில்லை.

குறிப்பாக புதிய கட்டடத் திறப்பு விழாக்கள் அல்லது வேறு சேவை நிலையங்கள் திறக்கப்படும்போது அல்லது ஐ.நா. முகவர்கள், சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனங்கள், அரசுசார்பற்ற நிறுவனங்கள், மாவட்டத்திலுள்ள அதிகாரிகளும் மாகாண சபை அதிகாரிகளும் மாத்திரமே பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

இவ்வித நிகழ்வுகள் யாவும் அரசின் அங்கீகாரத்துடனேயே மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

வடமாகாணத்தில் மீள்குடியமர்வுக்கும் மீள் அமைப்புக்கும் ஜனாதிபதியின் செயலணிக் குழு ஒன்று பொறுப்பாக இருக்கின்றது. இத்தகைய ஒரு நிலைமையில் அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வடமாகாண ஆளுநருக்கும் பாதுகாப்புத் துறை தளபதிக்கும் மற்றும் ஜனாதிபதி யின் செயலணியினருக்கும் அறிவிக்க வேண்டியதும் அரசாங்கத்தின் சார்பில் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்வதும் உங்கள் முக்கிய கடமையாகும்.

சில வேளைகளில் அம்மாதிரி முகவர் அமைப்புகள் குறித்த உறுப்பினர்களை தங்கள் சார்பில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமல் தவிர்ப்பதற்கு விரும்பக்கூடும். அரச அதிபர் என்ற முறையில் அவர்களுக்கு அறிவித்து கலந்துகொள்ளும்படி அம்மாவட்டத்தின் அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண ஆளுநர், அப்பகுதியின் பாதுகாப்புப் படைகளின் தளபதி மற்றும் ஜனாதிபதி செயலணி ஆகியவர்களைக் கேட்டுக் கொள்வதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இந்த விடயத்தை பிரதேச செயலாளர்களுக்கு அறிவித்து அவர்களின் பகுதியில் பணியாற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இதன் அவசியத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுங்கள். அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண ஆளுநர், பகுதி இராணுவ கட்டளைத்தளபதி ஆகியவர்களை அழைக்கும் படியாக கேட்டுக்கொள்ளுங்கள். இம்மாதிரியான வைபவங்கள் தொடர்பான தகவல்கள் ஜனாதிபதி செயலணிக்கும் அறிவிக்கப்பட வேண்டும் - என்று பணித்துள்ளார்.

(அ-ப)

## அகாஷி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாகத் தகவல்கள் வெளியாகின. ஆனால் உத்தியோகபூர்வ அறிக்கை எதுவும் நேற்றிரவு வரை வெளியாகவில்லை.

அகாஷி நாடு திரும்புவதற்கு முன்னர் இன்று செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்த விருக்கிறார்.

(1)

## மனித உரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதங்களோ பாதுகாப்பு அமைச்சின் விளக்கத்தில் இல்லை.

நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணைகளில் மேற்கூறிய அம்சங்கள், பிரச்சினைகள் மிகக் கவனத்துடன் முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளன.

அதற்குப் பதிலாக ஆணைக்குழு முன்னோக்கிக் கவனிக்கப்படவேண்டும் என்று மட்டும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதற்கு ஏற்ற விதத்தில், தேசிய நட்புறவை பலப்படுத்தும் பொருட்டு நீதி செலுத்தும் இலக்கு கண்டறியப்பட வேண்டும் என்று சமாளிக்கப்பட்டுள்ளது.

கேள்வி: ஆணைக்குழுவினர் ஆணையை உகந்த விதத்தில் தகுந்த முறையில் மாற்றினால்....?

பதில்: ஆணையை மாற்றினால் கூட, மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்கள் குறித்து சர்வதேச நியமங்களின் பிரகாரம், அவற்றை அடையும் விதத்தில் நம்பிக்கைக்கு உரிய முறையில் ஆணைக் குழு விசாரணைகளை மேற்கொள்ளுமா என்பது பெரும் கேள்விக்கு உரியதாகும்.

மேலும் ஆணைக்குழு உறுப்பினர்கள் அரச தரப்பை விட்டுத் தூர விலகி நின்று நியாயமாகச் சுயேச்சையான முறையில் விசாரணைகளை நடத்துவார்களா என்பது நம்பத்தக்கது அல்ல.

ஆணைக்குழுவில் எட்டு உறுப்பினர்களில் ஆறு பேர் முன்னாள் மூத்த அதிகாரிகள் ஆவர். இவர்களில் பலர் இலங்கை அரசுக்குச் சாதகமாக சர்வதேச அரங்குகளில் வாதாடியவர்கள்.

இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது பெறுமதியான முயற்சியாக இருப்பினும் கூட, அது சுதந்திரமாகவும் பக்கச்சார்பற்ற முறையிலும் செயற்படும் என்பதற்கான சமிக்ஞையைக் காணமுடியவில்லை. அதிலும் மிகக் குறிப்பாக அரசாங்கத்துக்கு எதிராகக் காத்திரமான, கனதியான, பெறுமதியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் பக்கச்சார்பின்மை இருக்காது என்று ஏற்றுக்கொள்வதற்கில்லை. (அ)

## ஐ.நாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர் நிதியம் போன்ற அமைப்புக்களின் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இங்கு நான்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இன்னும் பல உத்தியோகத்தர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர். இந்த அலுவலகத் தின் மூலம் மீள்குடியேற்ற நடவடிக்கை களுக்கு ஐ.நா. உதவவுள்ளது. அத்தோடு உணவு விநியோக திட்டத்தையும் கண் காணிக்கவுள்ளனர்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடுமையான யுத்தம் நடைபெற்றதால் கடந்த 2008 செப்ரெம்பரில் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்ட கிளிநொச்சி அலுவலகம் மூடப்பட்டது.

யுத்தத்தின்போது ஏழரை ஏக்கர் நிலத்தில் அமைந்திருந்த ஐ.நாவின் உலக உணவுத் திட்ட அலுவலம் வான் தாக்குதலால் தரைமட்டமானதாக உணவுத் திட்ட அதிகாரி எமிலா கசெலா ஜெனிவாவில் தெரிவித்தார். (அ)

## தேசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மு.சந்திரகுமார், யாழ்.நகர மேயர் திருமதி யோ.பற்குணராஜா, கல்வி அமைச்சின் செயலாளரின் பிரதிநிதியாக அமைச்சின் மொழிமற்றும் மானிடவியல் பிரிவு அதி காரியான தயாபண்டார ஆகியோர் ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றினர்.

தமிழ்த்தினப் போட்டியில் 9 மாகாணங்களின் பொறுப்பாக இருந்த அதிகாரிகள், கல்லூரி அதிபர்கள் மற்றும் கல்வித் திணைக்களங்களின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இருநாள் நிகழ்வுகளில் 50 போட்டிகள் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன.

அவற்றில் 40 போட்டிகள் நேற்று பூர்த்தியடைந்தன.

14 எழுத்தாக்கம்,4 இசை, 4 நடனம்,5 பேச்சு, 5 பாஓதல், 2 வாசிப்பு, ஒரு ஆக்கத்திறன், ஒரு இசையும்அசைவும் 4 சிங்களம் ஆகிய போட்டிகள் நேற்றுபூர்த்தியாகின.

குழுப்போட்டிகள் இன்று இடம்பெறவுள்ளன. நடனம், இசை 1,2, இலக்கிய நாடகம், நாட்டார்பாடல், முஸ்லிம் நிகழ்ச்சி, வில்லுப்பாட்டு, விவாதம், தமிழ் அறிவு வினாவிடை ஆகியன இன்று இடம் பெறவுள்ளன. வெற்றிபெறும் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப்போட்டிக்கான சகல ஏற்பாடு களையும் கல்வி அமைச்சின் தமிழ்ப்பிரிவு கல்விப் பணிப்பாளர் வி.எஸ்.இதயராசா மேற்கொண்டுள்ளார்.


### கார் விற்பனைக்கு

31 ஸ்ரீ XXXX தொடரிலக்க OXFORD car (ஒரியினல் டீசல்) உடன் விற்பனைக்குண்டு.

(பார்வையிடும் நேரம் : காலை 8-10 மணி வரை, மாலை 4-5 மணிவரை)

தொடர்பு :- 392/6, நாவலர் வீதி, (கைலாச பிள்ளையார் கோயில் முன்பாக) யாழ்ப்பாணம். T.P. : 0777946713

(வி/568244)

கல்வி அமைச்சால் நடத்தப்படும் அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியை முன்னிட்டு

ஸ்ரீ லங்கா புத்தக சாலையின் மாபெரும் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

இடம் : யாழ்.மத்திய கல்லூரி

நேரம் : இன்று காலை 8.30 முதல் 6.30 வரை

### SM CONSULTANT SERVICES

லண்டனில் உயர்கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு

அவரவர் தகைமைக்கு ஏற்றவாறு நேரடியாக கல்லூரியினரால் இலகுவான அனுமதி நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



GCE O/L English: C அல்லது IELTS இல் 4.5 புள்ளிகள் இருப்பின் விசா கிடைப்பது 100% உறுதி. மிகவும் குறுகிய காலத்தில் லண்டன் சென்று உங்கள் கல்வியைத் தொடரலாம்

அனுபவம் வாய்ந்த பிரபல விரிவுரையாளர்களால் இலாப நோக்கின்றி மிகக்குறைந்த கட்டணத்தில் IELTS வகுப்புக்கள் கொழும்பில் எம்மால் நடாத்தப்படுகிறது.

STUDY IN INDIA

B.E, B.Sc, B.C.A, BBM, B.Com, BA,LL.B, M.Sc, MBBS, MBA போன்ற கற்கைநெறிகளை, இந்தியாவில்(# University of Madras # SRM University # Manipal University இன்னும் இது போன்ற) பிரபலமான பல்கலைக்கழகங்களில்கற்பதற்கு உடனடியாக அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

STUDY IN UKRAINE

GCE O/L உடன் 7 வருடமும் GCE A/L உடன் 6 வருடமும் கற்கக்கூடிய Lungansk & Crimea State Medical University-(Ukraine)இல் இணைந்து சிறீலங்கா medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமாக வரவிருக்கின்ற September Intake இற்கு செல்வதற்குரிய ஒழுங்குகள் உடன் செய்து தரப்படும்.

எதிர்வரும் ஊம் திகதி பல்கலைக்கழக நிர்வாகிகள் கொழும்பு வர இருப்பதால் விரும்பின் நேரடியாக சந்திப்பதற்குரிய ஒழுங்குகள் செய்துதரப்படும்.

[illegible]

மேலதிகவிபரங்கட்கு:

SM CONSULTANT SERVICES

148, கோவில் வீதி யாழ்ப்பாணம்.

Tel: 0215673818, Mobile: 0774528818, Fax: 0212223818

Mail: mg1404_2009@yahoo.com

### கிறிஸ்தவம் & கிறிஸ்தவ நாகரிகம் — S.K. றூட் B.A (Hons)

| | | |
|---|---|---|
| A/L-2010 | செவ்.,புதன், வியா. | 7.30-8.30am |
| A/L-2011 | சனி, ஞாயி. | 11-12 am |
| A/L-2012 | சனி, ஞாயி. | 12-1 noon |

A/L-2012 ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். DMI Jaffna.

### சல்லிக்கற்கள் விற்பனைக்கு

தேவையான அளவு ½", ¾" 5 நூல் சல்லிக்கற்கள்

எஞ்சின்கள் விற்பனைக்கு

31 hp பிளக்சோன், 6 hpலிஸ்ரர் எஞ்சின்கள்

கடா ஆட்டுக்குட்டிகள் விற்பனைக்கு

4 மாதம் நிரம்பிய கடாக்குட்டிகள் விற்பனைக்கு

### நிலம் வாடகைக்கு

3 பேஸ் மின்சார வசதியுடன் பருத்தித்துறை வீதி. நீர்வேலிச் சந்தியில் மர அரிவுகாலை போன்ற தொழிற்சாலை அமைப்பதற்கு ஏற்ற நிலம் நீண்டகால குத்தகைக்கு உண்டு.

T.P. :- பகல் - 0774047912, இரவு - 0213210124

### காணிகள் விற்பனைக்கு

சரவணை தெங்கங்குளம் வடமேற் கரையில் அமைந்துள்ள 18 பரப்பு தோட்டமும் வயற் காணியும் விற்பனைக்குண்டு. கரம்பன் கிழக்கில் இராமசாமியின் மகளின் 11 நெற் பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு : 0771962041

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

நிறை கூடிய புறொயிலர், கல்பேட் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

1 kg இறைச்சி 480/= மட்டுமே

தொடர்பு : மல்ரி பாம் சென்ரர், 61, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

### கார் விற்பனைக்கு

11 Sri XXXX தொடர் இலக்கமுடைய மிகவும் நல்ல நிலையிலுள்ள மிற்சுபிசி லான்சர் (Shoe model) கார் ஒறிஜினல் வளங்களுடன் A/C உட்பட அனைத்தும்இயங்கும் நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0774528818 / 0215673818

148, கோவில் வீதி, (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.

### A/L-2010 விவசாய விஞ்ஞானம்

விசேட துரித மீட்டல் வினாவிடை

| | | |
|---|---|---|
| பிரிவு-I | சனி, ஞாயிறு | 6.30 am |
| பிரிவு-II | செவ், வியாழன் | 4.30 pm |

ஆசிரியர்: Y.சசிகுமார் DMI, Jaffna.

### அட்சயா அழகுக்கலை பயிற்சியகம்

(அரவிந் ஸ்ரூடியோவிற்கு அருகில்)

*பேசியல் [18 விதமானவை + மற்றும் பலவும்]

*மேக்கப் [7 விதமானவை, - இந்து, கிறிஸ்தவ, குஜராத், குப்நாஸ், சிங்கள, மடிசார் மணப்பெண் அலங்காரமும், 7 விதமான சேலை உடுத்தும் முறையும்]

*கெயர் ஸ்டைல், 30 விதமானவை *சாறி வேக் - 6 *வுளவுஸ் கட்டிங் - 6

*ஐசிங் -30 விதமானவை *தலைமுடி அயன்பண்ணுதல் *தலை முடி சுருட்டுதல்

★மேற்படி பயிற்சிகள் ஆரம்பம் ★பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

* றிச் கேக் ஒன்று 30 மட்டுமே!

அட்சயா

பதிவு இல: 16168

தொ.பே.: 0775387973

461, நாவலர் றோட், அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

### ஞானக்குழந்தை உதவி நிதியம்

வன்னிப்போரில் பெற்றோரை இழந்த சிறுவர்கள் தமது பாடசாலைக் கல்வியை இடைவிடாது தொடருவதற்கு உதவும் வகையில் இந்நிதியம் தாபிக்கப்படுகிறது. தெரிவுசெய்யப்படும் குழந்தைகளிற்கு தரம் 12 வரை மாதாந்தம் சிறு தொகை நிதி உதவி வழங்கப்படும்.

விண்ணப்ப நிபந்தனைகள்

1. பாடசாலை செல்லும் மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். [தரம் 1 முதல் 12 வரை]
2. 2008-2010 காலப்பகுதியில் பெற்றோரை [தாய்/தந்தை/இருவரும்] இழந்தோர் விண்ணப்பிக்கலாம்.
3. ஒரு குடும்பத்தில் அதிகபட்சம் இருவருக்கே உதவி வழங்கப்படும்.
4. வசதி குறைந்தோருக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களைப்பெற சுயமுகவரி இட்ட கடித உறையை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஞானக்குழந்தை நிதியம், புளூஹேவன், 70, நக்கா வீதி, யாழ்ப்பாணம்.

நிதிய அனுசரணை:- புளூஹேவன் கொட்டேல், டேடன்ஸ் ஆய்வுகூடம், யாழ்ப்பாணம்.

(99537)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.